REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI
සුඩර් ඔළි
வார மலர்

11/2/2006

# பேச்சுக்கான அழைப்பும் போருக்கான சமிக்ஞையும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தின் கட்டாயம்

கடந்த மாதம் 25 ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கும் நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்முக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து 33 மாத கால இடைவெளிக்குப் பின்னர் ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை வலுப்படுத்துவது சம்பந்தமான பேச்சுக்களை ஆரம்பிப்பதென தீர்மானிக்கப்பட்டது.

**அதிரடித் தாக்குதல்கள்**

'கடந்த நான்கு வருட காலமாக யுத்த நிறுத்த ஒப்பந்தம் தமிழீழ விடுதலைப் புலிகளாலும் படைத் தரப்பாலும் பல தடவைகள் மீறப்பட்டுள்ளது'- என யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு குற்றம் சாட்டியுள்ள பின்னணியில் இந்த ஒப்பந்தத்தை பலப்படுத்துவது பற்றிய பேச்சுவார்த்தைகளை இம் மாதம் நடத்துவதற்கு இருதரப்பும் இணங்கி இருந்தன.

கடந்த டிசம்பர் மாதம் முதல் இடம்பெற்ற படைத் தரப்பின் அப்பாவித் தமிழர்கள் மீதான வெறித்தனமான தாக்குதல்களும் அவற்றை முறியடிக்க இராணுவத்தினருக்கு எதிராக மக்கள் படை மேற்கொண்ட அதிரடித் தாக்குதல்களும் இந்த நாட்டில் யுத்த நிறுத்தம் ஒன்று அமுலில் உள்ளதா என்று கேள்வியை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு எழுப்பும் அளவுக்கு உக்கிரம் அடைந்திருந்தன.



இத் தாக்குதல்களும் அதனால் ஏற்பட்ட பேரிழப்புகளும் மக்கள் மனதில் யுத்த பீதியையும் தொடர்ந்து இடப்பெயர்வுகளையும் ஏற்படுத்தியபோது நிலைமை மோசமடையாமல் தடுப்பதற்கு உள்ளூர் மற்றும் சர்வதேச மட்டங்களில் பகீரத முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் பலன் தான் இம்மாதம் ஜெனிவாவில் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படும் பேச்சுவார்த்தைகள்.

**யுத்த நிறுத்த ஒப்பந்தம்**

ஜெனிவா பேச்சுவார்த்தை இடம்பெற்றால் அங்கு யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் 1.8 மற்றும் 2.1 சரத்துக்களை அரசாங்கம் அமுல் நடத்துவது பற்றி பேசி முடிவு காண்பதிலேயே விடுதலைப் புலிகள் கவனம் செலுத்துவார்கள்.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் 1.8 சரத்து 26.03.2002ஆம் திகதியிலிருந்து 30 நாட்களுக்கும் ஆயுதக் குழுக்களிடமிருந்து முற்றாக ஆயுதங்கள் களையப்பட்டு ஸ்ரீலங்கா இராணுவத்துக்குள் அக் குழுக்கள் உள்வாங்கப்பட வேண்டும் எனவும் வடக்குக் கிழக்கில் அவற்றின் நடமாட்டங்கள் பூரணமாக ஒழிக்கப்பட வேண்டும் என்றும் கூறுகிறது.

அதேநேரம் ஒப்பந்தத்தின் 2.1 சரத்து சர்வதேச சட்டங்களுக்கு அமைய பொது மக்களுக்கு எதிரான சித்திரவதைகள், ஆள்கடத்தல்கள், ஆத்திரமூட்டும் நடவடிக்கைகள் போன்ற மனித உரிமை மீறல்கள் நிறுத்தப்பட வேண்டும் என்று கூறுகின்றது.

ஆனால் யுத்த நிறுத்த ஒப்பந்தம் அமுலுக்கு வந்த பின்னரும் ஆயுதக் குழுக்கள் அல்லது ஒட்டுப் படைகளின் வன்முறைகள் மெல்ல மெல்ல விரிவடைந்து வந்ததுடன் 2005 டிசம்பர் மாதத்தில் அது தீவிரப் படுத்தப்பட்டது.

**பாலா கூறியவை**

அரச படைகள் மற்றும் ஒட்டுப் படைகளின் அடாவடித்தனங்கள் வடக்கு கிழக்கு பகுதிகளில் தலைவிரித்தாடிக் கொண்டிருந்த களநிலையில் தான் பிரபா - சொல்ஹெய்ம் சந்திப்பு வன்னியில் இடம்பெற்றது.

இந்த சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்களுடன் உரையாடிய மதியுரைஞர் பாலசிங்கம் ஒரு விடயத்தை தெளிவாகக் குறிப்பிட்டார்.

''நேரடிப் பேச்சை ஆரம்பிக்க முன்னர் தமிழ் மக்களின் வாழ்வில் இயல்பு நிலை தோற்றுவிக்கப்பட வேண்டும். மக்களுக்கு நிம்மதியான - அமைதியான வாழ்வை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இவ்வாறான ஒரு சூழ்நிலை பிறக்கும்போதுதான் ஒரு மேசையில் அமர்ந்து நாம் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க முடியும். அரச பயங்கரவாதச் செயல்கள் நிறுத்தப்பட்டு சமாதான சூழ்நிலைக்கு பொருத்தமான புறநிலையை உருவாக்குவது அரசாங்கத்தின் பொறுப்பு'' - என்று கூறியிருந்தார்.

•யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை பலப்படுத்தி செவ்வனே அதை அமுல் நடத்துவது பற்றிய பேச்சுக்களை முன்னெடுக்க ஒப்பந்தத்தின் எந்த எந்த சரத்துக்கள் மீறப்படக் கூடாது என தமிழீழ விடுதலைப் புலிகள் எதிர்பார்க்கிறார்களோ அதே சரத்துக்கள் தான் எரிக் - பிரபா பேச்சுவார்த்தைகளின் பின்னர் அரசுத் தரப்பால் அப்பட்டமாக மீறப்பட்டுள்ளன.

**கொலை - ஆள்கடத்தல்**

பேச்சுவார்த்தைக்கான புறச் சூழல் அவசியம் என்ற மதியுரைஞர் அறிவித்து வாய் மூடுவதற்குள் மட்டக்களப்பு வடமுனையில் விடுதலைப் புலிகள் மீது ஒட்டுப் படைகள் நடத்திய தாக்குதலில் மேஜர் கபிலன் என்ற போராளி கொல்லப்பட்டார்.

இதைத் தொடர்ந்து தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மட்டக்களப்பு காரியாலயத்தைச் சேர்ந்த பத்து பணியாளர்கள் ஒட்டுப் படைகளினால் கடத்திச் செல்லப்பட்டனர். கடத்தப்பட்டவர்களில் மூவர் இதுவரை விடுவிக்கப்பட்டபோதும் ஏனையோரின் கதி பற்றி எதுவுமே தெரியவில்லை. ஒட்டுப் படைகள் மற்றும் புலனாய்வுப் பிரிவின் இத்தகைய வெறித்தனமான செயற்பாடுகள் அவர்களை தனது பிடிக்குள் வைத்திருக்க முடியாது ஜனாதிபதி திண்டாடுவதையே எடுத்துக் காட்டுகின்றன. வடக்கு கிழக்குப் பகுதிகளில் இயல்பு நிலையைக் குழப்பும் வகையில் தாக்குதல்கள் நடத்தப்படக் கூடாதென்று ஜனாதிபதி மஹிந்த முப்படைத் தளபதிகளுக்கும் பொலிஸ்மா அதிபருக்கும் உத்தரவிட்டுள்ள போதும் தமிழர் தரப்புக்கு எதிரான வன்முறைகள் அங்கு குறைந்ததாக தெரியவில்லை.

தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்கள் கடத்தப்பட்டமையானது படைத்தரப்பின் புலனாய்வுப் பிரிவும் ஒட்டுப் படைகளும் நன்கு திட்டமிட்டு அரங்கேற்றிய சதி முயற்சி கொடுத்த வெற்றியே.

> யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை பலப்படுத்தி செவ்வனே அதை அமுல் நடத்துவது பற்றிய பேச்சுக்களை முன்னெடுக்க ஒப்பந்தத்தின் எந்த எந்த சரத்துக்கள் மீறப்படக்கூடாது என தமிழீழ விடுதலைப் புலிகள் எதிர்பார்க்கிறார்களோ அதே சரத்துக்கள்தான் எரிக் - பிரபா பேச்சுவார்த்தைகளின் பின்னர் அரசுத் தரப்பால் அப்பட்டமாக மீறப்பட்டுள்ளன.

**தமிழர் புனர்வாழ்வுக் கழகம்**

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தமிழர் தாயகத்தில் மேற்கொண்டுவரும் புனர்வாழ்வு மற்றும் புனரமைப்புத் திட்டங்கள் சர்வதேசத்தின் பாராட்டைப் பெற்றவை. சுனாமி அனர்த்தத்தின் பின்னர் இக் கழகம் மேற்கொண்டுவரும் அனர்த்த நிவாரணப் பணிகள் சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்று இருக்கின்றன. கழகத்தின் பணிப்பாளரை ஐ.நா செயலாளர் கோபி அனான், அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்டன் போன்றோர் சந்தித்தமை ஸ்ரீலங்கா அரசுக்கு எரிச்சலூட்டிய ஒரு விடயம். அத்துடன் பேரினவாதிகள் இந்தச் சந்திப்புகளுக்கெதிராக தமது கடும் கண்டனத்தையும் தெரிவித்திருந்தனர்.

தென்னிலங்கையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் புலிகளின் அமைப்பு என்ற பிரசாரம் நீண்டகாலம் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் கழகத்தின் நடவடிக்கைகளை முடக்குவதற்கும் ஸ்ரீலங்கா அரசுத் தரப்பில் அதீத முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த முயற்சிகளுக்கு சிகரம் வைத்தது போலவே கழகத்தின் பணியாளர்கள் கடத்தப்பட்டுள்ளனர்.

**ஏமாற்றுகிறது அரசாங்கம்**

ஜெனிவாவில் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது இணக்கத்தை தெரிவித்த பின்னர் இடம்பெற்ற இரண்டாவது பாரதூரமான சம்பவமாகவே இந்தக் கடத்தல் சம்பவம் கருதப்படுகிறது. இதை தொடர்ந்து ஜெனிவா பேச்சுவார்த்தைகள் இப்போது கேள்விக் குறியாகி உள்ளன.

இவ்வாறு இப் படுகொலை, கடத்தல் சம்பவங்கள் காரணமாக ஏமாற்றத்துள்ளாகியிருக்கும் விடுதலை புலிகளும் அவர்களின் பின்னால் அணிதிரண்டு நிற்கும் தமிழ்த்தேச மக்களும் தமது அடுத்த கட்ட நகர்வு என்ன என்பது பற்றி தீவிரமாகச் சிந்தித்துவரும் இவ்வேளையில்,

தமிழர் தாயகத்தில் சுற்றி வளைப்புகள், கைதுகள், சோதனை நடவடிக்கைகள் என இராணுவத்தினரின் யுத்த நிறுத்த மீறல்கள் தொடர்ந்த வண்ணம் உள்ளன. அத்துடன் யுத்தத்துக்கான முன்னேற்பாடுகளும் சூடு பிடித்துள்ளன. யாழ். மாவட்டம் வடமராட்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் இரண்டு அரசியல் அலுவலகங்கள் இராணுவத்தினரால் உடைக்கப்பட்டு சோதனைக் குட்படுத்தப் பட்டிருக்கின்றன.

இராணுவத்தினரின் இத்தகைய அத்துமீறல்களால் விடுதலைப் புலிகள் விசனமடைந்துள்ள இவ்வேளையில் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாட்டில் பேசிய ஸ்ரீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் கருத்து வெளியிட்டுள்ளார்.

* இச் சம்பவம் இடம்பெற்று 24 மணித்தியாலயங்கள் கழிந்த பின்னரே கண்காணிப்புக் குழுவுக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும்-

* பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்படவே இல்லை என்றும்-

* தவறாக வழிநடத்துவதன் மூலம் நாட்டுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் முயற்சியாக இது இருக்கலாம் என்றும்-

கூறியிருக்கும் அவர் மர்மங்கள் இதில் புதைந்து கிடக்கின்றன என்றும் தொடர்ந்து கூறியிருக்கிறார்.

மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் ஒட்டுப் படைகளினால் கொலை செய்யப்பட்டபோது அரசாங்கமும் அதன் பேரினவாத நேச அணியினரும் அதற்கான பழியை விடுதலைப் புலிகள் மீது போட முயற்சித்ததை தமிழ் மக்கள் இலகுவில் மறந்து விட மாட்டார்கள். அதைப் போன்றே வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர இக் கடத்தல் பற்றி தெரிவித்துள்ள கருத்துகளிலும் தொக்கி நிற்கும் பொருள் என்ன என்பதை புரிந்து கொள்ளாமல் இருப்பதற்கு தமிழ்த் தலைமையும் மக்களும் முட்டாள்கள் அல்லர்.

கடத்தப்பட்டோரைக் கண்டு பிடிக்கும் புலனாய்வு நடவடிக்கைகளில் குற்றப் புலனாய்வுப் பிரிவின் விசேட அணியினர் ஈடுபட்டுள்ள போதும் குற்றவாளிகள் யார் என்ற துப்பு ஒரு போதும் துலக்கப்பட மாட்டாது என்பது உள்ளங்கை நெல்லிக் கனி.

பேரினவாத அரசாங்கங்கள் சிறுபான்மை தமிழ் மக்கள் மீது மேற்கொண்ட ஒடுக்கு முறைக்கெதிராக குரல் கொடுத்த மூத்த அரசியல்வாதிகளான குமார் பொன்னம்பலம், ஜோசப் பரராஜசிங்கம் மட்டுமன்றிதமது பேனா முனையை அரசின் அக்கிரமங்களுக்கு எதிராகத் திருப்பிய சிவராம் போன்ற தலை சிறந்த பத்திரிகையாளர்கள் பலரும் திட்டமிட்டு தீர்த்துக் கட்டப்பட்டனர்.

இக் கொலைகள் சம்பந்தமாக புலன் விசாரணை, தேடுதல், விளக்க மறியல்- என்ற வார்த்தை ஜாலங்கள் ஊடாக தமிழ் மக்களையும் சர்வதேசத்தையும் அரசு சாந்தப்படுத்த முயற்சித்ததே அன்றி குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்த அது எதுவுமே செய்யவில்லை. இப்போது இக் கொலைகள் பற்றிய விசாரணை கிடப்பில் போடப்பட்டு ஆறிய கஞ்சி பழங் கஞ்சி என்ற நிலைக்கு வந்து விட்டது. அதுபோலவே தமிழர் புனர்வாழ்வு கழக பணியாளர்கள் கடத்தப்பட்டமை பற்றிய புலனாய்வும், விசாரணைகளும் பத்தோடு பதினொன்று என்பது போல பழங் கதையாக இருக்கப் போகிறதேயன்றி வேறு எதுவும் நடக்கப் போவதில்லை.

**விடுதலைப் புலிகள் நிதானம்**

எனவேதான் ஜெனிவா பேச்சுக்களில் ஈடுபடுவதா இல்லையா என்ற விடயத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் நிதானப் போக்கைக் கடைப்பிடித்து வருகின்றதோடு வெலிகந்தை கடத்தல் ஜெனிவா சந்திப்பை பாதிக்கும் என்றும் அறிவித்துள்ளனர்.

பேச்சுக்கு உத்தேசமாக பெப்ரவரி 15, 16 அல்லது பெப்ரவரி 21, 22 அல்லது பெப்ரவரி 22, 23 ஆகிய திகதிகள் அரசாங்கத் தரப்பினால் பிரேரிக்கப்பட்டுள்ள போதும் விடுதலைப் புலிகள் இத் திகதிகளில் எதையுமே இதுவரை தேர்ந்தெடுக்கவில்லை.

இது தொடர்பாக மதியுரைஞரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பேச்சுக் குழுவுக்கும் தலைமை தாங்குபவருமான அன்ரன் பாலசிங்கத்துடன் நோர்வே அனுசரணையாளர்கள் தினமும் தொடர்பு கொண்டு வருகின்றனர். ஆனால் பேச்சுக்கான நாள் இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை என்று இணையதள செய்தி ஒன்று கூறுகிறது.

பேச்சுக்கான இயல்புநிலை உருவாக வேண்டும் என விடுதலைப் புலிகள் தெரிவித்திருந்தும் நிலைமை அப்படியே தான் இருக்கிறது எனவும் அந்தச் செய்தி மேலும் தெரிவிக்கிறது.

**புதிய செய்தி**

இவ்வாறு மக்களின் அமைதியான வாழ்க்கை அலங்கோலப்படும் அளவுக்கு புறச்சூழல் பாதிக்கப்பட்டதற்கு அடிப்படைக் காரணம் யுத்த நிறுத்த ஒப்பந்தம், ஒப்பந்த விதிகளுக்கு அமைய சீராக அமுலாக்கப்படாது விடப்பட்டதுதான்.



ஒப்பந்தம் பற்றிய ஜெனிவா பேச்சுவார்த்தைகள் கைநழுவிப் போகுமானால் அல்லது பேச்சுக்களின் போது இருதரப்புக்கும் இடையில் சுமுகமான தீர்வு ஒன்று எட்டப்படாது விட்டால் மிகப் பெரிய நெருக்கடி ஒன்று உருவாகுவதற்கான வாய்ப்புகளே விரிவடையும். இது நிலைமையை மிகவும் மோசமாக்குவதுடன் எதிர்காலத்தில் சமாதானப் பேச்சுக்கள் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்களையும் அழித்து விடும்.

**தேசியப் பிரச்சினையை அரசாங்கம் தீர்க்குமா?**

இப்போது தென்னிலங்கையோ அல்லது அரசோ சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினையை தீர்த்து வைப்பதற்கான வாய்ப்புகள் மிகவும் அருகியே காணப்படுகின்றன.

ஏனெனில் ஸ்ரீலங்கா அரசு பேரினவாத கடும் போக்கு சக்திகள் கட்டிய மதிலுக்குள்ளேயே இருப்பதுடன் அது தனது இராணுவத்தின் மனவலிமையை குழப்பத்துக்குள்ளாக்கும் நடவடிக்கை எதையும் எடுக்கப் போவதில்லை என்பதும் எமக்கு தெரிந்த விடயமே.

ஒட்டுப் படைகளை நிராயுத பாணிகளாக்கவோ அல்லது இராணுவத்தை மறுசீரமைக்கவோ திராணியற்ற நிலையிலேயே ஜனாதிபதி மஹிந்த இருக்கிறார்.

இது இவ்வாறு இருக்க விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் பாலகுமாரன் ''சிங்கள இராணுவத்தை யார் கட்டுப்படுத்தப் போகிறார்கள்? யாருடைய கட்டுப்பாட்டிலே சிங்கள இராணுவம் இயங்குகின்றது? என்ற புதிய செய்தி உலகத்துக்குத் தெரியப் போகிறது'' என்று சொல்லியிருக்கிறார்.

நியாயமான தீர்வை எதிர்பார்த்து ஏங்கி நிற்கும் தமிழ்த் தேச மக்கள் பொறுத்தது போதும் பொங்கி எழு என இனி பொங்கி எழவும் கூடும். இந்த எழுச்சி காலத்தின் கட்டாயமாக அமையப் போகிறது. இது மஹிந்தவுக்கு அதிர்ச்சியூட்டும் செய்தியாகவே இருக்கும்.

சுபாஷ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சுக்கான அழைப்பும் போருக்கான சமிக்ஞையும்





இலங்கையின் இன்றைய கள யாதார்த்தத்தில் சிங்கள அரசு சமாதானத்துக்காகவா அல்லது யுத்தத்துக்காகவா முன்னுரிமை கொடுத்துச் செயற்படுகின்றது என்பதை வெட்ட வெளிச்சமாக படம் போட்டுக் காட்டிவிட்டது இலங்கையின் 58 ஆவது சுதந்திர தின நிகழ்வு.

இலங்கையின் 5 ஆவது ஜனாதிபதியாக பொறுப்பேற்றுக்கொண்ட மஹிந்த ராஜபக்ஷ சமாதானத்துக்கான அழைப்புகளை விடுத்துக் கொண்டிருந்தாலும் உண்மையில் யுத்தத் தயாரிப்புகளும், அதற்கான முனைப்புகளும் தீவிரமாக இடம்பெற்று வருகின்றன.

காலி முகத்திடலில் இடம்பெற்ற சுதந்திர தின நிகழ்வில் உரையாற்றிய மஹிந்த ராஜபக்ஷ, ''இன்னும் சில தினங்களில் எமது அரசு புலிகளுடன் பேச்சை ஆரம்பிக்கவுள்ளது. ஒளிவு மறைவு இன்றி அது இடம்பெறும். நாம் தீர்வு எதனையும் பலாத்காரமாகத் திணிப்பதற்கு முற்படமாட்டோம். அதே போன்று எம்மை அச்சுறுத்தி அடிபணிய வைக்க எவராலும் முடியாது. யுத்தத்தின் போது கூடுதலாகப் பெருக்கெடுத்து ஓடுகின்ற இரத்த ஆறு தடுக்கப்பட வேண்டுமானால் சமாதானத்துக்காக கூடுதலான வியர்வை சிந்த வேண்டும்'' எனவும் அவர் தெரிவித்தார்.

வாயளவில் மட்டுமான சமாதான அழைப்புகள் செயலளவில் பெருமளவில் உருப்பெற்றதாகத் தெரியவில்லை.

எரிக் சொல்ஹெய்ம் இரு தரப்பினரையும் சந்தித்த பின்னர் நடந்த சில சம்பவங்களைப் பார்க்க வேண்டும்.

புலிகளின் பகுதிக்குள் ஊருடுவி நடத்தப்பட்ட தாக்குதல்களில் முக்கிய போராளி மட்டக்களப்பில் சாவு.

வெலிகந்தைப் பகுதியில் அடுத்தடுத்து தமிழர் புனர்வாழ்வுக் கழக ஊழியர்கள் கடத்தப்பட்டனர்.

கடத்தப்பட்டு விடுவிக்கப்பட்ட இரு பணியாளர்களிடம் பொலிஸார் மிரட்டி வாக்குமூலம் பெற முயன்றுள்ளனர்.

அம்பாறையில் ஹர்த்தாலில் ஈடுபட்ட பொதுமக்கள் மீது படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியமை.

குடாநாட்டில் இராணுவ நெருக்குவாரங்கள் அதிகரித்துள்ளமை. சுற்றி வளைப்புகள், தேடுதல்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றமை.

இவை சமாதானத்தின் மீது அரசுக்கிருக்கும் பற்றுறுதி குறித்து கேள்வி எழுப்புகின்றது.

இவ்வாறு இராணுவ நெருக்குவாரங்களை அரசு கட்டவிழ்த்து விட்டுள்ளது. இராணுவ முனைப்பில் காட்டும் தீவிரம் சமாதான முயற்சிகள் சிறிதளவேனும் இல்லை என்பது தெளிவாகிறது.

இந்த நிலையில்தான் சுதந்திர தின நிகழ்வில் தமது இராணுவ வல்லமையை வெளிக்காட்டும் வகையில் என்றுமில்லாதவாறு படைக்கலங்களின் அணிவகுப்பும், இராணுவ அணிகளின் அணிவகுப்பும் இடம்பெற்றுள்ளன.

இன்னொரு போருக்கு அழைப்பு விடுப்பது போன்றே இது அமைந்திருந்தது. தமது இராணுவ வலுவை வெளிப்படுத்தும் வகையில் அது அமைந்திருந்தது.

வழமைக்கு மாறாக இந்த முறை கூடுதல் படைக்கல - இராணுவ அணிவகுப்புகள் நிகழ்வை நிரப்பி நின்றன என அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

2000 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் ஓயாத அலைகள் படைநடவடிக்கை மூலம் யாழ். நகரின் எல்லை வரை முன்னேறி வந்த சமயம் அன்றைய சந்திரிக்கா அரசு அவசர அவசரமாக பாகிஸ்தான் மற்றும் சீனாவிடம் இருந்து பல்குழல் எறிகணை செலுத்திகளை கொள்வனவு செய்திருந்தது. அண்மைய சுதந்திரதின அணிவகுப்பில் அவையும் அணி வகுத்து சென்றமை தென்னிலங்கை போர்ப்பிரியர்கள் மத்தியில் புதிய உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது எனக் கூறப்படுகிறது.

இது தவிர விமானப் படையினரின் எம்.ஐ.24 ரக தாக்குதல் ஹெலிக்கொப்டர்கள், இஸ்ரேல் தயாரிப்பான கிபிர் குண்டு வீச்சு விமானங்கள் என்பவற்றுடன் கடற்பரப்பில் கடற்படையினரின் படகுகளின் அணிவகுப்பும் இடம்பெற்றது.

இவை தவிர ரி-55 ரக டாங்கிகள், கவச வாகனங்கள் என்பன அதிக எண்ணிக்கையில் இந்த அணிவகுப்பில் சேர்க்கப்பட்டிருந்தன. மொத்தத்தில் இராணுவத்தில் சுடும் திறனை வெளிப்படுத்தும் கண்காட்சியாக இது அமைந்திருந்தது என சர்வதேச செய்திச் சேவையொன்று தெரிவித்தது.

அணிவகுப்பில் இடம்பெற்ற இராணுவ சாதனங்கள் சுதந்திர தினத்துக்கு சில நாட்களுக்கு முன்னதாகவே காலிமுகத்திடலில் தரித்து நின்றமையால் அந்தப் பகுதியில் தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. முப்படைகளினதும் வலுவை வெளிப்படுத்தும் அணிவகுப்பை ஜனாதிபதி மஹிந்த ஏற்றுக் கொண்டார். இவை பல கேள்விகளை எழுப்பியுள்ளது.

சமாதான காலத்தில் தனது போர் வலுவை சிங்கள தேசத்துக்குக் காட்டி பெருமைப்படவும், தமிழர் தரப்புக்குக் காட்டி அச்சமூட்டவும் அரசு விரும்பியிருக்கக்கூடும் என்றே தோன்றுகின்றது. இந்த அணிவகுப்பில் இடம்பெற்றவையில் புதியவை எவையுமில்லை. கடந்த போர்க்காலத்தில் பயன்படுத்தப்பட்டவையே ஆகும்.

இது குறித்து தமிழர் தரப்பு கிலி கொள்ள ஏதுமில்லை என்பது மஹிந்தவுக்கு தெரியாமல் போயிருக்கலாம்.

கடந்த போர்க் காலத்தில் இராணுவ டாங்கிகள் பல புலிகளால் யுத்த களத்தில் அழிக்கப்பட்டன. சில கைப்பற்றப்பட்டன. ஆட்லறிகளும் இவ்வாறே புலிகளால் அழிக்கப்பட்டு, புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

புலிகளிடமும் பலம் வாய்ந்த ஆட்லறி படைப்பிரிவு இயங்கி வருகிறது. அதேபோல் கவச வாகனங்களைத் தாக்கி அழிக்கும் கவச எதிர்ப்புப் படையணிகளும் பலமாக உருவாக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

சமாதான காலத்தில் புலிகளின் படையியல் விரிவாக்கம் குறித்த தெளிவான தகவல்கள் இல்லாமல் அரசு தடுமாறுகிறது. புலிகளால் பல படையணிகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. நவீன ஆயுதங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன என அவதானிகள் கூறுகின்றனர்.

தவிர புதியதொரு யுத்தகளத்தை எதிர்பார்த்து புலிகள் இருந்தனர். எனினும் எரிக் சொல்ஹெய்மின் விஜயத்துடன் பெரும் யுத்தம் ஒன்று தள்ளிப் போயுள்ளது. இந்த நிலையில் பேச்சுக்கள் தொடருமா என்பதும் தொடர்ந்தாலும் பலன் தருமா என்பதும் கேள்விக்குறியே.

இலங்கை அரசாங்கத்தின் சமாதான அழைப்பும் சம நேரத்தில் போர்த் தயாரிப்பு வேலைகளும் இடம்பெற்று வருகின்றமை மிகுந்த சந்தேகத்துக்குரியவையாக மாற்றியுள்ளன.

22, 23 ஆம் திகதிகளில் இடம்பெறப்போகும் பேச்சுக்கள் யுத்த நிறுத்தத்தை பூரணமாக அமுல்படுத்துவது குறித்ததாகவே இருக்கும். இந்த நிலையில் சமாதானக் கதவுகள் அகலத் திறக்கப்படாத வரை போருக்கான கதவுகள் மூடப்படபோவதில்லை.

-ஷோபா-

## நிமிடக் கதை

## இன்னொரு காதல்

''நில்லுங்க!'' என்றாள், நீலா.

நிர்மல் நின்றான்.

அவள், அவனது கண்களை ஊடுருவினாள். அவன் பார்வையைத் திருப்பிக் கொண்டான். படபடப்பு அடங்கவில்லை.

''உங்களுக்கு என்ன... தியாகி என்று நினைப்பா?'' அவள் குடைந்தாள்.

அவள் கையில் அந்தக் கடிதம். காதல் கடிதம்! அவனுக்கு வியர்த்துக் கொட்டியது.

நீலா, நிர்மல் இருவரும் ஒரே அலுவலகத்தில் பணிபுரிகின்றனர். நீலா அழகாக இருப்பாள். பட்டுப்போல பளபளமேனி. பால்கோவா போல ஒயிலாக நடந்து போகும் அழகே தனி.

அதில் கிறங்கிப்போன வருண் கண்டபடி காதல் கடிதம் எழுதி, அவளது கைப்பையுள் திணித்தான்.

பிரச்சினை பெரிதாவதற்குள் ''நான் அதை வைத்தேன்'' என நண்பனுக்காக நிர்மல் ஒப்புக் கொண்டான். வருணும் அவனும் நெருங்கிய நண்பர்கள்.

மேலாளரிடம் புகார் செய்வதாக இருந்த நீலா, ''நான்தான் வைத்தேன்!'' என்று நிர்மல் ஒப்புக் கொண்டதும், அவனைத் தனியே அழைத்து வந்தாள்.

''சொல்லுங்க! உங்களுக்கு தியாகி என்று நினைப்பா? உங்க நண்பர் பார்க்கிறது, பேசுறது, எழுதுறது எல்லாமே தப்புத்தப்பாத்தான். இந்தக் கடிதத்தை வருண் எழுதி என் கைப்பைக்குள் வைத்தது எனக்குத் தெரியும். தவறு யார் செய்தாலும், தண்டனையை ஏற்றுத்தான் தீரணும்..''.

அவள், அவனை ஊடுருவ...

''நீலா... அது... நட்புக்காக! அவனை... இல்லை... என்னை...'' எனக் குழறினான்.

''பழியை நீங்க ஏற்றுக்கொண்டாலும், தவறு தவறுதானே? தண்டனையை நீங்க எற்றுத்தான் தீரணும்.''

''எ...ன்...ன தண்டனை, நீலா?'' நிர்மல் அவளை நிமிர்ந்து நோக்கினான்.

''ஐ...ல...வ்யூ...'' என்றாள், நீலா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மனம் என்பது உண்மையில் ஒரு வெளி தான். மனதுக்குள் இருக்கும் நுண்ணிய உணர்வுகளை முழுவதுமாக யாரால் வெளிக் கொணர முடியும். பொத்திப் பொத்தி வைத்திருப்பது என்பது ஒரு மகா இரகசிய பெரும் பாடு.

மனதுக்குள் இருக்கும் நுண்ணிய இரகசியங்களை ஒவ்வொரு மனமும் சொல்லத் துவங்கினால் எப்படி இருக்கும்?

அம்மாவிடம் சொல்ல முடியாதவை, காதலியிடம் சொல்ல முடியாதவை , மனைவியிடம் சொல்ல முடியாதவை, நண்பனிடம் சொல்ல முடியாதவை என்று எத்தனை மெல்லிய இரகசியங்கள் இருக்கின்றன.

நண்பனிடம் பகிர்ந்து கொள்வதை மனைவியிடம் பகிர்ந்து கொள்ள முடியாது. குடும்பம் சிதறிவிடும்.

நண்பர்களுக்கும் மனைவிக்குமிடையே இருக்கும் உறவின் இழை கூட எவ்வளவு வித்தியாசமானது.

உடலுக்கு ஒரு நோய் என்றவுடன் பதறிப்போய் விடுகிறோம்.

ஆனால், மனதுக்கான நோய்பற்றி எவருமே பதகளப்படுவதில்லை. ஆனால், மனதுக்குள்ளேதான் ஆயிரத்தெட்டு நோய்கள் இருக்கின்றன.

இரகசியங்களாகவும், கவலைகளாகவும், பதகளப்புளாகவும், ஏக்கங்களாகவும் சொல்ல முடியாத நோய்க்கூறுகளை மனது ஒருமித்து அடக்கிக் கொண்டிருக்கிறது.

அண்மையில் ஒரு தொலைக்காட்சி செவ்விக்காக இங்கு லண்டனில் வசிக்கும் கவுன்ஸிலர் ஜோசப்பை சந்தித்தேன்.

'மனம் எப்பொழுதும் ஆறுதலை விரும்புகிறது மனம் எப்பொழுதும் பங்கு போட விரும்புகிறது' -என்றார்.

அடியில் புதைந்து கிடக்கும் எல்லாவற்றையும் வெளியில் கொணர்ந்து மனதை இலகுபடுத்த வேண்டும். ஆனால் அந்த உறுதி வாலாயம் எப்பொருளுக்கும் வாய்ப்பதில்லை.

சின்னச்சின்ன ரென்ஸன்களினால் உறுதி குலைந்து சிதைவடைந்து போகும் எத்தனையோ பேரைக் காண்கிறோம்.

ஒரு பரீட்சைப் பெறுபேறைக்கூட தோல்வியாகக் காண முடியாமல் செத்துப்போகிறார்கள்.

மனம் என்பது என்ன? அது மூளை தான். மூளையின் ஞாபகப் பரப்பில் புதைந்திருப்பவையை அழிக்க முடியுமாம். கவலைகளை, துக்கங்களை, நீங்காத சோகங்களை எல்லாம் மனோதத்துவ வாதிகள் சொல்கிறார்கள்.

மனோதத்துவத்தில் படித்த பேராசிரியர் பெரியார் தாசனை ஒரு முறை சந்தித்தபோது சொன்னார்,

"உங்கள் மூளையில் இருக்கும் தேவையில்லாத விடயங்களை ஒரு மயக்கமாக்குவதன் மூலம் அழித்துவிடலாம் செய்யவா?"

"எனக்கு பெரிதாக ஒன்றும் தாக்கமுடையதுகள் இல்லை. அழிக்கும்போது வேறு ஏதாவது அழிந்துவிட்டால்! ஆளை விடுங்கள்" என்று சொன்னேன்.

அண்மையில் கவுன்சிலர் ஜோசப் இந்தியாவுக்கும், இலங்கைக்கும் போய் விட்டு லண்டன் வந்திருந்தார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் மனநிலைதான் மிகவும் பாதிக்கப் பட்டிருப்பதாகச் சொன்னார்.

உறவுகளை இழந்த சோகம், உடைமைகளை இழந்த நிலை, தங்கள் குழந்தைகளை கைகளில் இருந்தே அலைகள் பறித்தது என்று மூளை முழுக்க பதிந்துபோய் இருக்கும் காயங்களோடு மக்கள் கடற்கரை எங்கும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

அவர்களுக்கு 'கவுண்சிலிங்' என்னும் மன அற்றுப்படுத்தல் மிக முக்கியமாகத் தேவை என்கிறார்.

ஒரு வருடம் கழிந்து போயும் கடலையே பார்த்து கும்பிட்டுக்கொண்டும், திட்டிக் கொண்டும் இருக்கும் ஒருவரை நாவலடி கிராமத்தில் கண்டிருக்கிறோம். இப்போதும் அவர் அப்படித்தான் இருக்கிறார்.

சரியான ஆற்றுப்படுத்தல் மிக முக்கியம். அல்லது போகப் போக மூளை அதையே அசைபோட்டு, அசைபோட்டு பைத்தியமாக்கிவிடும்.


பெரியார் தாசன்சொன்னார் என்னிடம் ஒவ்வொருவருக்குள்ளும் ஒருவகைப் பைத்தியம் இருக்கிறது, அதன் அளவுதான் குறைவு; கூடினால் முற்றிவிடும்.

பாதையில் தனிய நடக்கும் போது பேசிக் கொண்டே நடக்கிறோம் அது, அல்லது பாட்டுப் பாடுகிறோம் அது, கைகளால் சைகை செய்கிறோம் அது, பாத்ருமில் கதைக்கிறோம், பாடுகிறோம் அது, ஏதோ நினைத்துச் சிரிக்கிறோம் அது, தனிய என்னவெல்லாமோ செய்கிறோம் அது எல்லாமே சின்ன சின்னப் பைத்தியகாரத் தனங்கள் தான் முற்றாமல் இருக்கும் வரை.

முதலாம் வகுப்புக்கு என்னை கூட்டிப் போன குமாரசாமி வாத்தியாரை நினைவிருக்கிறது எனக்கு. உங்களுக்கு...

* * *

பாலியல் உணர்வுகளை தூண்டக் கூடிய புகைப்படங்கள், வீடியோப் படங்கள், தொலைக்காட்சி காட்சிகள், புத்தகங்கள், மகசின்கள், பேப்பர்கள் எதுவுமே அரபு



எமிரேட்சுக்குள் அனுமதிக்கப் படுவதில்லை.

என்ன இந்தக்காலத்திலா? என்ற கேள்விகளை உதறிவிட்டு அதுதான் சட்டம். அங்கு ஒரு பத்திரிகை போவதென்றால் முழுக்க சென்சார் கொமிட்டிக்கு போய்த் தான் வெளியில் போகும்.

பெண்களின் ஆடைக்குறைப்பு போட்டோக்கள் பேப்பர்களில் இருந்தால் அவற்றுக்கு கறுப்பு மை பூசித்தான் விநியோகம் நடக்கும்.

தபால்கள் பொதிகள் எல்லாம் மிகக் கவனமாக 'ஸ்கான்' செய்தே கொடுப்பார்கள்.

இவ்வளவு கவனமாக சட்டம் இறுகிக் கிடக்கும் அரபு எமிரேட்சுக்குள்ளும் பாலியல் தொடர்பான சமாச்சாரங்கள் நுழைந்து விடுகின்றன என்று கஸ்டம்ஸ் அதிகாரிகளே தெரிவிக்கின்றனர்.

பிடிபட்டால் சட்டம் கழுத்தை எடுத்து விடும்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள்ளும் மிகவும் கவனமாக பாலியல் உணர்வை தூண்டக்கூடிய எதையுமே விடுகிறார்களில்லை.

கண்ணுக்குள் எண்ணை ஊற்றிப் பார்துக் கொண்டிருக்கிறார்கள்.

அதனை பார்ப்பதற்கென்றே தனிப்பிரிவு மிகவும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறது.

இவ்வளவையும் தாண்டி யாழ்ப்பாண நகரப் பகுதியில் வீடியோப் படங்கள், மகசின்கள், ஏன் பாலியல் தொழிலே நடைபெறுவதாக கவிஞர் புதுவை இரத்தினதுரை ஒரு முறை என்னோடு பேசிக் கொண்டிருக்கும்போது சொல்லிக் கவலைப்பட்டார்.

அக்குறணையிலும் பள்ளிவாசல் ஒன்றியம் பேப்பர் கடைகளுக்கு கண்டிப்பான உத்தரவு போட்டிருக்கிறது என்று கேள்விப் பட்டேன்.

பாலியல் இச்சைகளை தூண்டக்கூடிய மகசின்கள், பேப்பர்கள் போன்றவற்றை விற்கக் கூடாது என்று.

அரைகுறை ஆடை பெண்களின் படமுள்ள சஞ்சிகைகள், பேப்பர்கள் விற்கக் கூடாது என்றிருக்கிறது பள்ளிவாசல் ஒன்றியம். அது கடைப்பிடிக்கப்படுவதாகவும் கேள்வி.

சினிமாப் பக்கங்களை எடுத்து விட்டுத் தான் பத்திரிகைகள் விற்கப்படுகிறதாம். உண்மையா?

* * *

மேக்கப் இல்லாமலே அழகாக இருக்கும் பெண்களை எமது கிராமங்களில் காணலாம். தண்ணி ஊற்றி முகத்தைக் கழுவி விட்டாலே தேவதைகள் அவர்கள். பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் போல் இருக்கும் ஒரேயடியாக.

நகர்ப்புறப் பெண்களுக்கு மத்தியில் 'மேக்கப்' என்பது வாழ்வோடு ஒன்றிப் போய் விட்ட ஒன்று. சிலரை ஆகா இவ்வளவு அழகாக இருக்கிறதே இந்தப் பெண் என்று வியந்து விட்டு முகப்பூச்சு கலைத்த பின்பு இதுவா என்று எத்தனை முகங்களை கண்டிருக்கிறோம்.

இங்கு லண்டனில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் மேக்கப் நிலையங்கள் கொடி கட்டிப் பறக்கின்றன. லாபம் கொழிக்கும் ஒரு தொழில் அது தான். முகத்துக்கு பேஸ்ட் பூசுவது, தோலை நிறம் மாற்றுவது என்று பல தினுசுகள்.

அண்மையில் எனது நண்பனின் மனைவி ஒருவர் மேக்கப்பில் பைத்தியம். நன்றாகத் தான் இருக்கிறாய் என்றால் ஏற்றுக் கொள்ளமாட்டார். கிழமைக்கு இரண்டு முறை மேக்கப் நிலையம், அழகு நிலையம் என்று போவார்.



கடந்த வாரம் போய் ஏதோ ஒன்றை முகத்தில் பூச முகம் பொரிந்து போய்விட்டது.

ஊன், உறக்கம் இல்லாமல் குழந்தை, கணவனை பார்க்காமல் அழுது கொண்டிருக்கிறாள் அந்தத்தாய்.

இங்கு லண்டனில் மேக்கப் நிலையத்தின்மீது வழக்குபோட்டு காசு வாங்கலாம். ஆனால், பொரிந்து போன முகத்தை சீர் செய்ய முடியுமா? மன உழைச்சல் வேறு. எத்தனை பிரச்சினைகள்.

இங்கு தொலைக்காட்சியில் அண்மையில் ஒரு 'டொக்கியூமன்றி' போட்டார்கள் மேக்கப்பால் சிதைந்து போன முகங்கள். மார்பக அறுவை சிகிச்சையால் சீழ் பிடித்துப்போய் நீக்கப்பட்ட பெண்களின் மார்பகங்கள் என்று. பார்க்கும் போது மனம் தாங்கவில்லை. இயற்கையை மாற்றும் போது இரசாயனங்கள் மனிதரை ஏமாற்றிவிடும். ஏன் உந்த வினை?

* * *

கடந்த முப்பது வாரங்களாக தொடர்ந்து 'சுவடுகள்' மூலமாக 'சுடர் ஒளி வாசகர்களை சந்தித்தது பெருமையாக இருக்கிறது.

'சுடர் ஒளி' யின் வாரப் பத்திரிகை ஆசிரியர் அன்புக்குரியவர், என்னை விடாது எழுதும்படி வாரா வாரம் TEXT, தொலைபேசி என்று கேட்டுக் கொண்டே இருப்பார்.

இங்கு லண்டன் வந்ததன் பின்பு வேலைப் பளு தலையை அழுத்துகிறது. எத்தனையோ வேலைகள் புதிது புதிதாக வந்து; இருந்து எழுதும் நேரத்தை தர மறுக்கிறது.

டொக்கியூமன்றி, போட்டி நிகழ்ச்சிகள், செய்தி வாசிப்பது என்று எனது தொழில்சார் தொலைக் காட்சி நிகழ்ச்சிகள் என்னை வேறு எதுவும் செய்ய அனுமதிக்குதில்லை. எனவே, 'சுவடுகள்' தொடரை இந்தவாரத்தோடு இப்போதைக்கு நிறுத்துகிறேன்.

'சுவடுகள்' நிறுத்தக் கூடியது ஒன்றல்ல, பதிந்து கொண்டே இருக்கும்.

சிறிது ஓய்வுக்குப் பின்பு வேறு ஒரு தலைப்பில் எழுதுவோம் என்றிருக்கிறேன். இவ்வளவு காலமும் ஆர்வமாய் இருந்த உங்களுக்கு நன்றியறிதலுடன் இப்போதைக்கு 'சுடர்ஒளி'க்கும் அன்பைக் கூறி விடை பெறுகிறேன். மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

* * * * * * * * * * * * * * * *

# வினோதமான விவாகரத்து வழக்குகள்!

சாதாரண மிகவும் அற்ப காரணங்களுக்காக இப்போதெல்லாம் இளைய தலைமுறையினர் கோர்ட்டுக்கு வந்து விடுகிறார்கள். சகிப்புத் தன்மை, புரிந்து கொள்ளாமை, அனுசரணையின்மை, ஆணவம், பலருடன் உடலுறவு போன்றவைகளால் தங்கள் வாழ்வையே நாசமாக்கிக் கொள்ளும் ஜோடிகள் கணிசமாக அதிகரித்து வருவது கவலை தருகிறது.

இது தவிர, வினோதமான காரணங்களுக்காக சிலர் விவாகரத்துப் பெற முன்வருகின்றனர். அந்த காரணங்களைக் கேட்டாலே நமக்கு அதிர்ச்சியும் திகைப்பும் மேலிடுகிறது. இந்த வழக்குகளில் அவைகளுக்கு பஞ்சமிருக்காது.

ஆயிரம் பொய் சொல்லியாவது ஒரு கல்யாணத்தை நடத்தலாம் என்பார்கள். ஆனால் சுசித்ராவின் தந்தை சுப்பிரமணியமோ ஆயிரம் பொய் சொல்ல அவகாசம் கிடைக்காமல், ஒரே ஒரு உண்மையை மட்டும் மறைத்து தன் மகளின் திருமணத்தை மிக அமர்க்களமாக நடத்திவிட்டார்.

அந்த உண்மை-

மிகப் பயங்கரமானதும் கூட!

பத்தொன்பதே வயதான சித்திரா, அந்த வயதுக்கே உரிய ஆர்ப்பாட்ட ஆழகுடன் தான் இருந்தாள். ஒரே ஒரே ஒரு குறையைத் தவிர. அந்தக் குறையும் கல்யாணம் பண்ணி வைத்தால் சரியாகிவிடும் என்று நினைத்த சுப்பிரமணியம் தன் மகளுக்கு வரன் தேட ஆரம்பித்தார்.

படையெடுப்பாய் வரன்கள் வந்து போக, கடைசியாக வந்த வரன் தான் சரவணன். ஐ.டி.ஐ படித்திருக்கிறான். சுசித்ராவிற்குப் பொருத்தமானவனாக இருந்தான். கணிசமான சம்பளத்தில் நல்ல வேலையிலும் இருந்தான். இத்தனைக்கும் சுத்திரா, பத்தாம் வகுப்போடு தன் படிப்பை நிறுத்திவிட்டிருந்தாள்.

இந்த வரனையாவது விடக்கூடாது என்றெண்ணிய சுப்பரமணியம், வரன் வீட்டாரிடம் அதிக பேரம் பேசவில்லை. ஏறக்குறைய எல்லா நிபந்தனைகளுக்கும் மறுபேச்சில்லாமலே ஒப்புக்கொண்டார்.

வங்கியில் கடன் வாங்கி கல்யாணத்தை மிகப் பிரமாதமாகவே நடத்தி வைத்தார் சுப்பிரமணியம்.

அன்று இரவு முதலிரவுக்கும் ஏற்பாடாயிற்று, முதலிரவு அறைக்கு பெண்ணை அனுப்பிவிட்டு, தவிப்போடு காத்திருந்தனர் சுப்பிரமணியம் தம்பதிகள்.

அறையில்-

படபடக்கும் இதயத்தோடு காத்துக்கொண்டிருந்தான் சரவணன். பால் செம்போடு அழகுச் சிலை போல் கதவருகே வந்து நின்றாள் சுசித்திரா.

"ஏன் அங்கேயே நிக்கிறே? வா!" ஏகப்பட்ட



டென்ஷனில் கரகரத்தான் சரவணன்.

அவள் மெல்ல நடந்தாள். அவனுக்கு அருகில் வந்தாள். பால் செம்பை அவன் கையில் கொடுத்து, நமஸ்கரித்தாள்.

"இப்படி... பக்கத்தில உட்கார் சுசி!"

உட்கார்ந்தாள் தலை கவிழ்ந்து.

"நிமிர்ந்து தான் என்னைப் பாரேன்! என்னை உனக்குப் பிடிச்சிருக்கா?"

"ம்"

"உனக்கு வேற என்னவெல்லாம் பிடிக்கும்?"

"உ.... உங்களுக்குப் பிடிச்சதெல்லாம் இனிமேல் எனக்கும் பிடிக்கும்!" சாமர்த்தியமாக பதில் சொன்னாள்.

"உன்னை இங்க எதுக்காக அனுப்பி வெச்சிருக்காங்க?"

திக்! கென்றது அவளுக்கு.

" நீ... நீங்க அதச் சொல்றீங்களா? எ... எனக்கு ரொம்பப் பயமா இருக்குங்க!"

"மு... முதலில அப்படித்தான் இருக்கும்!"

"ப்... ப்ளீஸ்! இ... ன்னைக்கு வே...ணாங்க..

அப்புறமா... இன்னொரு நாளைக்கு.... இன்னைக்கு சும்மா பேசிக்கிட்டிருப்போமே?"- என்றாள் கெஞ்சலாக.

பொங்கிய பாலில் நீர் ஊற்றியதைப் போல் சுருங்கிப் போனான் சரவணன்.

"சுசி சுசி... நாளைக்காவது ஏமாத்த மாட்டியே?"

"ம்ஹூம்!"

சொல்லி விட்டாளே தவிர, உள்ளுக்குள் உதறலாகத் தான் இருந்தது.

மறுநாள் இரவு.

அந்த முயற்சியில் அவனுக்குத் தோல்வியே கிடைத்தது. அவளுக்குள் அவனால் ஊடுருவவே முடியவில்லை. இது முதல் அனுபவம் தன் டென்ஷன் காரணமாகவே தோல்வி

(12ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டணி அமைக்க ஜெயலலிதா தீவிர முயற்சி!

## மூன்றாவது அணியும் வலுவாக இருக்கலாம்?



இந்திய அரசியல் களத்தில் தமிழகத்தின் அரசியல் நடப்புகள் விசித்திரமானவை; அதேவேளை முக்கியத்துவமுடையவையும் கூட.

மத்தியில் ஆட்சியில் அமர்வது, தமிழகத்தில் வெல்லும் கூட்டணியே என்பது தெரிந்த விடயம். ஆனால் தமிழகத்தில் வென்ற கூட்டணி மத்தியில் ஆட்சிபீடமேறிய பிறகு அக் கூட்டணியிலிருந்து சில கட்சிகள் அணிமாறி மாநிலத் தேர்தலில் போட்டியிட்டுவிட்டு மீண்டும் போய் மத்திய கூட்டணியில் சேர்ந்துவிடுவதும் உண்டு.

கடந்த காலத்தில் மத்தியில் பி.ஜே.பி. கூட்டணியில் இருந்த பா.ம.க., மாநில சட்டசபைத் தேர்தலில், எதிரணியான 'ஜெ' அணியில் போட்டியிட்டு வென்று மீண்டும் மத்திய அரசில் சேர்ந்து கொண்டது. இதே விதமான அரசியல் இந்த முறையும் நடக்கலாம். ஆனால், பா.ம.கவின் சமீபகால நடவடிக்கைகள் அ.தி.மு.கவுக்கு விரோதமானவையாகவே உள்ளதால் ராமதாஸ் தி.மு.க அணியில் தொடர்ந்து இருக்கவே தீர்மானித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

தி.மு.கவின் மெகா கூட்டணியை உடைத்து எப்படியாவது தனது அணியைப் பலப்படுத்த ஜெயலலிதா தீவிரமாக உள்ளார். பா.ம.க. வராவிட்டால் ம.தி.மு.கவையாவது கொண்டுவர அவர் முயல்வார். இங்குதான் ஜெயலலிதா தனது கடந்த காலச் செயற்பாடு குறித்து வருந்தும் நிலையில் இருக்கிறார். அவர் மட்டும் வைகோவை சிறையிடாது விட்டிருந்தால் இத்தேர்தலில் அ.தி.மு.க அணியில்தான் ம.தி.மு.க, என்பது நூறுசதவீதம் நிச்சயமாகி இருக்கும். அவசரப்பட்டதன் பலன், ஜெயலலிதாவின் கைக்கெட்டும் வெற்றி வாய்க்கெட்டாது போகலாம். தி.மு.கவின் நிலையோ இரண்டும் கெட்டானாக உள்ளது. ம.தி.மு.கவை சேர்க்காமல் விடவும் முடியாது; சேர்த்து அதன் பலத்தை அதிகரிப்பது தனக்கு ஆபத்தாக முடியுமென்றும் நினைக்கிறது.

கடந்த 2001 சட்டசபைத்தேர்தலில் ம.தி.மு.கவை உதறியதன் பலனை தி.மு.க நன்கு உணரும். இந்த முறையோ அதைவிட ஆபத்து உண்டு. ஏனெனில், வைகோவால் 'ஜெ' அணிக்குப் போகமுடியாவிட்டாலும் தனித்து நிற்கும் பி.ஜே.பியுடன் ம.தி.மு.க சேர முடியும். அதனுடன் திருமாவளவன், விஜயகாந்த் கட்சி கள் ஒன்றுசேர்ந்தால் வலுவான மூன்றாவது அணி உருவாகும். இது தி.மு.கவுக்கே ஆபத்தாக முடியும். பி.ஜே.பிக்கும் 'ஜெ' க்கும் இன்று வரை உறவு நன்றாக இல்லை. எனினும் யார் கண்டது. அரசியலில் நிரந்தர நண்பனும் இல்லை, எதிரியும் இல்லை.

ஆனால், ஜெயலலிதாவோ பி.ஜே.பியுடன் நேரடிக் கூட்டணி வைக்காது, பி.ஜே.பி- ம.தி.மு.க கூட்டணி உண்டாக வழிவகுக்கலாம். வேறுவார்த்தைகளில் சொன்னால் மூன்றாவது அணியை உருவாக விடுவது 'ஜெ' க்கு நன்மை அளிக்கும்.

வை.கோவைப் பொறுத்தவரை பி.ஜே.பியுடன் அவ்வளவு மனக்கசப்புக் கிடையாது. காங்கிரஸுடன் நல்லுறவுதான். என்றாலும் தேர்தல் லாபத்தைக் குறைத்து மதிப்பிட முடியாதே. நிச்சயமாக தி.மு.க தந்திரமாக தன்னை ஓரம்கட்டப்பார்க்கும் என்பது வை.கோ வுக்குத் தெரியும். எனவே, தேவையான தொகுதிகளைத் தராவிட்டால் கடந்த முறைபோல் வெளியேற தயாராக இருப்பதாகவும் தகவல்.

நடந்து முடிந்த லோக்சபா தேர்தல்களில் தி.மு.க தரும் தொகுதிகளில் போட்டியிடுவோம் எனக் கூறிய வை.கோ இந்த முறை அதே கூற்றை வெளியிடவில்லை என்பதனையும் கவனிக்கவேண்டும். ஏனெனில், அது லோக்சபா தேர்தல். அதில் ம.தி.மு.கவுக்கு பெரிய லாபம் கிடையாது. இப்போது வருவதோ சட்டசபைத் தேர்தல். இதில் ம.தி.மு.க தனது பலத்தைப் பரீட்சிக்க நினைக்கும் என்பது நிச்சயம்.

இதற்கிடையில் 'கூட்டணி ஆட்சி' என்ற பதமும் தி.மு.கவை கலக்குகிறது. காங்கிரஸின் முன்னாள் மாநிலத் தலைவர் இளங்கோவன் கூட்டணி ஆட்சி மாநிலத்தில் மலரவேண்டும் என்று கூறப்போய் தி.மு.க அதை முளையிலேயே கிள்ளி எறிந்தது. இப்போது ராமதாஸ் அதைக் கோரக்கூடும். எந்தக் கூட்டணிக் கட்சியும் கூட்டணி ஆட்சியைக் கோரவில்லை என கருணாநிதி சமீபத்தில் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது. இந்தப் பிரச்சினையாலும் மெகா கூட்டணி உடையலாம். பாண்டிச்சேரி வேறு பிரச்சினைக்குரியதாகவே இருக்கும்.

மொத்தத்தில் பார்க்கப்போனால்

**எஸ்.சுரேந்திரஜித்**

ஆட்சியைத் தக்கவைக்கப் போராடும் ஜெயலலிதாவை விட அதை கைப்பற்ற வாய்ப்புள்ள கருணாநிதிக்கே டென்ஷன் அதிகமாகும் போல் தெரிகிறது. அது முற்றினால் ''போகிறவர் போ; நான் தனித்து நின்று கொள்கிறேன்'' என்று சொல்லவும் கூடும்.

கடந்த தேர்தலுடன் ஒப்பிடுகையில் இவ்வாறு சொல்ல தி.மு.கவுக்கு சந்தர்ப்பம் உள்ளது.

ஏனெனில், கடந்த தேர்தலில் தி.மு.க ஆளும் கட்சி; இன்று அது எதிர்க்கட்சி. வழமையாக ஆளுகின்ற கட்சிமீதுள்ள வெறுப்பு தேர்தலில் அபரிமிதமாகப் பிரதிபலிப்பது உண்மையே. இந்த வகையில் சென்றமுறையில் ஆளும்கட்சிக்காக தோழமைக் கட்சிகளை உதறியதால் ஆபத்து நேர்ந்தது. இம்முறை எதிர்க் கட்சியில் இருப்பதால் தோழமைக் கட்சிகளை உதறினாலும், அவ்வளவு ஆபத்தில்லை என்று தி.மு.க கருதக்கூடும். அதில் உண்மை இல்லாமலும் இல்லை.


Study in UK, Cyprus Malaysia, Singapoor



(O/L) 3C, 3S தகமையுடன்

All College Applications free of charge

Free Consulting

Canada, Australia போன்ற நாடுகளில் குடியுரிமை பெறுவதற்கான இலகுவான வழிவகைகள் செய்து தரப்படும்.

Tel: 0773175767

Diploma & Undergraduate Courses...

- Architecture, Art, Fasion Design & Music
- Business Management, Accounting & Finance
- Law, Law with Business
- Engineering Design - Aerospace, Automotive, Mechanical
- Biological, Chemical & Pharmaceutical Science
- Computer Information Systems Design
- Information Systems, Electronic Commerce.
- Software Engineering, Computer Science
- Arts, Social Science and Humanities - Psychology
- Foundation Degree in Aircraft Engineering
- Englineering Systems Management
- Education - Primary Teaching
- Mechanical Engineering
- Information Technology

தற்போது 2006 January, February பதிவுகள் இடம்பெறுகின்றன.

SKY LINE TRAVELS & SERVICES

PROFESSIONAL OVERSEAS EDUCATIONAL CONSULTANTS

No. 7-1/2, W.A.De Silva Mawatha, (Facing Galle Road) Colombo 06. Sri Lanka.

Mobile: 0773175767



பலரது பாராட்டையும் பெற்ற மனோதத்துவ வைத்தியம்

(GENERAL PSYCHOTHERAPY)

இளம் சமுதாயத்தினருக்கு சக்தி, ஆளுமை குறைந்து ஞாபக மறதி ஏற்பட்டு, மெலிவு, பயம் நடுக்கம், நித்திரை குறைவுடன் தாழ்வு மனப்பான்மையும் உண்டாகிறது. காரணம் தவறு என்று தெரிந்தும் தவிர்க்க முடியாது சக்தியை வீணாக்குவதேயாகும். எமது மனோதத்துவ வைத்தியத்தால் தவறுகளைத்திருத்தி வெற்றி பெற்ற எதிர்காலத்தை அடையலாம்.ஆரம்ப மனநோயை உடனே சுகமாக்கலாம். மற்றும் ஆஸ்மா, நீரிழிவு, தலையிடி, வாதம், குழந்தைப் பேறு இன்மைக்கும், பெண்களுக்கு வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்லீறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு. (பதில் பெறுவது எனில் முத்திரைச் செலவு அனுப்ப வேண்டும்.)

பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்

Sexual Disorders (ஆண்மை சக்தி குறைவு)

மனித உறுப்புக்கள் அனைத்துக்கும் வியாதி ஏற்படுவது போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. ஆண்மை சக்தி குறைய பல காரணங்கள் உண்டு. (1) அளவுக்கதிகமாக விந்தை வீணாக்குவது, கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது. (2) உடல் பலவீனம். (3) நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது. (4) உறவின் போது விந்து விரைந்து வெளிப்படுதலும் ஆகும். வாழ்வு வீணாகிவிட்டதே என்று பயப்படாதீர்கள்! மனோதத்துவ வைத்தியம் (PSYCHOTHERAPY) மூலமும் திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

வெளிநாட்டினருக்கு விசேட வைத்தியம் உண்டு

எம்மைத் தொடர்பு கொண்டு பதில்பெற விரும்புவோர் (முத்திரைச் செலவுடன்) விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய (PSYCHOTHERAPY) ஓடியோ கசட், மற்றும் மூலிகை மருந்துகளை பதிவுத்தபாலில் அனுப்பிவைப்போம்.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

கொழும்பில்...

2006 பெப்ரவரி 19 – 25 வரை
New Ahmed Tourist Inn, Bang Bang Building
10 - 1/A, Bankshall Street, Colombo - 11.
TEl No. 5368426, 2368427
Hot Line: 0777 569205

வவுனியாவில்...

2006 மார்ச் 04 - 06
Vanni Inn, 2 ஆம் குறுக்குத்தெரு
வவுனியா, Tel No. 024 2222074
Hot Line: 0777 569205

யாழ்ப்பாணத்தில்...

2006 பெப்ரவரி 6 -10
A.S.N. சுற்றுலா விடுதி
392/A. மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
Hot Line: 0777 569205
Tel No. 021 2223181
021 222 5399

கடிதத் தொடர்புக்கு: Dr. P. Arumugam, 51/5, Koolavady Road Batticaloa, Srilanka, Resident Tel No. 065 2224019, Hot Line: 0777 569205.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர் ஒளி

பெப்ரவரி 12 -18, 2006

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு—14 டெலிபோன்: 011-4734401—6
பாக்ஸ் : 011 - 4734404
E-mail: editorial@sudaroli.com

## ஜெனிவா சந்திப்பு இறுதிச் சந்தர்ப்பம்

''பொறுமை இழந்து, நம்பிக்கை இழந்து விரக்தியின் விளிம்பை அடைந்துள்ள எமது மக்கள் இனியும் பொறுத்துப் பொறுத்துக் காத்திருக்கத் தயாராக இல்லை. ஆகவே வரையறுக்கப்பட்ட ஒரு குறுகிய கால இடைவெளிக்குள் எமது மக்களின் அரசியல் அபிலாசைகளைத் திருப்தி செய்யும் வகையில் ஒரு நியாயமான தீர்வுத் திட்டத்தை புதிய அரசாங்கம் முன்வைக்க வேண்டும். இது எமது இறுதியான, உறுதியான, அவசர வேண்டுகோள். இந்த அவசர வேண்டுகோளை நிராகரித்து கடும்போக்கைக் கடைப்பிடித்து காலத்தை இழுத்தடிக்க புதிய அரசாங்கம் முற்படுமானால் நாம் எமது மக்களுடன் ஒன்றிணைந்து எமது சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை, எமது தாயகத்தில் தன்னாட்சி நிறுவும் சுதந்திரப் போராட்டத்தை, எமது தாயகத்தில் தன்னாட்சி நிறுவும் சுதந்திரப் போராட்டத்தை, அடுத்த ஆண்டில் தீவிரப்படுத்துவோம்.''

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் கடந்த நவம்பர் 27 மாவீரர் நாளில் அரசுக்கு காலக்கெடு விடுத்து ஆற்றிய உரையின் ஒரு பகுதி இது.

இதன் பின்பு கடந்த இரண்டு மாதங்களாக இடம்பெற்ற சம்பவங்கள், யுத்தம் ஒன்று தவிர்க்க முடியாதது என்ற நிலைமையை ஏற்படுத்தி இருந்தன.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் நான்காவது வருடத்தைப் பூர்த்தி செய்யும் நாளான பெப்ரவரி 22 ஆம் திகதிக்குப் பின்னர் யுத்தம் மூளலாம் என்று ஊடகங்கள் பல ஊகம் தெரிவித்தன. கடந்த ஜனாதிபதித் தேர்தல் கூட்டங்களில் நோர்வே வேண்டாம் சொல்ஹெய்ம் வேண்டாம் என்று முழங்கியவர்கள், வாவா என்று அழைக்கும் நிலைமை ஏற்பட்டது.

இப்படியான நெருக்கடி நிலையில் தான் கிளிநொச்சியில் கடைசியாக இடம்பெற்ற சந்திப்பின்போது ஜெனிவாவில் பேச்சுவார்த்தை நடத்த இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

தற்பொழுது ஜெனிவாப் பேச்சுக்கான திகதியும் நிர்ணயிக்கப்பட்டு விட்டது. பெப்ரவரி 22 ஆம், 23 ஆம திகதிகளில் ஜெனிவாவில் விடுதலைப் புலிகள் தரப்பும் அரசு தரப்பும் சந்தித்துப் பேசப்போகிறார்கள்.

2003 ஏப்ரல் மாதம் அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்ற பின்னர் முதல் தடவையாக இரு தரப்பினரும் பேச இருப்பது இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் திசையில் ஒரு சிறிய அடி மட்டுமே.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை சீராக அமுல் செய்வது பற்றி மட்டுமே இரு தரப்பினரும் பேசப் போகிறார்கள். சமாதான முயற்சிகளில் எந்தவித முன்னேற்றமும் இல்லாத நிலையில் மீண்டும் தொடக்கத்திலிருந்து சமாதான முயற்சியில் ஈடுபடும் நிலைமையே தற்பொழுது இருந்து வருகிறது. நோர்வே கடந்த எட்டு வருட காலமாக மேற்கொண்ட முயற்சிகள் அத்தனையும் பயன் அற்றுவிட்டன.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளைத் திருப்தி செய்யும் வகையில் ஒரு நியாயமான தீர்வுத் திட்டம் ஒன்றை புதிய அரசாங்கம் முன்வைக்க வேண்டும் என்பதே விடுதலைப் புலிகள் தலைவரின் கோரிக்கை. அதற்கு முன்னோடியானது தான் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை சீராக அமுல் செய்வது தொடர்பான பேச்சு. யுத்த நிறுத்த ஒப்பந்தம் சீராக அமுல் செய்யப்பட்டால் மாத்திரமே சமாதானப் பேச்சுக்கான புறச் சூழ்நிலையை ஏற்படுத்த முடியும். புறச் சூழ்நிலை ஏற்பட வேண்டுமானால் அரச படைகளின் ஆதரவுடன் செயற்படும் ஒட்டுப் படைகளிடமிருந்து ஆயுதங்கள் களையப்பட வேண்டும். இதுவே இன்றுள்ள அவசரதேவை.

ஜெனிவாவில் பேசுவது குறித்து தீர்மானம் எடுக்கப்பட்ட பின்பும் இடம்பெற்ற சம்பவங்கள், ஒட்டுப் படைகளின் செயற்பாடுகள் மேலும் முனைப்புப் பெற்றிருப்பதையே காட்டுகின்றன. கடத்திச் செல்லப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழக பணியாளர்களில் ஏழு பேர் பற்றி இன்னும் தகவல் இல்லை.

ஜெனிவாவில் நடைபெறப்போகும் பேச்சுக்கள் மிகவும் கடுமையாக இருக்கப் போகின்றன என்பதில் சந்தேகம் இல்லை. இந்தப் பேச்சுக்கள் வெற்றி பெற்றால் மட்டுமே சமாதானப் பேச்சுக்களைத் தொடர முடியும் என்பதை ராஜபக்ஷவின் அரசு உணர்ந்து செயற்பட வேண்டும்.

# ஏமாறப் போவது யார்?

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை பலப்படுத்துவது சம்பந்தமான பேச்சுக்களை எதிர்வரும் 22ஆம், 23ஆம் திகதிகளில் ஜெனிவாவில் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

### அரச தூதுக்குழு

எரிக் - பிரபா நடத்திய வன்னிப் பேச்சுகளின் பின்னர் பேச்சுவார்த்தைக்கான திகதியை நிர்ணயிப்பதில் இருந்த இழுபறி இப்போது முடிவு காணப்பட்டுள்ளது. எனினும் அரசாங்கத் தூதுக்குழுவை தெரிவு செய்வதில் பலத்த குழப்ப நிலை ஏற்பட்டிருந்ததையே ஜெனிவா பேச்சுவார்த்தைகள் சம்பந்தமாக அரச தரப்பில் இருந்து வெளியிடப்படும் செய்திகள் தெரிவித்தன.



கடந்த மாதம் 25 ஆம் திகதி எரிக் - பிரபா பேச்சுவார்த்தைகள் நிறைவடைந்ததுமே தமிழீழ விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் பாலசிங்கம் தலைமையில் ஜெனிவா செல்லவுள்ள தமது தூதுகோஷ்டியில் பங்கேற்கும் ஏனைய அங்கத்தவர்களின் பெயர்களை விடுதலைப் புலிகள் தெரிவித்துவிட்டனர்.

ஆனால் வன்னிப் பேச்சுக்கள் நடைபெற்று இரு வாரங்கள் கடந்த நிலையிலும் கூட தனது தூதுக் குழுவில் இடம்பெற இருக்கும் அங்கத்தவர்கள் பற்றிய விபரத்தை அரசாங்கம் அறிக்கவில்லை. அரச தூதுக்குழு அமைச்சர் நிமால் ஸ்ரீ பாலடி சில்வா தலைமையில் ஜெனிவா செல்ல இருக்கிறது.

### ஜே.வி.பி - ஹெல உறுமய

ஜெனீவாவில் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படும் பொழுது தம்மை கலந்தாலோசிக்காது அரசாங்கக் குழு எந்த ஒரு முடிவுக்கும் வரக்கூடாது என ஜே.வி.பியினர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை வற்புறுத்திக் கேட்டுக்கொண்டதாகவும் செய்திகள் கூறுகின்றன.

ஜே.வி.பியினர் இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி அவர்களில் சிலருக்கு முக்கிய மந்திரிப் பதவி அளிக்க முன் வந்துள்ளார் என்றும் அவர்களும் அவற்றை ஏற்றுக் கொள்ள ஆயத்தமாக இருப்பதாகவும் அறிய முடிகிறது.

ஜே.வி.பியினர் அரசாங்கத்தினுள் நுழைந்து மந்திரிப் பதவிகளைப் பெற்றுக் கொள்வதன் மூலம் தமது கட்சியின் செல்வாக்கை நாடளாவிய ரீதியில் வளர்த்துக் கொள்ள முடியும் என்று நினைக்கின்றனர். இவ்வாறு மந்திரிப் பதவிகளைப் பெற்றுக் கொள்வதுடன் காலப்போக்கில் ஸ்ரீ.ல.சு. கட்சியை தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்துவிடலாம் என்றும் அவர்கள் திட்ட

மிட்டுச் செயல்படுகின்றனர். இதனால்தான் இனப்பிரச்சினை பற்றிய தமது நிலைப்பாட்டில் இருந்து பின்வாங்கி உள்ளனர்.

* எரிக் சொல்ஹெய்மை பேச்சுவார்த்தைக்கான பிரதான அனுசரணையாளராக ஏற்றுக் கொண்டமை

* ஐரோப்பிய நாடான சுவிட்ஸர்லாந்தில் சமாதானப் பேச்சுகளை நடத்த இணங்கியமை

* யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை பேச்சுக்கான அடிப்படையாக ஏற்றுக் கொண்டமை

ஆகியவற்றை குறிப்பிடலாம்.

மஹிந்தவும் ஜே.வி.பி மற்றும் ஹெல உறுமய கட்சிகளின் ஆதரவின்றி தனது அரசாங்கத்தை நடத்த முடியாது என்பதை தெரிந்து வைத்துள்ளதனால் சமாதான முன்னெடுப்புகளையும் இவர்களின் விருப்பத்திற்கேற்பவே நடத்திச் செல்ல முற்படுகிறார்.

அதனால்தான் ஜெனிவா பேச்சுவார்த்தைகள் நடைபெறுமானால் அங்கு எட்டப்படும் ஒவ்வொரு முடிவு பற்றியும் தனக்கு உடனுக்குடன் அறிவிக்க வேண்டுமென்றும் அந்த முடிவுகள் பற்றி அரசாங்கத்தின் நேச அணியினரான ஜே.வி.பி மற்றும் ஹெல உறுமய கட்சிகளுடன் கலந்தாலோசித்து அவற்றுக்கான அங்கீகாரத்தை தான் வழங்கிய பின்னரே தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணக்கப்பாட்டுக்கு அரசாங்கத் தரப்பினர் வரமுடியும் என்றும் ஜனாதிபதி தெரிவித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

ஜனாதிபதியின் இந்த முடிவு ஜெனிவா பேச்சுவார்த்தைகள் இடம்பெறுமானால் அவை எத் திசையை நோக்கிச் செல்லும் என்பதை பட்டவர்த்தனமாக எடுத்துக் காட்டுகின்றன.

### மஹிந்த சிந்தனை

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமிழீழ விடுதலைப் புலிகள் கேட்டுக் கொண்டபடி யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை பலப்படுத்துவது சம்பந்தமாக பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு இணங்கி உள்ள போதும் பேரினவாத சிந்தனைகளில் இருந்து விடுபட்டவராக அவரை அடையாளப்படுத்த முடியவில்லை.

ஜாதிக ஹெல உறுமய, ஜே.வி.பி கட்சியினர் இந்தப் பேச்சுவார்த்தை பற்றிய அடிப்படை விடயத்திலேயே தமிழீழ விடுதலைப் புலிகளுடன் முரண்பட்டு நிற்கின்றனர். தமிழீழ விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை பலப்படுத்துவது பற்றியே பேச்சு என்று அழுத்தம் திருத்தமாகக் கூறி விட்டனர். ஆனால், ஜே.வி.பி மற்றும் ஹெல உறுமய கட்சியினர் யுத்த நிறுத்த ஒப்பந்தம் திருத்தப்பட வேண்டும் என்பதையே தற்போதும் தமது கொள்கையாகக் கொண்டுள்ளனர். அத்துடன் தம்முடைய பிரதிநிதிகள் அரசாங்கத் தூதுக் குழுவில் உள்வாங்கப்பட வேண்டும் எனவும் ஜனாதிபதியிடம் கூறி வருகின்றனர்.

> ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமிழீழ விடுதலைப் புலிகள் கேட்டுக் கொண்டபடி யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை பலப்படுத்துவது சம்பந்தமாக பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு இணங்கி உள்ள போதும் பேரினவாத சிந்தனைகளில் இருந்து விடுபட்டவராக அவரை அடையாளப்படுத்த முடியவில்லை.

### நேதாஜி

இதுமட்டுமன்றி அரசாங்கத் தரப்பில் படைத் தரப்பினர், சட்டத்துறை சார்ந்த நிபுணர்களுடன் வெளிநாட்டு ஆலோசகர்களும் கலந்து கொள்ள இருக்கின்றனர். விடுதலைப் புலிகள் முன்வைக்க உள்ள கோரிக்கைகளை மறுதலித்து அரசாங்கம் மற்றும் படைத்தரப்பினரின் கரங்களை வலுப்படுத்தக் கூடிய திட்டங்களை முன் வைப்பதன் மூலம் விடுதலைப் புலிகளை பொறியில் சிக்க வைப்பதற்காகவே இத்தகைய ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன என்று அரசியல் வட்டாரங்கள் கிசுகிசுக்கின்றன. இத்தகைய நகர்வுகளை கருத்தில் கொண்டுதான் சமாதான அனுசரணைக் குழுவின் தலைவரான எரிக் சொல்ஹெய்ம் ஜெனிவா பேச்சுக்கள் கடுமையானதாக இருக்கும் என்று கருத்து வெளியிட்டுள்ளார்.

### வன்னி

அரசாங்கத்தின் இத்தகைய கபடப் போக்கு வன்னியை சீண்டி விட்டிருப்பதாக வன்னிச் செய்திகள் தெரிவிக்கின்றன. சமாதானப் பேச்சுக்கள், பிரச்சினைக்கு தீர்வு என்று அரசாங்கம் கூறிவரும் அதே வேளை தமிழர் தாயகத்தில் சுற்றி வளைப்புகள், தேடுதல் நடவடிக்கைகள், தொண்டர் சேவை நிறுவன உறுப்பினர்கள் கடத்தப்படுதல், அப்பாவி மக்கள் மீதான தாக்குதல்கள், பெண்களை அவமானப்படுத்துதல், போன்ற அரச பயங்கரவாதச் செயல்களையும் தமிழர் தாயகத்தில் கட்டவிழ்த்து விட்டுள்ளது.

அரச படையினரின் அட்டகாசங்கள் அதிகரித்துள்ள அதேநேரம் ஜெனிவா பேச்சுக்கான புறச்சூழலை ஏற்படுத்தும் தமது கடப்பாட்டை நிறைவு செய்வதற்காக படைகளுக்கு எதிரான சகல வன்முறைகளும் நிறுத்தப்பட வேண்டும் என்று விடுதலைப் புலிகளின் தலைவர் தமது தளபதிகளுக்கு விடுத்த உத்தரவு அச்சொட்டாக அவர்களால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

படைத் தரப்பினர் தமிழர் தாயகத்தில் அப்பாவிப் பொது மக்கள் மீது தொடர்ந்து நடத்தும் அடாவடித்தனங்களைக் கண்டு சினம் அடைந்துள்ள வன்னியில் உள்ள கடும்போக்காளர்கள் இராணுவத்துக்கு எதிரான தாக்குதல்கள் தீவிரப்படுத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே இன்னும் உறுதியாக இருப்பதாகத் தெரிகிறது.

ஜெனிவா பேச்சுவார்த்தைகளின் மூலம் தமிழ் மக்கள் அடையப் போகும் வெற்றி என்ன என்று இவர்கள் கேள்வி எழுப்பி இருப்பதுடன்

* தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணியாளர்களை கடத்திய குற்றவாளிகள் விடுதலைப் புலிகளே என அரசாங்கத்தின் சுட்டுவிரல் எம்மை நோக்கித்திருப்பப்படும் சூழ்நிலையில்

* துணை இராணுவ ஒட்டுக் குழுக்களை தமிழ் மண்ணில் இருந்து அகற்றுவதற்கான நடவடிக்கைகள் எதிலும் அரசாங்கம் இதுவரை இறங்காத பின்னணியில்

இந்த அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைத்து எப்படி பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள முடியும் என்று அவர்கள் கேள்வி எழுப்பி உள்ளனர்.

இவற்றையெல்லாம் மனதில் கொண்டுதான் வெலிகந்தையில் கடத்தப்பட்டுள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழக பணியாளர்கள் ஏழு பேரையும் விடுவிப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை இலங்கை அரசு எடுக்க வேண்டும் என்ற புலிகள் தலைமையின் எதிர்பார்ப்பை எரிக் சொல்ஹெய்மிடம் எடுத்துக் கூறியிருக்கிறார் மதியுரைஞர் பாலா.

கடந்த நான்காம் திகதி தம்மைச் சந்தித்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரிடம் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன்

'பொதுவாக தமிழ் மக்களுக்கும் குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் எதிராக அரசாங்கம் வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டுள்ள நிலையில் ஜெனிவா பேச்சுவார்த்தைகளில் எமது தரப்பு கலந்து கொள்வது அர்த்தமற்றது'- என்று தெரிவித்துள்ளார்.

### பொங்கு தமிழ்ப் படை

தமிழ்ச்செல்வன் அரசாங்கத்தின் மீதான தனது ஏமாற்றத்தை இவ்வாறு வெளிப்படுத்த வட பகுதியில் பொங்கு தமிழ் படை

(7ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் அதிர்வுகள்

## பிரபாகரன் பற்றிய நூலில் மஹிந்த காட்டும் அக்கறை

ஜெனிவாவில் தமிழீழ விடுதலைப் புலிகளைச் சந்திக்க அரசாங்கப் பிரதிநிதிகள் பூரண தயார் நிலையில் இருக்க வேண்டும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விரும்புகிறாராம். அதனால் An Elusive Mind- என்ற தலைப்பில் பிரபாகரனைப் பற்றி எழுதப் பட்டுள்ள நூலின் பிரதிகளை வாங்கி அந்தப் பிரதிநிதிகளுக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகளை செய்து வருகிறாராம் மஹிந்த.

பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வதற்கு முன்னர் பேச்சுவார்த்தைக் குழுவின்அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் அந்தப் புத்தகத்தை வாசித்து உளவியல் யுத்தம் ஒன்றைச் சந்திப்பதற்கு தம்மை தயார்ப்படுத்திக் கொள்ளவேண்டும் என்று சொல்லி இருக்கிறாராம் மஹிந்த.

அதுமட்டுமல்ல தமிழீழ விடுதலைப் புலிகளின் பலம் வாய்ந்த பிரதிநிதிகளைச் சந்திப்பதற்கு ஏற்ற வகையில் அரசாங்கப் பிரதிநிதிகளுக்கு குறுகிய கால கற்கை நெறி ஒன்றையும் ஒழுங்கு செய்துள்ளதாம் அரசாங்கம். இந்த கற்கை நெறி அடுத்த வாரம் ஆரம்பிக்கப்பட இருக்கிறதாம்.

## ஜே.வி.பிக்குள் பூகம்பம்

ஜே.வி.பியில் உட்கட்சிப் பூசல் தீவிரமாகி வருகிறதாம். தற்போது கட்சி கடைப் பிடிக்கும் கொள்கைகளை கிழித்து விளாசுவதில் முன்னணி வகிக்கிறாராம் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான கே.டி.லால்காந்தா.

ஜனாதிபதி தேர்தல் காலத்தில் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட உடன்பாட்டின் அடிப்படையிலேயே சமாதானப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற தனது நிலைப்பாட்டில் உறுதியாக நிற்கிறாராம் லால்காந்தா.

ஜே.வி.பியின் அடையாளம் பாதுகாக்கப்பட வேண்டும் அற்ப சலுகைகளுக்காக கட்சியின் கொள்கைகளை யாருக்கும் விற்க முடியாது என்றும் கூறி வருகிறாராம் அவர்.

அண்மையில் இடம்பெற்ற கட்சியின் அரசியற்குழு கூட்டத்தில் இவரின் முன்மொழிவுகள் கணக்கெடுக்கப்படவில்லையாம். கட்சியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள் சிலர் ஜனாதிபதி மஹிந்தவுடன் செய்துகொண்ட இரகசிய உடன்படிக்கையே இதற்கான காரணமாம்.

கட்சித் தலைவர் சோமவன்ச அமரசிங்க, செயலாளர் ரில்வின் சில்வா, நந்தன குணதிலக ஆகியோரை விமல் வீரவன்ச ஜனாதிபதியிடம் இரகசியமாக அழைத்துச் சென்று பேச்சுவார்த்தை நடத்தியபோது அவர்களுக்கு முக்கியமான மந்திரிப்பதவி வழங்கப்படும் என்று வாக்குறுதி அளித்துள்ளாராம் மஹிந்த.

இந்த உடன்பாட்டின் பின்னரே கட்சி கொள்கையில் திடீர் மாற்றம் ஏற்பட்டதாம்.

கட்சிக் கொள்கையில் மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும் எனவும் இனப் பிரச்சினைத் தீர்வுக்கான முன்வைக்கப்பட்டுள்ள சமஷ்டி முறை மீது கட்சி காட்டி வரும் கடும்போக்கு கைவிடப்பட வேண்டும் என்றும் இப்போது கூறுகிறாராம் நந்தன குணதிலக.

## ஜீ.எல்.பீரிஸுக்கு கால்தட்டு

கடந்த வாரம் ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜீ.எல்.பீரிஸ் அரசாங்கத்தின் பக்கம் பாய்வதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் மும்முரமாக பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருந்தபோது இரு தரப்பினரால் அவர் கால்தட்டு போட்டு வீழ்த்தப்பட்டார்.

இந்த இரு தரப்பில் ஒரு தரப்பினர் தமிழீழ விடுதலைப் புலிகள் என்று தெரிய வருகிறது. இவர்கள் வழமைக்கு மாறான வழிமுறைகள் ஊடாக அரசாங்க முக்கியஸ்தர்களுடன் தொடர்பு கொண்டு ஜெனிவாவில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள பேச்சுவார்த்தைகளில் அரசாங்கப் பிரதிநிதிகளில் ஒருவராக ஜீ.எல்.பீரிஸ் கலந்து கொள்வதை தாம் விரும்பவில்லை என்று தெரிவித்தனராம்.

இந்தக் கோரிக்கைகளை ஆலோசனைக்கு எடுத்துக் கொண்ட அரசாங்கம் அவர் அரசாங்க தூது கோஷ்டியில் இடம்பெறமாட்டார் என்ற உறுதி மொழியை விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைத்திருக்கிறதாம்.

அண்மையில் ஜனாதிபதி மஹிந்தவைச் சந்தித்த ஜே.வி.பியினரும் ஜீ.எல்.பீரிஸ் அரசாங்கத்தில் இணைந்து கொள்ள மேற்கொண்டுள்ள முயற்சி குறித்த தமது அதிருப்தியை வெளியிட்டனராம்.

அரசாங்க பக்கத்துக்குப் பாய்ந்து தமது நிலையை வலுப்படுத்திக் கொள்வதை வழக்கமாகக் கொண்ட ஜீ.எல். இம்முறை தனது பயறு அவியாது என்பதை தெரிந்து கொண்டதும் ஐ.தே.கட்சியை விட்டு தான் ஒருபோதும் விலகப் போவதில்லை என்று கூறிவருகிறாராம்.

## சறுக்கி விழுந்த சந்திரிக்கா

அண்மையில் லண்டனில் இருந்து நாடு திரும்பிய முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்காவுக்கு கடந்த 22ஆம் திகதி புதன்கிழமை நடைபெற்ற ஸ்ரீ.ல.சு.கட்சியின் நிர்வாகக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கான அழைப்பு அனுப்பப்படவில்லையாம்.

கூட்டம் நடைபெறவிருந்த தினத்தில் கட்சியின் பொதுச்செயலாளரான மைத்திரிபால சிறிசேனவை தொலைபேசியில் தொடர்பு கொண்ட சந்திரிக்கா நிர்வாகக்குழுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு தான் ஏன் அழைக்கப்படவில்லை என்று கேட்டாராம்.

அழைப்பு அனுப்பப்பட்டபோது நீங்கள் லண்டனில் இருந்ததால் உங்களுக்கு அழைப்பு அனுப்பப்படவில்லை. ஆனால் நீங்கள் விரும்பினால் அலரிமாளிகையில் மாலை 7.00 மணிக்கு நடக்க இருக்கும் கூட்டத்தில் கலந்து கொள்ளுங்கள் என்று கூறிய மைத்திரி உங்களை வரவேற்க நாங்கள் காத்திருக்கிறோம் என்றும் கூறினாராம்.

சந்திரிக்கா அலரிமாளிகைக்கு சென்றபோது பேரதிர்ச்சி காத்திருந்ததாம் அவருக்கு. அவரது பாதுகாப்பு உத்தியோகத்தர்களை வெளியே காத்திருக்கும்படி கூறிவிட்டு சந்திரிக்காவை மட்டும் உள்ளே அனுமதித்தனராம் அலரிமாளிகையைச் சேர்ந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்.

கூட்டத்தை தொடக்குவதற்காக ஜனாதிபதி மஹிந்த கூட்டம் நடைபெற இருந்த அறைக்குள் நுழைந்தபோது சந்திரிக்கா உட்பட அங்கிருந்த அனைவரும் எழுந்து நின்றனராம்.

ஸ்ரீ.ல.சு.கட்சியின் தலைவி என்ற வகையில் கூட்டத்தில் எட்டு நிமிடங்கள் மட்டுமே பேசிய சந்திரிக்கா தனது பேச்சின்போது ஸ்ரீ.ல.சு.கட்சி கறைபடியாத கட்சி என்றும் இரத்தக்கறை படிந்த சிலர் கட்சியை அழிக்க முற்படுகிறார்கள் என்றும் கூறியதுடன் இவர்களை எமக்குத் தேவையில்லை என்றும் கூறினாராம்.

ஜனாதிபதி மஹிந்த பேசிய போது தான் ஜனாதிபதியாக வருவதற்கு உதவிய கட்சியினரை இப்போது புறக்கணித்து ஒதுக்கி விடமுடியாது என்று தெரிவித்தாராம்.

கூட்டம் முடிந்ததும் அங்கு இருந்த நிர்வாக சபை உறுப்பினர்கள் அனைவரும் மஹிந்தவை சுற்றிவர நின்று பலதும் பத்தும் கதைத்தார்களாம். சந்திரிக்கா தனித்து விடப்பட்டிருந்தாராம்.

சந்திரிக்கா அங்கிருந்து புறப்பட ஆயத்தமானபோது மஹிந்த அவரை தனனுடன் உணவருந்த வருமாறு அழைத்தாராம். தான் வேறொரு இடத்துக்கு போக வேண்டியிருக்கிறது என்று அவருக்கு சொல்லிவிட்டு அங்கிருந்து புறப்பட்டாராம் சந்திரிக்கா.

-சந்த்ரபோஸ்-

## ஏமாறப்

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

'சிங்கள பேரினவாத அரசியலாளர் இராணுவ நெருக்குவாரங்களை மிக இறுக்கமாக அதிகரித்து வருகின்றனர். மனித உரிமைகள் சித்திரவதைக் கூட சுவர்களில் மோதப்பட்டு உதிரம் கக்கி பலியாகின்றது. தமிழ் மக்களது அரசியல் அபிலாஷைகள் வாழ்வுரிமைகள் படைத் தரப்பினரின் காலால் மிதிக்கப்படுகின்றன.

இனியும் நாம் மௌனித்து நிற்கப் போவதில்லை. இராணுவத்தினருக்கும் துணைக்குழுக்களுக்கும் எதிராக நாம் எடுக்கப்போகும் நடவடிக்கைகளுக்கு ஆதரவாக உங்கள் பங்களிப்பை வழங்குங்கள்'- என்று மக்களை கேட்டுள்ளது.

இந்தப் பின்னணியில்தான் இலங்கைக்கான நோர்வே தூதர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் தற்போது விரிந்துள்ள புதிய சூழ்நிலை பற்றி பேசவும் ஜெனிவா பேச்சுக்களை முன்னெடுப்பது பற்றி ஆராயவும் இன்னும் சில தினங்களில் வன்னி செல்லத் திட்டமிட்டு இருக்கிறார்.

**மஹிந்தவின் வியூகம்**

ஆனால் ஜனாதிபதி மஹிந்தவைப் பொறுத்தவரை பேச்சுவார்த்தை என்று கூறி காலத்தை இழுத்தடிக்கும் அதேவேளை இராணுவத்தை பலப்படுத்தி யுத்தம் ஒன்றுக்கு தயாராகும் வியூகம் ஒன்றையே வகுத்து வருகிறார் போல தெரிகிறது.

அண்மையில் நடைபெற்ற மந்திரி சபைக் கூட்டத்தின் இறுதியில் அறிக்கை ஒன்றினை சமர்ப்பித்து அமைச்சர் மங்கள சமரவீர உரையாற்றினார்.

அந்த உரையின்போது அவர் ஈரானின் அணுசக்தி விஸ்தரிப்பு திட்டத்துக்கு எதிராக அமெரிக்கா ஐ.நா சபையூடாக அந்நாட்டின் மீது மேற்கொள்ளவுள்ள பொருளாதாரத் தடை நடவடிக்கைக்கு ஸ்ரீலங்கா ஆதரவளிக்க வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்திப் பேசினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், அமெரிக்கா பொருளாதார ரீதியாகவும் பயங்கரவாதத்தை முறியடிப்பதற்கும் பெருமளவில் எமக்கு உதவி வருகிறது. எனவே அமெரிக்காவின் ஆத்திரத்தை கிளறி விடும் வகையில் நாம் நடந்து கொள்ளக்கூடாது என்று சக அமைச்சர்களை கேட்டுக் கொண்டார். இதே மங்கள சமரவீரா தான் ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுத்த போது அமெரிக்காவுக்கு எதிராக ஜே.வி.பியினருடன் சேர்ந்து போர்க்கொடி உயர்த்தியதை மறக்க முடியாது.

இக்கட்டத்தில் மங்களவைத் தொடர்ந்து பேசிய ஜனாதிபதி மஹிந்த ஈரான் மீது பொருளாதாரத் தடை விதித்து ஐ.நா தீர்மானம் நிறைவேற்றுமானால் அரசாங்கம் இப்பிரச்சினையை புதிய கோணத்தில் அணுக வேண்டி இருக்கும் என்று தெரிவித்தார். "ஈரான் எமது நட்பு நாடு"- என்றும் தொடர்ந்து கூறினார் ராஜபக்ஷ.

விடுதலைப் புலிகளுக்கெதிரான போர் ஒன்றை ஆரம்பிப்பதற்குத் தேவையான ஆயுதங்களை இராணுவம் ஈரானிடமிருந்து வாங்கி இருப்பதுடன் அவை ஸ்ரீலங்காவுக்கு வந்து சேர்வதை எதிர்பார்த்துக் கொண்டும் இருக்கிறது. இதை மனதில் கொண்டுதான் மஹிந்த ஈரான் எமது நட்பு நாடு என்றும் ஈரான்-அமெரிக்கா பிரச்சினையை புதிய கோணத்தில் அணுக வேண்டும் என்று பேசியிருப்பதாகவும் அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

ஈரான் - அமெரிக்க பிரச்சினையை மஹிந்த புதிய கோணத்தில் அணுகி அதற்கான தீர்வைக் கண்டு கொள்ளட்டும். ஆனால் தமது தேசியப் பிரச்சினையையும் தாம் தேர்ந்தெடுத்து வைத்துள்ள வழியில் அணுகுவதற்கே தமிழ் மக்கள் தயாராக இருக்கின்றனர். தென்னிலங்கை தமிழ் இனத்தை தொடர்ந்தும் ஏமாற்ற முடியாது. அவ்வாறு ஏமாற்ற முற்பட்டால் ஏமாறப் போவது தென்னிலங்கையும் அதன் தலைமையுமே.

## ஆங்கிலத்தில் 'காமசூத்திரம்'!



பர்டன்

லண்டனில் இருக்கும் 'காமசாஸ்திரா சொசைட்டி' என்ற அமைப்புதான் 1883ஆம் ஆண்டு காமசூத்திரத்தை சமஸ்கிருதத்திலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டது. ரிச்சர்ட் ஃபிரான்சிஸ் பர்டன் என்பவரே இதை மொழிபெயர்த்தார். இந்த மொழி பெயர்ப்புக்கு சுவாரஸ்யமான வரலாறு உண்டு.

கல்யாண மல்லா எழுதிய 'அனங்கரங்கா' என்ற செக்ஸ் நூலைத்தான் முதலில் பர்டன் மொழிபெயர்ப்பதாக இருந்தார். அதுவரை அவர் காமசூத்திரம் பற்றி கேள்விப்பட்டது இல்லை. சமஸ்கிருத பண்டிதர்களின் உதவியோடு, 'அனங்கரங்கா'வை மொழி பெயர்க்க பர்டன் உட்கார்ந்தார். 'அனங்கரங்கா'வின் ஒவ்வொரு பந்தியிலும், 'இது பற்றி வாத்ஸாயனர் இப்படிச் சொன்னார்' என்று குறிப்பிடப்பட்டு இருக்க, அவருக்கு பிரமிப்பு.

'வாத்ஸாயானர் யார்?' என அப்போது தான் அவர் கேட்டார். காமசூத்தரம் பற்றி அவருக்கு சொன்ன பண்டிதர்கள், "காமம் மற்றும் வாழ்க்கை பற்றிய முழுமையான நூல் அது. எந்த ஒரு சமஸ்கிருத நூலகமும் அது இல்லாமல் முழுமை பெறாது" என்றனர்.

ஆனால், ஒவ்வொரு நூலகத்தில் இருந்த காமசூத்திரத்திலும் சில பகுதிகள் மாறி இருந்தன. பம்பாய், கல்கத்தா, வாரணாசி, ஜெய்ப்பூர் என பல ஊர்களிலிருந்து காமசூத்திரத்தின் மூலப்பிரதிகளை வாங்கி ஒப்பிட்டு, அப்புறம் தான் மொழி பெயர்த்தார்.

செக்ஸில் ஆண்களை விட அதிக ஆசை கொண்டு படுக்கையில் தாங்களே முதலில் ஆரம்பித்து, ஆண்கள் மீது அதிகம் ஆதிக்கம் செலுத்தக் கூடிய பெண்களைப் பற்றியும்கூட காமசூத்திரத்தில் இருக்கிறது. ஆனால், இந்த மொழிபெயர்ப்பு உருவான காலத்தில் பிரிட்டிஷ் பெண்கள் கட்டுப்பாடுகளோடு வளர்ந்தார்கள். இதனால் இந்தப் பகுதியைத் தவிர்த்தார் பர்டன். ஆனாலும் கூட பிரிட்டனில் காமசூத்திரத்தை தடை செய்து விட்டார்கள். இதர ஐரோப்பிய நாடுகளில் அதன் விற்பனை சக்கை போடு போட்டது.

பின்னர் பர்டன் 'அனங்கரங்கா'வையும் மொழி பெயர்த்தார். அதோடு அரேபியர்களின் செக்ஸ் களஞ்சியமாக 'ஆயிரத்தொரு அரேபிய இரவுகள்' ஆங்கிலத்துக்கு போனதும் இவரால் தான்!

அதிகம் படிக்காத ஆங்கிலேயரான பர்டன்... சமஸ்கிருதம், அரபி உட்பட இருபத்தொன்பது மொழிகளில் எழுதவும், பேசவும் திறமை பெற்றது ஆச்சரியமான விஷயம். ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் படித்த போது, முரட்டுத்தனம் காரணமாகப் பாதியிலேயே வெளியேற்றப்பட்டார். பிறகு கிழக்கிந்திய நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்து சிப்பாயாக இந்தியா வந்தார். வந்த வேகத்தில் அரபு மொழியை கற்றுக் கொண்ட அவர், சிந்து மாகாணத்தில் உளவு வேலை பார்த்தார். உளவு வேலைக்காக மொழிகளைக் கற்றுக் கொள்ளப் போய் ஒரு மொழிபெயர்ப்பாளராக மாறினார் அவர்.

பல மொழிகளில் இருந்த செக்ஸ் நூல்கள் பற்றிய அரிய தகவல்களும், அவற்றின் பிரதிகளும் அவரிடம் இருந்தன. அவர் மறைவுக்குப் பிறகு இவற்றை வைத்திருக்கப் பயந்த மனைவி இஸபெல் பர்டன், எல்லாவற்றையும் எரித்து விட்டார். செக்ஸ் ஆராய்ச்சிக்கு இது மிகவும் பெரிய இழப்பு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெலிகந்தை கடத்தல் துணைக் குழுக்களின் எல்லை மீறிய போக்கு




தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணியாளர் கடத்தப்பட்டமையைக் கண்டித்து மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்ற ஹர்த்தால்

**வெ**லிகந்தை, பகுதியில் அடுத்தடுத்த இரு நாட்களில், ஒரே இடத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்கள் 10பேர் ஆயுதக் குழுவினால் கடத்திச்செல்லப்பட்டிருந்தனர்.

வெலிக் கந்தை சோதனைச்சாவடியில் சோதனைகளையும், பதிவுகளையும் மேற்கொண்ட பின்னர் தமது பயணத்தைத் தொடர்ந்த வேளையில் வெள்ளை வானில் வந்த ஆயுதபாணிகளால் இராணுவ நிலைகளுக்கு மிகசமீபமாகவும், இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள்ளும் வைத்து இவர்கள் கடத்தப்பட்டனர்.

முதல் நாள் 5 பணியாளர்களும், அடுத்தாள் 5 பணியாளர்களும் அதிரடியாக கடத்தப்பட்டனர். இவர்களைக் கடத்தியவர்கள் இராணுவத் துணைப்படையைச் சேர்ந்தவர்கள் என்றே நம்பப்படுகிறது.

கடத்தப்பட்டவர்கள் கண்கள் கட்டப்பட்டு, கைகள் கட்டப்பட்டு கடுமையாகத் தாக்கப்பட்டனர். பின்னர் இவர்களின் நீண்டதூர வாகனப்பயணத்தின் பின்னர் மட்டக்களப்பு - பொலன்னறுவை எல்லைப் பகுதியில் உள்ள தீவுச் சேனைப் பகுதியில் இயங்கிவரும் பாரிய துணைப்படை இராணுவ நிலைகளுக்கு கொண்டுசெல்லப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடத்தப்பட்டவர்களில் இரண்டு முன்பள்ளி ஆசிரியைகள் துணைக்குழுவால் விடுவிக்கப்பட்டனர். அந்தப் பகுதிக்கு வந்த ஒரு நபர் 'இவர்களைத் தெரியும் பிரச்சினை இல்லை' எனக் கூறியமையை அடுத்து வெள்ளை வானில் அழைத்துச் செல்லப்பட்டு இவர்கள் கடுமையாக அச்சுறுத்தப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

அடுத்த சில நாட்களில் இன்னொரு பணியாளர் துணைக்குழுவினரால் விடுவிக்கப்பட்டார். இந்த நிலையில் பல புதிய தகவல்கள் வெளிவரத்தொடங்கியுள்ளன.

கடத்திச்செல்லப்பட்டவர்களை முதலில் தனித்தனியாக தடுத்து வைத்திருந்தனர் எனவும், கடுமையான சோதனைகளுக்கு உட்படுத்தினர் எனவும் கூறப்படுகிறது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த பகுதி தீவுச்சேனை என்றே நம்பப்படுகிறது.

அங்கு தமிழில் மட்டுமன்றி சிங்கள, ஹிந்தி, இந்தியத் தமிழ் பேச்சுக்களையும் கேட்டதாக திரும்பிவந்த சிலர் தெரிவித்தனர்.

சமாதானப் பேச்சுக்கு புலிகள் இணங்கிய பின்னர் மீண்டும் புலிகளை சினமூட்டி போருக்கு அழைக்கும் தந்திரத்தை துணைக் குழுக்கள் மூலம் செய்ய சில சக்திகள் முனைகின்றன என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது.

முன்னையகாலக்கட்டங்களில் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும், அந்நிய புலனாய்வுச்சக்திகளும் தமிழ்துணைக் குழுக்களை அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பயன்படுத்தி வந்தன.

மட்டக்களப்பில் ராசிகுழுவையும் வவுனியாவில் புளொட் அமைப்பையும் யாழில் ஈ.பி.டி.பி அமைப்பையும், மன்னாரில் சில உதிரிக் குழுக்களையும் பிராந்திய இராணுவத்தளபதிகளும், புலனாய்வு அதிகாரிகளும் பயன்படுத்தி வந்தனர். ஆனால் தற்போது இந்த நிலை மாறிவிட்டது. புலிகளுக்கெதிராக ஒருங்கிணைந்த ஒரு படை அணியாக துணைப்படைகள் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன.

முன்னர் அங்கும், இங்கும் இயங்கிய துணைக்குழுக்கள் தற்போது நன்கு ஒருங்கிணைக்கப்பட்டு தமிழர்தாயகம் எங்கும் பரவி விடப்பட்டுள்ளனர். பிரதான தளமாக இக்குழுவுக்கு கிழக்கு இருந்து வருகிறது.

முன்பு இயங்கிய குழுக்களுடன், இந்தியாவில் இருந்து வருகை தந்த ஈ.என்.டி.எல்.எப். உட்பட பல உதிரிக்குழுக்களும் இயங்கிவருகின்றன.

அண்மையில் துணைக் குழுவிடம் இருந்து தப்பிவந்த சிறுவன் ஒருவன் தகவல் தருகையில், "பல பிரிவுகளாக பல இடங்களில் துணைக்குழுக்கள் இயங்கிவருகின்றன. உறுப்பினர்களுக்கு ஒருமாதகால ஆயுதப் பயிற்சி வழங்கப்பட்டுவருகிறது. அண்மையில் அக்கரைப்பற்றில் இருந்து வருகை தந்த 15 முஸ்லிம்கள் இந்தத் துணைக்குழுவிடம் ஆயுதப்பயிற்சி பெற்றுச் சென்றிருந்தனர்." என்று தெரிவித்திருந்தான்.

இவ்வாறு நன்கு ஒருங்கமைக்கப்பட்ட ஒரு படையணியாக இந்தத் துணைக் குழுப்படையணி இயங்கத் தொடங்கியுள்ளது. அது கெரில்லாப்பாணித் தாக்குதல்களைத் தொடர்ந்து நடத்தி வருகிறது. இலங்கை இராணுவமும், புலிகளும் முழுமையான மரபுவழி படையாணிகளாக மாறிவிட்ட நிலையில் இந்தக் கெரில்லாப் பாணித் தாக்குதல்கள் புதிய நெருக்கடியை சமாதான முயற்சியில் ஏற்படுத்தி வருகின்றன.

இந்த நிலைமையில் தான் இந்த கெரில்லாப் பாணித் துணைக்குழுக்களால் தமிழர் புனர்வாழ்வுக் கழகப்பணியாளர்கள் கடத்திச் செல்லப்பட்டனர். இந்த நெருக்கடியை ஆரம்பத்தில் 'புலிகளின் வேலை' என்று கூறிக்கொண்ட அரசு நிலைமை தமக்கெதிராக மாறுவதை உணர்ந்து கொண்டு தீவிர கவனம் செலுத்துவது போல பாவனை செய்யத் தொடங்கியுள்ளது.

இந்தத் துணைக்குழுக்களின் செயற்பாடுகளே 22, 23 ஆம் திகதிப்பேச்சுக்களில் முக்கிய இடத்தைப் பிடிக்கப்போகின்றன. அது ஒரு பெரும் சிக்கலாகவும் மாறிவருகிறது.

ரணில் ஆட்சிக்காலத்தில் புலிகளுக்கு வைக்கப்பட்ட பெரும் பொறியான கருணா குழுப் பிரச்சினை சிங்கள தேசத்துக்கு பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளது. தளநிலைமையை தலைகீழாக மாற்றிவிட்டிருந்தது.

புலிகளைப்பலவீனப்படுத்த முற்பட்ட சக்திகள் இன்று பலமிழந்து, பலவீனப்பட்டுப் போயுள்ளன.

கடும் விசனமடைந்துள்ள துணைக் குழுக்கள் கடத்தப்பட்ட பணியாளர்களுக்கு ஊறுவிளைவிக்க முற்படலாம்.

ஏனைய 7 பணியாளர்களின் விவரம் இதுவரை தெரியாமலேயே உள்ளது. இந்தக் கடத்தல் நாடகத்தின் பின்னணிச் சக்திகள் யார் என்று வெளிச்சமாகி வரும் நிலையில் உரிய நடவடிக்கையை எடுக்க சிங்களத் தலைமை தவறினால் பேச்சுக்கள் தடைப்படுவதையும், போர் அரங்குக்குள் இரு தரப்பினரும் தள்ளப்படுவதையும் தவிர்க்க முடியாது.

துணைக்குழுக்களா? சமாதானமா? அவசியம் என்பதை அரசு முடிவு செய்ய வேண்டும். இல்லையேல் மீண்டும் பழைய கதையான வேதாளம் முருங்கை மரத்தில் ஏறும்.

- கே. பி. -

# திருமண சிகிச்சை

'மெரிடல் தெரபி' என்பதற்கான தமிழ் விளக்கம் திருமண சிகிச்சை.

கணவன் - மனைவி இடையேயான பரஸ்பர நல்லிணக்கத்தைக் குறைவுபடாமல் பாதுகாக்கும் சிகிச்சை இது. அதாவது திருமணமாகும் புதுமணத் தம்பதிகளுக்கு இடையே சுமார் 3 மாத கால அளவிற்கு பிரச்சினைகள் ஏற்படாது.

பெரும்பாலும் இந்த சந்தோஷம் நீண்ட நாட்கள் நீடிக்காது. அதிக பட்சம் இரண்டே வருஷங்கள்தான். அதற்குப்பிறகு புதுமணத் தம்பதிகளுக்கு மத்தியில் பிரச்சினை பூதாகரமாகக் கிளம்ப வாய்ப்பிருக்கிறது.

கணவன் பண்ணும் சின்னத் தவறைக்கூட மனைவி பூதக் கண்ணாடியால் பார்ப்பாள். இதேபோல மனைவியின் குறையை கணவன் பெரிதுபடுத்திப் பேசுவான். விளைவு..., தம்பதிகளுக்கு இடையே சச்சரவுகள் ஆரம்பிக்கின்றன. அது ஒரு காலகட்டத்துக்குப் பின் விவாகரத்து நிலையில் கூடப் போய் முடியும் வாய்ப்பு இருக்கிறது. அந்த சமயத்தில்தான் திருமண சிகிச்சை தேவைப்படுகிறது.

கணவன் - மனைவி இருவரையும் ஒரே மேசையில் உட்கார வைத்து அவர்களிடையேயான பிரச்சினைகளின் பூர்வீகம், சச்சரவுக்கான காரண காரியங்கள் ஆகியவற்றை அலசி ஆராய்ந்து, தீர்வுகளை சொல்லி புரிய



வைப்பது திருமண சிகிச்சையின் தொடக்க நிலை.


தாம்பத்தியத்தில் சுமுக நல்லுறவு ஏற்படுத்துதல், கணவன் - மனைவியிடையே அன்பார்ந்த உறவு, சந்தேகமில்லாத நம்பிக்கை, ஒருவருக்கொருவர் மதித்து நடக்கின்ற மனப்பான்மை [illegible] ஆகியவை பரஸ்[illegible]

தாம்பத்திய சந்தோஷங்களுக்கு ஆதாரமாகத் திகழும் மேற்கண்ட அம்சங்களை தம்பதிகளின் மனசில் பசுமரத்தாணி போல் பதியுமாறு எடுத்துரைக்கப்படுவது திருமண சிகிச்சையின் இரண்டாவது நிலை.

'திருமணமென்பது ஆயிரங் காலத்துப் பயிர். உறவுகளைப் பரீட்சித்துப் பார்க்கும் களம் அல்ல' என்பதை முதலில் பெற்றோர்கள் உணர்ந்து கொண்டு செயல்படுவது அவசியம்.

பத்தில் ஒன்பது பெண்கள் கணவரின் அடி உதைகளுக்கு இடையிலும் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைத் தேடிப் பார்த்து, தோற்று, இறுதிக் கட்டமாகவே பிறரின் உதவியை நாடுகிறார்கள்.

ஆனால் கணவன்மார்கள் எடுத்த எடுப்பிலேயே தற்காலிகத் தீர்வைத் தேடிக்கொள்ள எத்தனிக்கிறார்கள். ஆண்களும் பொறுமைகாத்தால் விவாகரத்துக்கள் பெருகுவது பெருமளவு குறையும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொற்றுவியாதி அல்ல புற்று நோய்!

**கே: பெண். வயது 45. கடந்த வாரம் குளிக்கும் போது எனது இடது மார்பகத்தில் ஒரு உருண்டையான கட்டி இருந்ததை அவதானித்தேன். பாடசாலைக் காலத்தில்- ஒரு விபத்ததொன்றில் -எனது இடது மார்பகத்தில் மேசையின் முனை இடித்து இரத்தக் காயம் ஏற்பட்டது. இப்பொழுது வந்த கட்டி முன்னைய விபத்தினால் ஏற்பட்டதா? அல்லது புற்று நோய்க் கட்டியா? இனி நான் செய்ய வேண்டியது என்ன? மாதவிலக்குக் காலங்களில் எனது மார்பகத்தில் வலி ஏற்படுவதுண்டு. இது புற்று நோயின் ஆரம்பமா?**

ப: மார்பகங்களில் வரும் கட்டிகள் நல்லவையோ கெட்டவையோ அவை அகற்றப்படவேண்டியவை. 40-50 வயது காலத்தில் பெண்களுக்கு மார்பக புற்று நோய்கள் ஏற்படும் வாய்ப்பு அதிகம் என்று மருத்துவ ஆய்வுகள் கூறுகின்றன. மேலும் குடும்பத்தில் மார்பகப் புற்று நோயால் பாதிக்கப்பட்ட உறவுகள் இருந்தாலும் இது ஏற்படலாம். குழந்தைகள் இல்லாத பெண்கள், 30 வயதுக்கு மேல் தாயாகும் பெண்கள், மிகச்சிறு வயதில் பருவமடையும் பெண்கள், ஹார்மோன் மருந்துகள் உபயோகிக்கும் பெண்கள்- போன்ற சந்தர்ப்பங்களிலும் மார்பகப் புற்று நோய் உருவாக அதிக வாய்ப்புகள் உண்டு என்று ஆய்வுகளில் காணப்பட்டுள்ளது. அதே வேளையில் மார்பகத்தில் ஏற்படும் உங்களுக்கு நடந்தது போன்ற விபத்துகள், ஏன்பவற்றால் பின்னர் புற்று நோய்க் கட்டிகள் வராது. புற்று நோய் தொற்று வியாதியுமல்ல. மார்பக புற்று நோயாளிகளை பராமரிப்பவர்களுக்கு புற்று நோய் ஏற்படும் என்று தப்பான அபிப்பிராயங்கள் உலவுகின்றன. அதே போன்று - பாலூட்டும் தாய்மாருக்கு புற்று நோய் வராது என்பதும் தப்பான கருத்து. பாலூட்டும் தாய்மாருக்கு -மார்பகப் புற்றுநோய் ஏற்படும் வாய்ப்புகள் மிக குறைவு என்பதே உண்மை.



நீங்கள் காலம் தாழ்த்தாமல் ஒரு சத்திர சிகிச்சை நிபுணரின் ஆலோசனையை நாடவும். அவர் MAMMOGRAM, மற்றும் FINE NEEDLE BIOPSY என்கின்ற கட்டியின் உள்ளே உள்ள திரவத்தை ஊசி மூலம் உறிஞ்சி எடுத்து சோதிக்கும் வழி என்பவை மூலம் உங்கள் கட்டியின் தன்மையை அறிந்து அதற்கேற்ற சத்திர சிகிச்சையைச் செய்வார். ஒன்றை மட்டும் நினைவில் கொள்ளுங்கள் புற்றுநோய்க் கட்டியோ அல்லது சாதாரண கட்டியோ, மார்பகத்தில் ஏற்படும் எந்தக் கட்டியானாலும், அது அகற்றப்படவேண்டியது அவசியம்.

**கே: ஆண். வயது 40. நான் மிகவும் அமைதியானவன். ஆனால் கொஞ்சக் காலமாக அடிக்கடி சின்ன விஷயங்களுக்கு எனது சமநிலையை மறந்து- கோபம், ஆத்திரம், எரிச்சல் வருகின்றது. பஸ் கண்டக்டர் மீதிப் பணம் தராவிட்டால்-**

**பொருட்கள் வாங்க 'கியூவில்' நிற்கும் போது இடையில் ஒருவர் வரிசை மாறி புகுந்தால்-**

**வீட்டில் நான் சொன்னதை மனைவி, பிள்ளைகள் செய்யாவிட்டால்- பயங்கர கோபம் ஏற்படுகிறது.**

**முன்னர் இவை எல்லாம் எனக்கு எரிச்சலை தராதவை. எனக்கு நோய் ஏதாவது ஏற்பட்டுள்ளதா? இதனால் எனது PERSONALITY என்கின்ற ஆளுமைப் பண்பே முற்றாக மாறிக்கொண்டு வருகின்றது. ஆலோசனை வேண்டுகின்றேன்.**

ப: சினம், கோபம், ஆத்திரம், எரிச்சல் என்பவை எல்லாம் வெவ்வேறு மட்டத்தில் உள்ள ஒரே EMOTION என்கின்ற குணநலம். ஆனால் இவை எல்லாம் ஏற்படுவதற்கு ஒரு அடிப்படைக் காரணம்- நாம் எதிர்பார்க்கும் விஷயம்- நாம் நினைத்தபடி நடக்காததுதான். அதாவது EXPECTATION AND DISAPPOINTMENT எதிர்பார்ப்புதன் ஏமாற்றம் அளிக்கும் போதுதான் நம்முள்ளே உறங்கிக் கிடக்கும் கோபம் என்கின்ற மிருகம் ஆவேசத்துடன் வெளியேவருகின்றது.

எமக்கு வயதாக வயதாக, எமது உடல், எமது ஆரோக்கியம் என்பவை நலிந்து வருகின்றன. அது தவிர எமது நீண்டகால வாழ்நாள் அனுபவங்களின் மூலம் சில சில விஷயங்கள் இப்படித்தான் நடைபெற வேண்டும், சரியான விஷயம் இதுதான் என்ற மாதிரியான சில கொள்கைகளை சட்டங்களை நாமே எமக்கு உருவாக்கிக் கொள்கின்றோம். எமக்கு சரியாக இருக்கும் இவை, மற்றவர்களுக்கு சரியாக இருக்க வேண்டும் என்கின்ற நியதி இல்லை. எனவே அவர்கள் தங்களுக்கு சரி என்று நினைத்ததை செய்யும்போது இருசாரருக்கும் இடையில் ஒரு CONFLICT என்கின்ற மாறு கருத்து மோதல் உருவாகின்றது. இதன் விளைவுகள்தான் ஆத்திரம், கோபம், எரிச்சல் என்பவை. எமக்கு கீழ்மட்டத்தில் உள்ளவர்கள், நாம் அதிகாரம் செய்யக்கூடியவர்கள் என்றால் கோபம் ஆத்திரம் வருகின்றது. எமது மேல்மட்டத்தில் உள்ளவர்கள், எமது அதிகாரிகள், என்றால் எரிச்சல் வந்து மனதுக்குள் புகைக்கின்றது. இந்த வெளிப்பாடுகள் எமது ஆரோக்கியத்தை நிச்சயம் பாதிக்கின்றன.

STRESS என்கின்ற மன இறுக்கம் அதி உயர்இரத்த அழுத்தம், நீரிழிவு, இருதய நோய்கள் என்பவற்றுக்கு காரணமாக இருக்கின்றது. அத்துடன் நாற்பது வயது காலத்தில் ஆணுக்கும், பெண்ணுக்கும் SEX HORMONES என்கின்ற ஹார்மோன்களின் செயல்திறனில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. இவையும் எமது உணர்வுகளுக்கு (EMOTIONS) மேலும் தாபம் இடுகின்றன. எனவே உங்களுக்கு ஏற்பட்டுள்ள உணர்வுகளின் வேகம் ஒரு நோயல்ல. ஆனால் தியானம், சமூக சேவை போன்று மனதை ஆளும் செயற்பாடுகள் உங்கள் உணர்வுகளை கட்டுப்படுத்தும். அதேவேளையில் ஒரு முழு உடல் மருத்துவப் பரிசோதனையும் அவசியம்.

உணர்வுகள் எப்படி நோய்களைத் தடுக்கின்றனவோ, அவ்வாறே தைராய்ட் சுரப்பு நோய்கள், இரத்த அழுத்தம், நீரிழிவு, சில புற்றுநோய்களின் ஆரம்பக் குறிகள் கூட எமது உணர்வுகளுடன் விளையாடுகின்றன. சின்னச் சின்ன விஷயங்களில் உணர்ச்சி கொந்தளிப்பு ஏற்படுபவர்களுக்கு காலகெதியில் ஞாபக மறதி நோய் ஏற்படும். இவர்கள் ALZHEIMER'S DISEASE இல் பாதிக்கப்படுகின்றார்கள் என்று சமீபத்தில் மருத்துவ உலகம் கண்டிறிந்துள்ளது.

மூளையில் ஏற்படும் இந்த பயங்கர மறதி நோயின் முதல் வெளிப்பாடு உணர்வுகளின் கொப்புளிப்பா அல்லது உணர்வுகளின் தாக்கத்தினால் மூளையில் மாற்றங்கள் ஏற்பட்டு இந்த நோய் வருகின்றதா என்பது தெளிவாக அறியப்படவில்லை.

ஆனால் உணர்வுகளுக்கும் இந்த நோய்க்கும் ஏதோ ஒரு தொடர்பு உள்ளது என்பது நிச்சயம். எனவே மருத்துவ ரீதியில் உங்கள் கோபத்துக்கு எதுவித காரணமும் இல்லாவிட்டால்- மனவளப் பயிற்சிகள், தியானம், நல்லோர் இணக்கம், உடற் பயிற்சி, உணவுக் கட்டுப்பாடு என்பவை உங்கள் விஷயத்தில் உதவும் எனவும் நம்புகின்றோம்.

**கே: எனது வயது30. நான் திடகாத்திரமான- இது வரை எந்தவித நோயாலும் பாதிக்கப்படாத ஆண். இன்னும் திருமணமாகவில்லை. எனக்கு இரண்டு சகோதரிகள் உண்டு. பெரிய வருமானம் இல்லை. எனது சகோதரிகளை வாழ வைக்க பணம் தேவைப்படுகிறது. இதனால்- எனது சிறுநீரகம் ஒன்றை பணத்திற்கு விற்று எனது குடும்பப்பிரச்சினையைத் தீர்க்க எண்ணுகின்றேன். இப்படி சிறுநீரகத்தை கொடுப்பதால் எனக்கு பிற்காலத்தில்- குடும்ப வாழ்வில் பிரச்சினை ஏற்படுமா?**

ப: குடும்ப பிரச்சினையைத் தீர்க்க - உமது சிறுநீரகத்தை பிறருக்கு வழங்க முன் வந்திருக்கும் உம்மை முதற்கண் பாராட்டுகின்றேன். உமது கேள்வியில் பணத்திற்காக இதனைச் செய்வதாக எழுதியிருந்தீர்கள். பணத்திற்காக ஒரு சிறுநீரகத்தை விற்பது என்பதுதான் சரியான சொற்பிரயோகம். எப்படி என்றாலும்- உமது தியாகம் பாரட்டப்பட வேண்டியது ஒன்று.



மனிதர்களுக்குஇரண்டு சிறுநீரகங்கள் இருக்கின்றன. இவற்றில் ஒன்றைக் கொடுப்பதால் எதுவித தீமையும் விளையாது. ஆனால் சிறுநீரகத்தை கொடுத்தவருக்கு பிற்காலத்தில் சிறுநீரகப்பிரச்சினை ஏதாவது ஏற்பட்டு, சிறு நீரகம் இயங்காது விட்டால்- அவரும் இன்னொருவரின் சிறுநீரகத்தை எதிர்பார்த்து காத்திருக்கும் நிலை ஏற்படலாம். இப்படி நேருவது மிகமிக அபூர்வம் என்றாலும்- நடக்க மாட்டாது என்று சொல்ல முடியாது.

மற்றும் உம்மைப் பொறுத்தமட்டில் - உமது பணத்தேவைக்காகத்தான் உமது சிறுநீரகத்தை விற்க முன்வந்திருக்கின்றீர்கள். உமது சகோதரர், அல்லது பெற்றோர் சிறுநீரக வியாதியால் சிறுநீரகம் செயலிழந்து- கஷ்டப்பட்டு- சிறுநீரகம் கொடுக்கப்படவேண்டிய சூழ்நிலை கூட எதுவுமில்லை.

மேலும்- நீர் இளைஞர். நீண்டகால எதிர் காலம் முன்னால் இருக்கிறது. எனவே- இன்னும் கஷ்டப்பட்டு- உழைத்து உமது சகோதரிகளை கரையேற்ற வாய்ப்புகள் உண்டு. உமது சிறுநீரகத்தை இழந்துதான் சகோதரிகளை வாழ வைக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. உமது சகோதரிகளும்- தங்களுக்காக நீர் செய்யும் தியாகத்தை நிச்சயம் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். உண்மையில் உமது பிரச்சினை தீர இது இலகுவான வழி என்பதுதான் இங்கு நிதர்சனமான உண்மை.

இப்படி உங்களை போல் பிரச்சினைகளுக்கு இலகு வழிகளைத் தேடுபவர்கள் இருப்பதால்தான் உறுப்புகள் தானம் என்பது ஒரு வியாபார விஷயமாகிவிட்டது. இடைத் தரகர்களும்- மாபியா(MAFIA) போன்ற பாதாள உலக கும்பல்களும்- இந்த உறுப்புகள் தானம் என்கின்ற நல்ல விஷயத்தில் ஆதிக்கம் செலுத்துகின்றார்கள். உண்மையில் இந்த வியாபாரத்தில் தானம் செய்பவர்களைவிட இந்த இடைத் தரகர்கள் தான் பெரும் லாபம் ஈட்டுகின்றார்கள். எனவே உமது முடிவை மீள் ஆலோசனை செய்வது நல்லது.

**கே: பெண். வயது 30. திருமணமானவர். எனக்கு வெள்ளை படுதல் நோயுண்டு. பூப்பெய்திய பருவத்திலிருந்து இப்படியாக இருக்கிறது. ஆனால் சமீப காலமாக- உடலுறவு கொண்ட பின்னர்- இரத்தக் கசிவு கொண்டதாக வெள்ளை வெளியேறுகிறது. இது நோயா? ஆலோசனை தரவும்.**

ப: உங்கள் வயதில் பெண்உறுப்பு கசிவுகளில்- இரத்தம் இருந்தால் கவனம் எடுக்க வேண்டியது மிகவும் அவசியம். CERVICAL CANCER எனப்படும் கருப்பை வாய் புற்றுநோய்களின்- அறிகுறிகளில் உடலுறவுக்கு பின் இரத்தக் கசிவு ஏற்படுவது வழக்கம். மேலும் இவர்களுக்கு- மாதவிலக்கு காலங்களில் அதிகமாக இரத்தம் போவதுண்டு. ஆனால் சகல பிறப்புறுப்பு இரத்தக் கசிவுகள் யாவும் புற்று நோயின் அறிகுறியல்ல.

பெண் நோயியல் நிபுணரின் ஆலோசனை அவசியம். அவர் பிறப்புறுப்பு பரிசோதனை, PAP SMEAR எனப்படும்- கருப்பை வாய் கலங்களின் நோயியல் பரிசோதனை ஆகியவை மூலம் உண்மை நிலையைக் கண்டறிவார்.

சிலருக்கு CERVICAL EROSION எனப்படும்- கருப்பை வாய் அழற்சிகளினாலும் இப்படி ஏற்படலாம். இது புற்றுநோய் அறிகுறி இல்லாவிடிலும்- புற்றுநோய் அந்த இடத்தில் ஏற்படுவதற்கு வாய்ப்புண்டு. இப்படியான நிலையில்- CAUTERISATION என்ற மின்னெரிப்பு முறையில்- அந்த இடத்தை 'சுட்டு' சிகிச்சை அளிப்பார்கள். குணம் காணலாம்.


இலவச மருத்துவ ஆலோசனைகளை 'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார் டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஜயந்தமல்லிமாராய்ச்சி மாவத்தை
கொழும்பு - 14


---

# சுறுசுறுப்பான மூளைக்கு....

அடிக்கடி நீங்கள் பார்க்கும் நபராக அவர் இருப்பார், திடீரென்று அவருக்கு போன் செய்ய வேண்டிய நிலை ஏற்படலாம். அப்போது அவருடைய பெயர் தெரிந்தால் தானே, போன் நம்பரைத்தேடி எடுக்க முடியும். அப்படி, இப்படி பலவிதங்களில் நினைவுபடுத்திப் பார்ப்பார். ஆனால் பெயர் நினைவுக்கே வராது. கடந்த மாதம் தான் அந்த சினிமாவைப் பார்த்திருப்பீர்கள். ஆனால் அந்த சினிமாவின் பெயரும் உங்களுக்கு மறந்துபோய் விட்டதா?

இந்தநிலையில் நீங்கள் இருந்தால் உங்கள் மூளையின் செயல்திறன் மந்தமாகி இருக்கிறது என்று அர்த்தம். இது ஒன்றும் பெரிய விஷயம் இல்லையே என்று நீங்கள் கருதலாம். ஆனால் உங்களுக்கு நினைவாற்றல் குறையத் தொடங்கிவிட்டது என்பதை நீங்கள் உணர்ந்துதான் ஆக வேண்டும். நினைவாற்றலை மேம்படுத்த நீங்கள் நடவடிக்கைகளை எடுக்காவிட்டால் காலப்போக்கில் உங்கள் நினைவுத்திறன் குறைந்து கொண்டே போகும். மூளையை சுறுசுறுப்பாகவும் நினைவாற்றலை பெருக்கவும் மருந்து மாத்திரை என்று தேடி அலைய வேண்டியதில்லை. இதற்கென்று இருக்கும் சில பயிற்சிகளை செய்தாலே போதும் அதற்குரிய பயிற்சிக்கு 'நியுரோபிக்ஸ்' என்று பெயர். அந்தப் பயிற்சியில் சில வகைகளை இங்கு தருகிறோம்.

**வயதானவர்களுக்கு...**

* நன்றாக குளித்துவிட்டு கண்களை மூடிக்கொண்டே உடைகளை அணியுங்கள்.
* விரும்பும் சென்ட் எதையாவது பூசிக்கொண்டு, அதை நன்றாக முகர்ந்து கொண்டு பிடித்தமான பாடலை பாடுங்கள்.
* வலது கையைப் பயன்படுத்தி பல்துலக்குவது, ஷேவ் செய்வது, சாப்பிடுவது போன்றவைகளை செய்பவர்கள், மாறுதலுக்காக அந்த வேலைகளுக்கெல்லாம் இடது கையால் செய்ய வேண்டும்.
* வீட்டிற்குள் நின்று கொண்டு கண்களை மூடி வீட்டில் எந்தெந்த இடத்தில் என்னென்ன பொருட்கள் இருக்கின்றன? என்று உணர்ந்து சரிபாருங்கள். மணத்தை முகர்ந்து அந்த அறை சமையல் அறையா? படுக்கை அறையா? என்பதைக் கண்டறிந்து விடுங்கள். உடையின் வாடையைப் பார்த்து அது யாருக்குரியது என்பதை கண்டறிய முயலுங்கள்.
* கண்களை மூடிக்கொண்டு சாப்பிட முயற்சி செய்யுங்கள்.
* உங்கள் அலுமாரியை திறந்து ஒரு நிமிடம் மட்டும் [illegible] உள்ளே பார்த்தவைகளை ஒரு பேப்பரில் எழுதி சரிபாருங்கள். இந்த பயிற்சியை பலவிதங்களில் செய்து பாருங்கள்.
* புதிய விளையாட்டு, புதிய பொழுது போக்குகளில் ஈடுபடுங்கள்.

**பெண்களுக்கு....**

* கண்களை மூடிக்கொண்டு தலையை ஷாம்பு போட்டு கழுவுங்கள்.
* கூந்தல் அலங்காரத்திற்கும், மேக்- அப்பிற்கும் இடது கையை பயன்படுத்துங்கள். வழக்கமாக இடதுகையைப் பயன்படுத்துபவர்கள், மாறுதலுக்கு [illegible] கையைப் பயன்படுத்த வேண்டும்.
* கண்களை திறக்காமலே பூட்டில் சாவியை [illegible] திறக்க முயற்சி செய்யுங்கள்.

**குழந்தைகளுக்கு...**

* பதினெட்டு வயது முடியும் முன்பே சிறுவர்- சிறுமிகளிடம் புத்தகம் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்துங்கள்.
* பேப்பர்களை வெட்டி இணைப்பது, பிளாஸ்டிக் கட்டங்களை ஒன்றோடு ஒன்றாக சேர்த்து கட்டடங்களோ, பொருட்களோ உருவாக்குவது போன்றவைகளைச் செய்யலாம். இப்படிப்பட்ட செயல்கள் குழந்தைகளின் மூளையை சுறுசுறுப்பாக்கும்.
* குழந்தைகளுக்கு விருப்பமான பாடல்களைப் படித்து, நினைவில் வைத்து ஒப்புவிக்கவும் செய்ய வேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலர் மட்டும் பூமியில் இருங்கள்



"விழியில் விழுந்து இதயம் நுழைந்து உயிரில் கலந்துகொள்ளும் புனித உறவு காதல்" என்று கவிஞன் ஒருவன் கவி பாடி இருக்கின்றான். பெப்ரவரி 14 ஆம் நாள் அந்தக் காதலர்களுக்கே உரித்தானது.

காதல் என்பது இரு உயிர்களின் சங்கமம். இருவிழிகளின் பார்வைகள் சந்தித்து பயணிக்கும் ஒரு புனித யாத்திரை.

காதல் என்னும் புனிதத்திற்கு இற்றை வரை எந்தக் கவிஞனும், எந்த மேதையும் நிறைவான -சரியான விளக்கத்தைச் சொல்லவில்லை. அவரவர் தம் உள்ளத்தில் ஊற்றெடுக்கும் உன்னத உணர்வுகளைச் சொல்லிக்கொள்கிறார்கள்.

காதல் என்பது இன்று நேற்று முளைத்ததல்ல. ஆதாம் ஏவாள் காலத்தில் அதன் ஆரம்ப வேர்கள் இழையோடத் தொடங்கிவிட்டன.

இந்த உலகத்தின் உயிரோட்டத்துக்கு காரணம் ஒன்று காதல், இன்னொன்று உழைப்பு. இந்தக் காதல் மட்டும் இல்லையென்றால் மனித இனம் ஆதாம் ஏவாளோடு முடிந்திருக்கும். இந்த உலகத்தில் காதல் வயப்படாதவர்கள் யார் உள்ளார்? எங்கே காட்டுங்கள் பார்ப்போம்!

இளமையின் இனிமையான அந்த நாள்களின் நகர்வுகளில் இதயத்தின் ஒரு மூலையில் காதல் எனும் புனிதம் புதைந்திருக்கும். புதைந்திருக்கும் அந்தக் காதலைச் சிலர் தமக்குள்ளே குழிதோண்டிப் புதைத்துவிடுகிறார்கள்.

சிலர் அதனை வெளிக்கொண்டு வந்து காதல் எனும் புனித உறவில் இணைந்துகொள்கிறார்கள். இதயங்கள் இடம்மாற்றப்பட்டு உயிரில் கலந்த உறவுகளாய் காதல் வானில் சிட்டாய் சிறகடிக்கிறார்கள்.

இந்த மண்ணில் உதிக்கும் காதலுக்கு எத்தனையோ இடர்கள், தடைகள். காதல் என்றாலே அது ஒரு கசப்பு என நினைப்பவர்கள் இன்றும் எம் சமூகத்தில் இருக்கத்தான் செய்கிறார்கள்.

காதலில்அப்படி என்ன மகா குற்றம் இருக்கிறது? இரு உள்ளங்களின் பரிபூரண விருப்பத்தில் ஈருயிரும் ஒருயிராய் கலந்து ஒருவரைஒருவர் புரிந்து கொண்டு தம் வாழ்வைத் தாமே தீர்மானிப்பதில் என்ன தவறு?

காதலுக்குப் பள்ளி இல்லை. அது சொல்லிக்கொடுக்கும் பாடம் அல்ல. காதலுக்கு கண்களும் இல்லை என்று கவிஞர்கள் சொன்னார்கள். சாதி, மதம், இனம், மொழி என்பவற்றைக் கடந்து நிற்கும் காற்றைப் போலத்தான் காதல் இருஉள்ளங்களை அன்புப் பிணைப்பில் இணைத்துக்கொள்கிறது.ஆனால், சம்பிரதாயங்களும் சடங்குகளும் அத்தகைய உள்ளங்களை உதாசீனம் செய்துவிடுகின்றன.

காதல் எனும் உணர்வலையில் சிக்கியவர்கள் சிலர்தான் பக்குவமாகக் கரைசேர்ந்துள்ளார்கள். பலர் கரை சேராமலே நடுக்கடலில் நசுங்கிப்போகிறார்கள். சாதி, மதம், இனம், பணம் என்று அடுக்கடுக்கான விடயங்களை காரணங்காட்டி அவர்களை நசுக்கி விடுகிறார்கள்.ஆனால், நசுங்கிப்போவது அந்த இருஉயிர்களின் உன்னதமான உள்ளங்கள். அந்த இரு உள்ளங்களின் அடிமனதில் ஆழமாய் ஊற்றெடுத்த உணர்வின் அன்புக் காதல் ஒருபோதும் மங்கிப்போகாது. மறைந்து போகாது அவர்களின் மனதில் பசுமரத்தாணி போல பக்குவமாய் பதிந்திருக்கும்.

காதலர்கள் வாழ்வதில்லை. கல்லறை சொல்கிறது. காதல் மட்டும் சாவதில்லை. காவியம் சொல்கிறது. அம்பிகாவதி - அமராவதி எனும் காதல்ஜோடிகளைத்தான் கல்லறைக்கு அனுப்பமுடிந்தது. ஆனால், காதலை அனுப்பமுடியவில்லை; அனுப்பவும் முடியாது.

காதல் செய்யும் உள்ளங்களே! இந்தப் பிரபஞ்சம் உங்களுடையது. இந்த வானம் உங்களுடையது. நீங்கள் காதலியுங்கள். முதலில் காதலைக் காதலியுங்கள். காதல் என்ற போர்வையில் அதன் புனிதத் தன்மைதனை புதைகுழியில் போட்டுவிடாதீர்கள்.

காமத்துக்காக மட்டும்தான் காதல் என்றால் அதனைக் காதல் எனும் புனித பயணத்தால் அடைய நினைக்காதீர்கள்.காமமும் அன்பும் பின்னிப் பிணைந்திருக்க வேண்டும்.



இதில் காமத்துக்கு முக்கியத்துவம் கொடுக்காதீர்கள். உங்கள் காதலை ஜெயிக்க வேண்டுமானால் எதையும் இழக்கத் தயாராக இருங்கள்.

இன்று காதலைச் சிலர் கொச்சைப்படுத்தியும் அதன் புனிதத்தைக் களங்கப்படுத்தியும் வருகிறார்கள்.

ஏ சமூகமே! காதல் என்பது வெறும் கடைச் சரக்கல்ல. அதன் அடிச்சுவட்டினை எவராலும் அழித்துவிடமுடியாது. சாதி என்றும் மதம் என்றும் காதலர்களைப் பிரித்து வேடிக்கை பார்க்கும் கூட்டமே. இன்றோடு விட்டு விடுங்கள் உங்கள் வக்கிரத் தன்மைதனை.

காதல் என்னும் பாதையில் இணைந்த பல காதலர்களை உங்கள் வரட்டுக்கௌரவத்தால் பிரிக்கநினைக்காதீர்கள். அப்படிச் செய்தால் காதலிப்பவர்கள் நிறுத்திவிடுவார்களா? காதல் தான் மரித்துப்போகுமா? அப்படிக் காதலும் காதலர்களும் மரித்துப்போவதென்றால் அது அம்பிகாவதி அமராவதியுடன் முடிந்திருக்கும்.

கடவுளின் பெயரைச் சொல்லிப் பல ஆசாமிகள் கொள்ளையடிக்கிறார்கள் தான். அதற்காக கடவுளே கூடாதவன் என்று நாம் ஒதுக்கிவிடமுடியாது. அதுபோலத் தான் காதல் என்ற போர்வையில் சிலர் தவறிழைக்கிறார்கள். அதற்காகக் காதலர்கள் யாவரும் தவறானவர்கள் என்று நினைத்துவிட முடியாது.

இந்த பூமி, இந்தக் காற்று ஏன் இந்தப் பிரபஞ்சம் இயங்கும் வரை காதல் எனும் புனிதம் இயங்கிக்கொண்டேயிருக்கும்.

இந்தக் காதலுக்குப் பூமியில் பிறக்கும் அனைத்து உயிர்களும் உருவம் கொடுக்கும். காதலர்களே! இந்த மண்ணில் காதலியுங்கள்.அதற்கு முன்னால் உங்கள் காதலை நேசியுங்கள். பின்னர் காதலைக் காதலியுங்கள்.

காதலர் மட்டும் பூமியில் இருங்கள். மற்றவர் எல்லாம் தொலைந்து விடுங்கள் என்றான் கவிஞன். ஆதலால் நீங்கள் மண்ணில் வாழத் தகுதியானவர்கள். அந்தத் தகுதியைக் கொடுத்தது காதல்தான் என்பதை மறந்துவிடாதீர்கள்.

- எஸ்.கவிதரன் -


## சுடர்ஒளி தினசரி / வாரமலர் விளம்பர கட்டணங்கள்

| பத்திரிகை | முழுப்பக்கம் | | அரைப்பக்கம் | | கால்பக்கம் | | Col Cm | | Special Rate | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கலர் | கறுப்பு / வெள்ளை | கலர் | கறுப்பு / வெள்ளை | கலர் | கறுப்பு / வெள்ளை | கலர் | கறுப்பு / வெள்ளை | கலர் | கறுப்பு / வெள்ளை |
| சுடர்ஒளி தினசரி | ரூ. 47, 600/- | ரூ. 26, 000/- | ரூ. 27, 000/- | ரூ. 16, 200/- | ரூ. 13, 500/- | ரூ. 8, 100/- | ரூ. 100/- | ரூ. 60/- | ரூ. 85/- | ரூ. 45/- |
| சுடர்ஒளி வாரமலர் | ரூ. 45, 000/- | ரூ. 30, 000/- | ரூ. 23, 250/- | ரூ. 15, 680/- | ரூ. 11, 760/- | ரூ. 7, 840/- | ரூ. 147/- | ரூ. 98/- | ரூ. 122/- | ரூ. 75/- |

★ தொடர்ச்சியான 2500 Col Cm (Contract) ஒப்பந்த விளம்பரங்களுக்கு மட்டுமே பொருந்தும்.

★ முன்பக்க விளம்பரங்களுக்கு 50%மும், மற்றைய குறிப்பிட்ட பக்கங்களுக்கு 25%மும் மேலதிகமாக அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# கலக்கல்

வதனி

வித்தியாசமான படம்



சின்னப் பொடியன் என்றாலும் உலக நடப்பை தெரிந்துகொள்ள பேப்பர் வாசிப்பது உத்தமம் தான். ஆனால் இந்த நேரத்தில் இது தேவையா? ஆனாலும் இது ஓவரப்பா......



ஆஹா... ஒன்று போதாதென்று கணினி மூலம் கலக்கி எடுக்கப்பட்ட இன்னொரு படத்தையும் போட்டு தொலைச்சிருக்காங்கடா என்று அருகே உள்ள படத்தைப் பார்த்து நீங்கள் ஆதங்கப்படுவது தெரிகிறது. ஆனால் இது எந்தவிதமான கணினி கைங்காரியங்களும் இல்லை. உண்மையான படம் தான். யானைகளில் ஆசிய யானை ஆபிரிக்க யானை என்று இருக்குதல்லவா? இதேபோல் இதுவும் குள்ளயானை. இதுவும் ஆசிய-ஆபிரிக்க காடுகளில் இருக்கும் யானைதான். ஆனால் மிகவும் அரிதாக உலகில் மொத்தமே ஆயிரம் யானைகள் அல்லது 1500 யானைகள் தான் இருக்கின்றனவாம்.

இவைகளின் ஆகக்கூடிய உயரமே 5 அல்ல 6 அடிதானாம். மலேசியாவின் போர்ணியோ தீவுக் காட்டுப்பகுதியில் இந்த யானைகளை தாராளமாக காணலாம். இந்த இன குள்ள யானைகள் வேட்டையாடப்படுவதன் மூலம் இந்த இனமே தற்போது அழிந்து போக்கூடிய அபாயம் ஏற்பட்டிருக்கிறதாம்.

யானை என்றால் அப்பாடா எம்மாம் பெரிய உருவம் என ஆச்சரியப்படும் எங்களுக்கு இந்த மினி யானைகளின் குட்டிகளை தூக்கி கக்கத்திலே வைத்து தென் ்லையை ஊட்டி விடலாம் பாருங்கள்.



கணினி கலக்கல்

பறவையா - விமானமா? அல்லது பறவையைக் கொண்டு தயாரிக்கப்பட்ட விமானமா? அல்லது விமானத்தை கொண்டு தயாரிக்கப்பட்ட பறவையா? எதுவுமே இல்லை இது கணினி மூலம் தயாரிக்கப்பட்ட கலக்கல் படம்.

## S.M.S சிரிப்பு

கண்மணி அன்போடு காதலன்
நான் அனுப்பும் S.M.S
பொன்மணி உன் செல்லில்
சிக்னல் கிடைக்குதா...?
எனது செல்லில் கிடைக்குது
உன்னை எண்ணிப் பார்க்கையில்
மெசெஜ்கள் கொட்டுது....
அதனை அனுப்பிப் பார்க்கிறேன்
காசு வெட்டுது
மனிதர் புரிந்து கொள்ள
இது உதவாத மெசெஜ் அல்ல
அதையும் தாண்டி மட்டமானது.

நண்பா... உன்னோட ஆள் முகம் கொடுத்து பேசவே மாட்டேன் என்கிறாளே - என்று புலம்பித் திரிகிறாயே... எதற்கும் ஒரு தடவை உனது பல்லை மினிக்கிவிட்டு பேசிப் பாரேன். அவளில் மாற்றம் தெரியலாம்.





## ஜோக்



விலைமாது ஒருவர் வயோதிபர்களைப் பராமரிக்கும் நிறுவனம் ஒன்றுக்கு வந்தார். அங்கே இருந்த அதிகாரியிடம் தான் பாவம் செய்து சம்பாதித்ததில் பரிகாரமாக கொஞ்சப் பணத்தை அந்த நிறுவனத்துக்கு நன்கொடையாக அளிக்க விரும்புவதாக சொன்னார்.

ஆனால் அந்த நிறுவன அதிகாரியோ... இது நீங்கள் தவறு செய்து சம்பாதித்த பணம். ஆகவே இதனை நாம் பெற்றுக் கொள்ளலாமா என்பதை இங்கே தங்கியிருக்கும் சில வயோதிபர்களிடம் கேட்டுவிட்டுத்தான் பெற்றுக் கொள்ள முடியும் என்று சொல்லிவிட்டார். அந்த பெண்ணும் மிகுந்த மனவருத்தத்துடன் திரும்பிச்சென்றுவிட்டாள்.

இரண்டு நாட்களின் பின் மீண்டும் வந்த அந்த விலை மாது, என்ன முடிவு செய்திருக்கிறீர்கள் என்று அந்த தொண்டு நிறுவன அதிகாரியிடம் கேட்டாள்.

அவர் சொன்னார், எங்கள் நிறுவனத்தில் தங்கியிருக்கும் சில வயோதிபர்களிடம் இது பற்றிக் கேட்டேன். அவர்களில் பலர், நீங்கள்கொடுக்க இருப்பது ஏற்கனவே தாங்கள் உங்களிடம் தந்த பணம் தான் என்றும் எனவே நீங்கள் தரும் பணத்தை வாங்கிக் கொள்வதில் தப்பே இல்லை என்றும் சொல்லி விட்டார்கள் என்றார் [illegible]



"சர்வரை சாட்சி சொல்ல அழைச்சது தப்பாப் போச்சு"

"ஏன்?"

"நீதிபதி 'ஆர்டர் 'ஆர்டர்' என்றதும் பழக்க தோஷத்தால 'என்ன் ஐட்டம் வேணும் சார்' என்று கேட்க ஆரம்பிச்சுட்டானே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பித்தன் பதில்கள்



சி. தீபாளினி- புதுக்குடியிருப்பு.
**கே: டியர் பித்து! பெண்கள் தெருவால் போகும்போது - ஆண்கள் நாய் -பேயாக அலைகிறார்களே! அழகில் மயங்கியா... அல்லது அன்பில் மயங்கியா?**
ப: அடடா.. இந்த காலப் பசங்களுக் கெல்லாம்.. அழகாவது... அன்பாவது..



ஏதாவது சந்தர்ப்பம் கிடைச்சால் சப்பித் துப்பிவிடலாமா என்று தான் அலைகிறார்கள்... அதிலையும் அவர்கள் இப்ப எல்லாம் கோழி குருடா இருக்கிறதைப் பற்றி கவலைப் படுவதே கிடையாது. குழம்பு ருசியா இருந்தா... O.K...

எஸ். மோகனதாஸ்- முறிகண்டி.
**கே: அன்புடன் பித்தா! வாய் விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும் என்கிறார்கள். அதேவேளை பொம்பளை சிரிச்சா. போச்சு புகையிலை விரிச்சா போச்சு என்றும் சொல்கிறார்கள். இதில் எதனை நம்புவது?**
ப: கண்ணு.. சிரிப்பிலே சில பல விதங்கள் இருக்கு... வடிவேலோடை நடிப்பை பார்த்து சிரித்தால்-அது வயிறு குலுங்கும் சிரிப்பு, விவேக்கின் கருத்துக்களை கேட்டுச் சிரித்தால் அது சிந்தனைச் சிரிப்பு, நமீதாவைப் பார்த்துச் சிரித்தால் அது ஜொள்ளு சிரிப்பு, நயன் தாராவைப் பார்த்துச் சிரித்தால் அது அசட்டுச் சிரிப்பு... இதேபோல் வாய்விட்டு குலுங்கிக் குலுங்கிச் சிரித்தால் அது உடம்புக்கு நல்லது. ஆனால் பெண்கள் வாயைத் திறந்தால் அது மயக்கும் சிரிப்பு... பிறகென்ன புகையிலை விரிச்ச மாதிரித்தானே!

க.கல்பனா- மல்லாவி.
**கே: பித்தா! நீர் என்ன அதிகம் ஜோக் அடிக்கிறீர்... சுடர் ஒளி வாசகர்களை மயக்கும் ஐடியாவா?**
ப: சே... அப்படி எல்லாம் இல்லை. எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டுமே அன்றி வேறொன்றும் அறியேன் பராபரமே என்ற வார்த்தையின் படி நடப்பவன்...

மா.மரிஸ்டா-வலையன் மடம்.
**கே:பித்தா..இலங்கைக்கு சமாதானம் கிடைப்பதை பற்றி என்ன நினைக்கிறீர்?**
ப: சாமி வரம் கொடுத்தாலும்.. சாமியை சுற்றி இருக்கும் பூசாரிகள் வரத்தைப் பெற விடவே மாட்டார்கள். பிறகு எப்படி?

சி. திலீப் - வள்ளியபுனம்.
வி. மதன்- வவுனியா.
**கே: கறையான் ஏறாத மரம் என்ன மரம்... சொல்லும் பார்ப்போம்...**
ப: ஆ... ஆ... தீவிரமாக சிந்தித்ததில் ... வாழைமரம்.

வி.ஜெயகரன்- ஸ்கந்தபுரம்.
**கே: பித்து உம்மை எனது மாமா வாக்க விரும்புகிறேன். இது நடை பெறுமா?**
ப: ஜெயகரன்- ஏற்கனவே வி.மதன்- வவுனியா என்ற நபர் தங்கள் பக்கத்து வீட்டு பெண்ணை கணக்குப் பண்ண எனது உதவியை நாடுகிறார். இப்படியே பார்த்தால் நான் ஏற்கனவே மாமாவோ என்று பயமாக இருக்கிறது.

ரு. கோம கிருஷ்ணா. சுதுமலை.
**கே: பித்தா உங்களுக்கு பிடித்த பாடல், படம், நடிகர்கள் கூறும்.**
ப: குத்துப்பாட்டென்றால்- பரமசிவன் படத்தில் வரும் - ஆசதோச அப்பள வடை
காதல் பாடல் என்றால்- ஆறு படத்தில் வரும் -பார்க்காத என்னை பார்க்காத...
சோகப்பாடல் என்றால்- தவமாய் தவமிருந்து படத்தில் வரும் வரும்- ஒரே ஒரு ஊரக் குள்ளா.

இ.ஜெனிற்றா- புளியங்குளம்.
**கே: அன்பின் பித்தா! நீர் காதலைப் பற்றி என்ன நினைக்கிறீர்?**
ப: காதல் என்பது உடம்பிலே வரும் கடியைப் போன்றது..
சொறியச் சொறிய நல்லாய் இருக்கும். சொறிந்து முடிந்தபின் பார்த்தால் அந்த இடத்தில் நகம் கீறி புண் வந்திருக்கும். அதே போலத்தான் காதலும். காதலிக்கும் போது நல்லாத்தான் இருக்கும். காதலித்த பின்பு.. மனம் எல்லாம் புண்ணாகிவிடும்.

எஸ்.குமார்- கோணாவில்.
**கே: பித்தா! பெண் என்றால் பேயும் இரங்கும் என்கிறார்களே! இது மெய்யா.. பொய்யா?**
ப: மெய்... ஏனென்றால் இனம் இனத்துக்கு இரங்காதா என்ன?

எஸ். செல்வி- பள்ளிக்குடா.
**அன்பின் பித்துக் குட்டி! உயிர் என்பது பொதுவானது தானே! ஒரு எறும்பு இறந் தால் அதைப்பற்றி எவரும் கவலைப் படுவதே இல்லை. ஆனால் ஒரு மனிதன் இறந்தால் அதற்கென்று தனி முக்கியத் துவம் கொடுக்கிறோம். ஏன்?**
ப: என்ன நெனச்சுக் கொண்டிருக்குது இந்த பொண்ணு. அப்படி எண்டால் குத்தற நுளம்பையும், மூட்டைப் பூச்சியையும் அடிச்சுக் கொன்று விட்டால் அன்று முழுக்க அதையே நினைச்சுக் கவலைப்பட சொல்லுதா? கடிக்கவாற பாம்பையும், பூரானையும் அடிச்சுக் கொன்றுவிட்டால் அதுக்கு அஞ்சலிக் கூட்டம் நடத்தச் சொல்லுதா? தின்னுறதுக்கு வெட்டுற ஆட்டுக்காகவும், மாட்டுக்காகவும், கோழிக்காகவும் திவசம் நடத்தச் சொல்லுதா? சிறு பிள்ளைத் தனமா அல்லோ இருக்கு..



**கே: பித்தா! காதலர் தோல்வி அடைந்தால் தாடி வளர்க்கலாமா? தண்ணி அடிக்கலாமா? அல்லது தற்கொலை செய்யலாமா?**
ப: இதிலே எதுவும் வேண்டாம். பேசாமல் இன்னொரு பெண்ணை கணக்குப்பண்ணும்..

வ.அழகன்-வெல்லாவெளி.
**கே: பித்தா! ஒரு பெண் என்னைக் காணும் போதெல்லாம் கல்யாணம்தான் கட்டிக்கிட்டு ஓடிப் போலாமா... இல்ல பிள்ளையைத் பெத்துக்கிட்டு ஓடிப் போலாமா.. என்று பாடுகிறாள். நான் என்ன பதில் சொல்ல?**
ப: கட்டினா இவளை கட்டனும்டா.. இல்ல இவளை கட்டினவன் காலை தொட்டுக்கும்பிடனுண்டா என்று பாடுமேன்...

பாலசிங்கம் செல்வி- கல்மடுநகர்.
**கே: பித்தா! கடவுள் உங்கள் முன்தோன்றினால் - என்ன வரம் கேட்பீர்கள்?**
ப: யுத்தமில்லாத உலகம்...
சத்தமில்லாத ஆட்டோ...
கையை ஓங்காத மனைவி..
கண்ணீர் விடாத பெண்...
இப்படி இன்னும் பல... கேட்கவேண்டும். என்று ஆசை.. ஆனால் எனது LIST ஐ பார்த்ததும் கடவுள் எஸ்கேப் ஆகிவிடுவார்.

ஏ. வாசுகி- கிராண்ட்பாஸ்.
**கே: பித்தா! எனது அபிமான நடிகர் அஜித்தின் பரமசிவன் பார்த்தீரா...? விஜய், ரஜனி படம் என்றால் விமர்சித்து தள்ளுவீர்... இதற்கு மட்டும் சத்தமே காணோமே...**
ப: ஐயய்யோ... நான் சினிமா நடிகர்களுக்கு வால் பிடிக்கும் ஆள் இல்லை. பரமசிவன் பற்றி பெரிதாகச் சொல்ல ஏதும் இல்லை. அதனால் 'கம்' என்று இருந்து விட்டேன். அஜித் - வாசு கூட்டணி என்று எதிர்பார்ப்புடன் போனேன்.. ஆனால்.. கதையிலே ஏகப்பட்ட ஓட்டை, விவேக் வேஸ்ட், லைலா... பிதாமகன் கரக்டரில் மறுபடி நடிக்கிறார்... அஜித்தும்- லைலாவும்... நடன அசைவுகள்.. படுமோசம்... பாடல்களும், ஆக்ஸன் கிராபிக்ஸ்களும், தான் படத்தை காப்பாற்றி இருக்கின்றன. திருமணத்துக்கு விடியோ எடுப்பவர்களுக்கு நல்லதொரு பாட்டு தங்கக்கிளி ஒன்று, பழைய பாடல் பாணி என்றாலும் ஆசை தோசை பாடல் ஆட்டம் போட வைக்கிறது. மற்றப்படி பி.வாசு ஒரு பாட்ஷா மாதிரி, சந்திரமுகி மாதிரி தருவார் என்று போனால் ஏமாற்றம். அஜித் மெலிந்து.. மீசை எடுத்து.. ஆங்கில நடிகர் போல் இருக்கிறார் முன்னேற்றம்...

> **பித்தன் மீது பித்துக் கொண்ட வாசகர்களுக்கு:-**
> பித்தனிடம் நீங்கள் எத்தனை கேள்விகளையும் கேட்கலாம். தரமான கேள்விகளுக்கு பித்தன் பதில் அளிப்பான். நீங்கள் அனுப்பும் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி:-
>
> 
>
> பித்தன் பதில்கள்
> 'சுடர் ஒளி வாரஇதழ்'
> 85, ஜெயந்த மல்லிமாராய்ச்சி மாவத்தை,
> கொழும்பு - 14

மு.வசந்தன்- வாரியபொல.
**கே: பித்தா! ஒரு பெண்ணிடம் அடிவாங்குவதை பெருமையாக சொல்கிறீரே... உமக்கு வெட்கம், மானம், ரோஷம், சூடு, சொறணை எதுவுமே இல்லையா?**
ப: 1) நான் பெண்ணிடம் அடிவாங்க வில்லை.. எனது பெண்டாட்டியிடம் தான்



வாங்குகிறேன்.
2) நீர் கேட்ட வெட்கம், மானம்,(ECT, ECT) எல்லாம் இருந்தன திருமணத்துக்கு முன். இப்போது இல்லை. இது எனக்கு மட்டுமல்ல திருமணம் முடித்த எல்லா ஆண்கள் பாடும் இதுதான்.
3) யோவ்.. மற்றவனெல்லாம்... தெருத்தெருவா, செருப்பாலையும், விளக்கு மாத்தாலையும் வாங்குறான்... அவனை எல்லாம் விட்டுட்டு என்னட்ட வந்தீட்டீர். போய்யா போ.....

# வினோதமான விவாகரத்து....

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட்டிருக்குமோ என்று அவனுள் ஒரு வரி எண்ணம் ஓடியது.

இதே போல் அடுத்தடுத்து வந்த இரவுகளும் வீணாயின. இல்லை இது வேறு ஏதோ சிக்கல் என்று புரிந்து போனது.

சுசித்திராவை அழைத்துக் கொண்டு டாக்டரிடம் போனான். தனியறைக்குள் இரண்டு நாட்கள் சுசித்திராவை பரிசோதித்த டாக்டர், அடுத்தடுத்து பல அணுகுண்டுகளை வீசி அவனை பலமாகவே கலங்கடித்துவிட்டார்.

''இதோ பாருங்க சரவணன், உங்க மிஸிஸ் இன்னும் வயசுக்கே வரலை! அவங்களோட பெண் உறுப்பில வளர்ச்சி இல்லை. உடலுறவுக்கும் குழந்தைபெறுவதற்கும் வாய்ப்பே இல்லை! இன்னொரு முக்கியமான விஷயம்.... அவங்களோட வலது கிட்னி பெயிலியரா இருக்கு. ஓவரில கேன்சர்... அதனால ஓவரியை ஆப்பிரேஷன் பண்ணி எடுக்கணும்... கூடிய சீக்கிரம் நீங்க அவங்களை ஆஸ்பத்திரியில் அனுமதிப்பது நல்லது!''

ஆடிப்போனான் சரவணன். இடி மேல் இடியாக இருக்கிறதே! இத்தனை குறைகளோடு உள்ள பெண்ணையா என் தலையில் கட்டி விட்டார்கள்? அடப்பாவிகளா! வாழ வேண்டிய வயதில் இத்தனை கொடுமைகளா?

கொதித்துப் போனான் சரவணன். சுசித்திராவை அவன் திரும்பிக்கூடப் பார்க்க வில்லை. விடுவிடு வென்று நடக்க ஆரம்பித்தான். பதறிப் போன அவள், அவன் பின்னாலே ஓடி வந்தாள்.

''என்னங்க டாக்டர் என்ன சொன்னார்? ஏன் என்னை விட்டுப் போறிங்கள்?''

சடன் பிரேக்கடித்து நின்றான். கோபமாகக் கேட்டான்.

''உன் உடம்பிலே இத்தனை வியாதிகள் இருக்கிறது உனக்குத் தெரியாதா? ஏன் நடிக்கிறே? நீ வயசுக்குக் கூட வரலையாமே? பின்னே எப்படி உங்கப்பன் உன்ன என் தலையில கட்டினான்?''

''அது மட்டும்தாங்க எனக்குத் தெரியும்! கல்யாணம் பண்ணிவைச்சா சரியாப்போயிடும் என்று சில பேரு சொன்னத நம்பித்தான் எங்கப்பா பண்ணி வச்சார்! வேற எதுவும்... சத்தியமா எனக்குத் தெரியாதுங்க!'' அழத் தொடங்கினாள்.

''சனியனே! என்னோட வராதே உங்கப் பன்கிட்டே போ... எங்கேயோ போ.... தொலைஞ்சு போ! எனக்கும் உனக்கும் எல்லாம் அறுந்து போச்சு! நீ யாரோ நான் யாரோ?'' திரும்பிப் பார்க்காமல் நடந்தான் சரவணன்.

ஒரு வருடம் ஓடியே போயிற்று. இந்த நாட்களில் சுசித்திராவுக்கு கிட்னி ஆப்ரேஷனும், ஓவரி ஆபிரேஷனும் நடந்து முடிந்தன. அம்மாவின் வீட்டில் நடை பிணமாய் நாட்களை நகர்த்திக் கொண்டிருந்தாள்.

சரவணன் குடும்ப நலக்கோர்ட்டை அணுகி, நீதிமன்றம் மூலமாக விவாகரத்து நோட்டீஸ் அனுப்பி வைத்திருந்தான். சுப்பிரமணியம் மனம் கலங்கிப்போனார். தனது ஒரே பெண்ணின் வாழ்க்கை இப்படி ஆகிவிட்டதே என்று நொந்து போனார்.

எப்படியாவது இதை தடுத்து நிறுத்த வேண்டும். வக்கீலைப் போய்ப் பார்த்தார்.

''ரொம்ப [illegible] பிரமணியம்! கேஸ் நம்ம பக்கம் ரொம்ப வீக்கா இருக்கு! பார்க்கலாம்!''

வழக்கு விசாரணைக்கு வந்தது.

நீதிபதி தனது தீர்ப்பில்-

''சுசித்திரா வயதுக்கு வரவில்லை என்பதையே மறைத்து திருமணத்தை நடத்தி இருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது. சுசித்திரா தாம்பத்திய வாழ்க்கைக்குத் தகுதி இல்லாதவர் என்பதால் சரவணனின் நியாயமான கோரிக்கையை ஏற்று இந்த கோர்ட் விவாகரத்து வழங்குகிறது!''

தீர்ப்பு வாசிக்கப்பட்டதும் சுசித்திரா கதறி அழுதாள். மனசு கனத்துப்போன சரவணன் [illegible] வெளியேறினான்.

# சானியாவுக்கு ஏற்பட்ட மார்க்கட்

டெனிஸ் உலகில் 'ஜெட்' வேகத்தில் முன்னேற்றம் கண்டு வரும் இளம் வீராங்கனை சானியா மிர்சா.

இதன் காரணமாக, இந்திய விளம்பர நிறுவனங்கள் 'சானியா...! சானியா...!' என்று அவரின் புராணம் பாடி வருகின்றன.

விளைவு, சானியாவின் விளம்பரச் சம்பளம் ரு.1.5 கோடிக்கு எகிறிவிட்டது. இந்த வருட ஆரம்பத்தில் இருந்ததை விட இது 30 மடங்கு அதிகம்.

இந்திய விளையாட்டு பிரபலங்களில் சச்சினுக்கு அடுத்த இடத்தை சானியா பிடித்துள்ளார்.

'இந்த அளவு பணம் கொடுத்து எந்த நிறுவனம் சானியாவை ஒப்பந்தம் செய்ய முன்வரும்' என்று இந்திய விளையாட்டு நிறுதனத்தின் முத்த அதிகாரி ஒருவர் வியப்புடன் கூறினாலும், சானியாவை நோக்கி வர்த்தக நிறுவனங்கள் வந்த வண்ணமே உள்ளன.

'இந்தியாவில் விளையாட்டு மூலமாக ஒரு பெண் பெரிய அளவில் என்ன சாதித்து விட முடியும்' என்று ரீபோக் இந்தியா நிர்வாக இயக்குனர் தெரிவித்தார். பல்வேறு கருத்துக்கள் நிலவி வந்தாலும், சானியாவை ஒப்பந்தம் செய்ய வர்த்தக நிறுவனங்கள் நீண்ட வரிசையில் காத்து நிற்கின்றன.

**பிரியாணிக்கு சானியா குட்பை**

சானியா தனது உடம்மைச் சிக்கென வைத்துக் கொள்ளவும், போட்டிகளில் உட்சாகத்துடன் பங்கேற்கவும் உணவு விசயத்தில் கட்டுப்பாடுகளை கையாண்டு வருகிறார். தனக்கு மிகவும் பிடித்தமான பல உணவு வகைகளை அவர் தற்போது தியாகம் செய்திருக்கிறார்.

தனக்கு மிகவும் பிடித்தமான பிரியாணியை சாப்பிடுவதை தற்போது கைவிட்டிருக்கிறார் அவர். உடல் தகுதி காரணத்திற்காக இந்த முடிவை அவர் மேற்கொண்டிருக்கிறார். மேலும், தனக்கு மிகவும் பிடித்தமான இனிப்பு வகைகளைச் சாப்பிடுவதையும் அவர் குறைத்துக் கொண்டிருக்கிறார். எனினும், போட்டிகள் இல்லாத சமயத்தில் அவர் சிறிது இனிப்பு வகைகளைச் சாப்பிட்டு வருகிறார்.

முன்பெல்லாம் அடிக்கடி வெளியே ஷொப்பிங் மற்றும் ரெஸ்டாரண்டுகளுக்குச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்த சானியா பாதுகாப்புக் காரணங்களுக்காக வெளியே செல்வதை அறவே நிறுத்திவிட்டார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# துடுப்பாட்ட வரிசையில் மாற்றம் தேவைதானா?



பலராலும் எதிர்பார்க்கப்பட்ட இந்திய-பாகிஸ்தான் அணிகளிற்கிடையிலான ஒருநாள் தொடரும் ஆரம்பிக்கப்பட்டு விட்டன. டெஸ்ட் தொடரில் பெற்ற வெற்றியின் நம்பிக்கையோடு பாகிஸ்தான் அணியும் ஒருநாள் தொடரையாவது கைப்பற்ற வேண்டுமென்ற ஆவலில் இந்திய அணியும் ஒருநாள் தொடரில் பலப்பரீட்சையில் ஈடுபட்டுவருகின்றன.

முன்னதாக இவ்விரு அணிகளிற்குமிடையிலான முதலிரு டெஸ்ட் ஆட்டங்களும் வெற்றி தோல்வியற்ற நிலையில் முடிவடைய வெற்றியை தீர்மானிக்கும் மூன்றாவது டெஸ்ட் ஆட்டம் கராச்சியில் இடம்பெற்றது. இந்திய வேகப்பந்து வீச்சாளர் இர்பான் பதானின் ஹட்ரிக் சாதனையுடன் ஆரம்பமான இந்த டெஸ்ட் ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி 341 ஓட்டங்களினால் வெற்றிபெற்றிருந்தது. இந்த வெற்றி மூலம் டெஸ்ட் தொடரைக் கைப்பற்றியது மட்டுமன்றி 19 வருடங்களிற்குப் பின் தனது சொந்தமண்ணில் இந்தியாவை வீழ்த்தி கிண்ணத்தை சுவீகரித்தது. இந்திய அணி அதிரடியாக ஆடவெளிக்கிட்டு அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்ததால் அவ்வணியால் தோல்வியை தவிர்க்கமுடியாமல் போய்விட்டது.

இந்த வெற்றியின் பின்னணியிலேயே பாகிஸ்தான் அணி ஒருநாள் தொடரிலும் களமிறங்கியது. அதேவேளை இந்திய அணி பெற்ற தோல்வியானது துடுப்பாட்ட வரிசையில் செய்யப்பட்ட மாற்றத்தினாலேயே ஏற்பட்டதென கிரிக்கெட் விமர்சகர்கள் கருத்துவெளியிட்டனர். பாக்.அணித் தலைவர் இன்ஸமாமும் இதே கருத்தையே வெளியிட்டுள்ளார். ராகுல் டிராவிட் தனது வழமையான மூன்றாம் நிலை ஆட்டக்காரராக இறங்கியிருந்தால் தங்களால் வெற்றியை இலகுவாக அடைந்திருக்க முடியாது என இன்ஸமாம் கூறியிருந்தார். கிரிக்கெட் உலகத்தில் மூன்றாவது வீரராக திறம்படச் செய்யக்கூடியவர் என்ற பெயரை ராகுல்டிராவிட் தன்னகத்தே கொண்டுள்ளார் என்ற கருத்தையும் இன்ஸமாம் குறிப்பிட மறுக்கவில்லை.

மேற்கிந்தியத் தீவுகளில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ணக் கிரிக்கெட் ஆட்டங்களை மையமாகவைத்து இவ்வாறான தனது பரீட்சார்த்த முயற்சிகளை ஒருநாள் ஆட்டங்களில் தொடங்கிய இந்திய கிரிக்கெட் சபை டெஸ்ட் ஆட்டங்களிலும் பரீட்சித்துப் பார்த்தது அவர்களிற்கு பாதகத்திலேயே முடிந்துள்ளது. அதுதவிர கடும் விமர்சனங்களையும் அவர்களுக்கெதிராக எழுப்பவைத்தது.

டெஸ்ட் ஆட்டத்தின் தோல்விக்குப் பின் இந்திய அணித் தலைவர் ராகுல்டிராவிட் இனிமேல் பரீட்சார்த்த முயற்சிகளை மேற்கொள்ள மாட்டோம் என்றும் அத்திட்டங்களை நிறுத்த இந்தியக் கிரிக்கெட் சபை முடிவெடுத்துள்ளதாகவும் தெரிவித்திருந்தார்.

இத்தகைய வாக்குறுதிகளிற்கு மத்தியிலும் சச்சின் டெண்டுல்கரின் துடுப்பாட்டத் திறமை தொடர்பான சர்ச்சைகளிற்கு மத்தியிலும் முதலாவது ஒருநாள் ஆட்டம் கடந்த திங்கட்கிழமை பெஷாவர் மைதானத்தில் ஆரம்பமானது. இந்திய அணியில் ஆரம்பவீரராக வழமையான முறையின்படி சச்சினும் ஷேவாக்கும் இறங்கினாலும் மூன்றாம்நிலை வீரராக இர்பான் பதானை இறக்கி மீண்டும் பரீட்சார்த்த முயற்சியை ஆரம்பித்துள்ளனர் இந்திய கிரிக்கெட் சபையின் தேர்வாளர்கள். எனினும், அவ்வாட்டத்தில் இர்பான் பதான் அபாரமாக ஆடி 65 பந்துகளில் 65 ஓட்டங்களைக் குவித்தாலும் இந்திய அணியால் தனது தோல்வியை தடுக்கமுடியவில்லை.

ஏனெனில், அந்த ஆட்டத்தில் இந்திய அணி 45 ஓவர்களில் 300 ஓட்டங்களைக் கடந்தாலும் கடைசி ஐந்துஓவர்களில் ஓட்டங்களை உயர்த்த ஒழுங்கான பின்னிலை வீரர் ஒருவர் கிடைக்கவில்லை. இதனால், அவ்வணியால் கடைசி ஐந்து ஓவர்களில் 28 ஓட்டங்களையே பெறக்கூடியதாகவிருந்தது. இந்தநேரத்தில் இர்பான் பதான் பின்வரிசையில் இறங்கியிருந்தால் ஓட்டங்களை உயர்த்த உதவியாக இருந்திருக்கும்.

இதேவேளை, இந்த ஆட்டத்தில் சச்சின் டெண்டுல்கர் பெற்ற சதத்தின் மூலம் தனது துடுப்பாட்ட திறமைகளை மீண்டும் நிருபித்துவிட்டார். ஒருநாள் ஆட்டங்கள் தொடங்கும் முன் பாகிஸ்தான் முன்னாள் வீரர் மொயின் கான் சச்சினின் திறமைகள் எல்லாம் இப்பொழுது இல்லாமல் போய்விட்டன என்று கருத்து வெளியிட்ட அதேவேளை பல பத்திரிகைகளும் சச்சினின் திறமைகுறித்து கேள்வி எழுப்பலாயின. எனினும் இந்தக் கேள்விகளிற்கெல்லாம் சச்சின் தனது பதிலை வாயினால் அளிக்காமல் தனது துடுப்புமட்டையினால் சிறந்த பதிலை அளித்தது மட்டுமன்றி தனது திறமைகள் இன்னம் குன்றிப்போய்விடவில்லை என கிரிக்கெட் உலகிற்கு உணர்த்தியுள்ளார்.

நடைபெற்றுவரும் ஒருநாள் ஆட்டங்களில் கூடுதலாக பந்துவீச்சாளர்களின் பங்களிப்புகளை விட துடுப்பாட்ட வீரர்களின் அதியுச்ச பங்களிப்பே கூடுதலாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஏனெனில், மைதானங்கள் அனைத்தும் துடுப்பாட்ட வீரர்களிற்கு சாதகமாகவே அமைக்கப்பட்டுள்ளமையை டெஸ்ட் ஆட்டங்கள் வெளிக்காட்டியிருந்தன. அதேவேளை முதலாவது ஒருநாள் ஆட்டம் நடைபெற்ற பெஷாவர் மைதானம் பந்துவீச்சாளர்களிற்கு சாதகமாகவே அண்மைய காலங்களில் அமைக்கப்பட்டிருந்தது. அந்த மைதானத்தில் பெறப்பட்ட அதிகூடிய ஓட்டமாக 296 ஓட்டங்களே இந்திய-பாக்.ஒருநாள் தொடர் ஆரம்பமாகும் முன்னர் இருந்து வந்தது. அதுவும் 1987 ஆம் ஆண்டு இலங்கைக்கு எதிராக இங்கிலாந்து அணியே இந்தச் சாதனையை நிகழ்த்தியிருந்தது.

**- தங்கா -**

இந்த நிலைமைகளை வைத்துப் பார்க்கும் போது ஒருநாள் தொடரிலும் பாகிஸ்தான் அணியே வெற்றிபெறும் போலுள்ளது. ஏனெனில் பாக்.அணியின் பந்துவீச்சுப் பலமும் இந்திய அணியை விட பலமாகவே உள்ளது. துடுப்பாட்டமும் அப்படியே தானுள்ளது. இவ்வாறானதொரு நிலையில் இந்திய அணி தனது பரீட்சார்த்த முயற்சிகளைக் கைவிட்டுவிட்டு, திட்டமிட்டு செயற்படுவதன் மூலமே பாகிஸ்தான் அணியின் திட்டங்களை தவிடுபொடியாக்கி ஒருநாள் தொடரைக் கைப்பற்றலாம் அல்லாதுவிடின் தனது எதிரிநாடான பாகிஸ்தானிடம் தொடர்தோல்விகளை சந்தித்து அவமானப்பட வேண்டிய நிலையே உருவாகும். *

# எனது அதிரடியில் மாற்றமில்லை

## - அப்ரீடி -



**டெஸ்ட், ஒருநாள் எதுவாக இருந்தாலும் பந்துவீச்சாளர்களை புரட்டி எடுப்பவர் பாகிஸ்தானின் அதிரடி துடுப்பாட்ட வீரர்கள் சயீட் அப்ரிடி. இவர் ரசிகர்களைக் காட்டிலும், எராளமான ரசிகைகளைக் கொண்டவர். இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரிலும் அட்டகாசமாக ஆடியிருக்கிறார். நீண்ட ஆண்டுகளுக்குப் பிறகு சொந்த மண்ணில், இந்திய அணியை வீழ்த்தி கிண்ணத்தை வென்றிருக்கும் சந்தோஷத்தில் வழங்கிய ஆரவாரமான பேட்டி...**

**✱ அப்ரிடி, எப்போது உங்கள் கிரிக்கெட் வாழ்க்கையை ஆரம்பித்தீர்கள்?**

நான் 11 வயதிலிருக்கும் போதே கிரிக்கெட் விளையாட ஆரம்பித்து விட்டேன். ஆனால், கடுமையான பயிற்சி செய்தது 1993-94 இல் தான். கராச்சி கிரிக்கெட் அணியின் சார்பில் உள்ளூர் ஆட்டத்தில் விளையாடினேன். எனது சகோதரர் நிறைய உற்சாகம் அளிப்பார். பாகிஸ்தான் அணிக்காக நான் விளையாட வேண்டும் என எப்போதுமே கூறிக் கொண்டிருப்பார். அவரது ஆசை 1996இல் நிறைவேறியது. அப்போது தான் முதல் முறையாக எனக்கு அணியில் வாய்ப்பு கிடைத்தது.

**✱ ஆரம்பத்தில் மிகச்சிறப்பாக ஆடி பல சாதனைகள் படைத்தீர்கள்...போகப் போக அணியில் உங்களை பார்க்க முடியவில்லை. இப்போது நன்றாக ஆடி வருகிறீர்கள். ஏன் இந்த ஏற்றத்தாழ்வு?**

கிரிக்கெட்டில் ஏற்றத்தாழ்வு எல்லா வீரர்களுக்கும் இருக்கும். உலகின் மிகச்சிறந்த துடுப்பாட்ட வீரர்களாக கருதப்படும் சச்சின் கூட எல்லாத் தொடர்களிலும் ஓட்டங்கள் குவித்துவிடுவதில்லையே.

**✱ ஆரம்ப ஆட்டக்காரராக வந்து கொண்டிருந்த நீங்கள், இப்போது ஐந்தாவது, ஆறாவதாக களமிறங்குகிறீர்களே?**

எந்த இடத்தில் இறங்குகிறோம் என்பது முக்கியமில்லை. எப்படி விளையாடுகிறோம் என்பது தான் முக்கியம். ஆறாவது விக்கெட்டுக்கு வந்தாலும் எனது ஆட்டத்தில் மாற்றம் செய்யவில்லை. எப்போதும் போல் அதிரடி தான். இதை மாற்றவும் மாட்டேன். எனது வளர்ச்சிக்கு அதிரடி தான் முக்கிய காரணம்.

**✱ இந்திய டெஸ்ட் தொடர் எப்படி இருந்தது?**

இத்தொடரை என்னால் மறக்கவே முடியாது. அதிலும், தொடரை வென்றது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. தனிப்பட்ட முறையிலும் நான் சிறப்பாக ஆடியிருக்கிறேன். டெஸ்ட் அணியில் நிரந்தரமில்லாமல் இருந்த எனக்கு இத்தொடரின் மூலம் நிலையான இடம் கிடைத்து விட்டதாக நினைக்கிறேன்.

**✱ இந்தியாவுக்கு எதிரான போட்டி என்றாலே பாகிஸ்தான் வீரர்கள் ரொம்பவும் உணர்ச்சி வசப்படுகிறார்களே... ஏன்?**

மற்ற அணிகளைப் போலத் தான் இந்தியாவையும் நினைக்கிறோம். இந்தியாவுக்கு எதிராக கடந்த முறை சொந்த மண்ணில் டெஸ்ட், ஒருநாள் இரண்டு தொடர்களையும் தவறவிட்டோம். இம்முறை வென்றாக வேண்டும் என்ற உறுதியுடன் இருந்ததால், எங்கள் வீரர்கள் நடந்துகொள்வதெல்லாம் உணர்ச்சிவசப்படுவது போல் உங்களுக்கு தெரிந்திருக்கும்.

**✱ உங்களுக்கு நெருக்கடி தரக் கூடிய பந்துவீச்சாளராக யாரைக் கருதுகிறீர்கள்?**

எந்த பந்துவீச்சாளரைப் பார்த்தும் எனக்கு பயமில்லை. ஆனால் இந்தியாவின் ஸ்ரீநாத்தினதும், அவுஸ்திரேலியாவின் கிளென் மெக்ராத்தினதும் பந்து வீச்சு மட்டும் சற்று வித்தியாசமானது. இவர்களது பந்துவீச்சை அவ்வளவு எளிதில் விளாசி விட முடியாது. காரணம் நேர்த்தியான மற்றும் துல்லியமான பந்துவீச்சு தான்.

**✱ உங்கள் லட்சியம் என்ன?**

பெரிதாக ஒன்றுமில்லை. கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருக்க வேண்டும் என்பது தான் எனது லட்சியம். அதேபோல், நல்ல பெயரை சம்பாதிக்க வேண்டும். ஒவ்வொரு தொடரிலும் இவ்வளவு ஓட்டங்களை குவிக்க வேண்டும் என எனக்குள் ஒரு இலக்கை நிர்ணயித்துக் கொள்வேன். அவ்வளவு தான். நான் எதற்குமே அதிகமாகவே ஆசைப்படுவதில்லை.

**✱ பாகிஸ்தானில் இளம் வீரர்களின் வருகை எப்படி இருக்கிறது?**

பிரமாதமாக இருக்கிறது. கிரிக்கெட்டில் பிரபலமான இந்தியாவைக் காட்டிலும் பாகிஸ்தானில் கூடிய ஆர்வம் காட்டுகிறார்கள். பாடசாலையில் படிக்கும் நிறைய மாணவர்கள் சிறப்பாக விளையாடுகிறார்கள். இதனால் பாகிஸ்தான் அணிக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது என்றே கூறலாம்.

**✱ அப்ரிடி, இது கொஞ்சம் சிக்கலான கேள்வி. நீங்கள், இந்திய சினிமா நடிகை பக்கம் தடம் மாறுவதாக கூறப்படுகிறதே... இது உண்மையா?**

(சிரித்துக்கொண்டே) சுத்தப் பொய். எனது கைத்தொலைபேசிக்கு, அறிமுகமில்லாத பெண்கள் பேசுவார்கள். அவர்கள் தங்களை, ஹிந்தி சினிமா நடிகை என்று கூறிக் கொள்வார்கள். பெயர் சோனாலி என்பார்கள். ஆனால் உண்மையிலே அவர் யார் என்றே எனக்கு தெரியாது. எனக்கும், நடிகைக்கும் தொடர்பு என்பதெல்லாம் வெறும் வதந்தி. நம்பிவிடாதீங்க!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத்தில் உள்ளூராட்சி தேர்தல் ஜுரம்

இப்போது மலையகத்தில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் ஜுரம் அதிகரித்து வருகிறது. இந்த தேர்தலில் போட்டியிடுபவர்கள் மத்தியில் ஒரு குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது.

தற்பொழுது உள்ளூராட்சிச் சபைகளின் தலைவர்களாகவும், உறுப்பினர்களாகவும் இருப்பவர்கள் நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் எந்தக் கட்சியின் சார்பில் போட்டியிடுவது என்பதை தீர்மானிக்க முடியாதநிலையில் தத்தளிக்கின்றனர்.



சந்திரசேகரன்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி ஆகிய இரு பிரதான தமிழ் கட்சிகளுடன் ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆகிய இரு பெரும் பான்மை அரசியல் கட்சிகளும், மேல் மாகாணத்தில் செல்வாக்கைப் பெற்ற மேலக மக்கள் முன்னணியும் குறிப்பிடத்தக்க கட்சிகளாக தமது பிரதிநிதிகளை நிறுத்த உள்ளன.

இவற்றுடன் மலையத்தில் பல தொழில் சங்கங்களும், சுயேச்சைக் குழுக்களும் போட்டியிட்டும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களின் போது ஏட்டிக்குப் போட்டியாகவும், கீரியும் பாம்பும் போலவும் மோதிக் கொண்ட இலங்கை தொழிலாளர் காங்கிரஸும், மலையக மக்கள் முன்னணியும் இம்முறை இணைந்து ஒரே சின்னத்தில் போட்டியிடப்போவதாக கூறப்பட்டது.

இந்த இரு கட்சிகளும் இணைந்து செயற்படப் போகும் செய்தி பெரும்பான்மை அரசியல் கட்சிகள் மத்தியில் பெரும் பீதியை ஏற்படுத்தி உள்ளது. இப்பீதி நியாயமானது தான். இப்படியான மாற்றம் கட்டாயமாக ஏற்படுத்தப் படவேண்டியதே.

இந்த இரு கட்சிகளும், தமது தோழமைக்குரிய மனோகணேசன் எம்.பி யின் தலைமையிலான மேலக மக்கள் முன்னணியையும் அரவணைத்துக் கொள்ள வேண்டும்.

இ. தொ.கா, மலையக மக்கள் முன்னணி, மேலக மக்கள் முன்னணி என்பன நாடாளு மன்றத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து நடத்திய ஆர்ப்பாட்டப் போராட்டமும் சரித்திரத்தில் இடம்பெற்று விட்டது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியினால் மட்டும் தான் நாடாளுமன்றத்தை இடைநிறுத்த முடியும் என்பதல்ல; எங்களாலும் நாடாளுமன்றத்தை இடைநிறுத்தி வைக்க முடியும் என்பதை தமிழ் கட்சிகள் உலகுக்குக் காட்டி சாதனை படைத்து விட்டன.

நாடாளுமன்றத்தில் காட்டிய இந்த சாதனை இம்முறை நடைபெறவுள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்களின் போதும் நிலைநாட்டப்பட வேண்டும்.

அடப்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்பது போல், மலையகக் கட்சிகள் ஒன்று பட்டு ஓரணியில் செயலில் இறங்கினால் மலையகத்தில் விசேடமாக மத்திய மாகாணத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் பல உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகத்தைக் கைப்பற்ற முடியும்.

அதேபோன்று ஊவா, சப்பிரகமுவ மற்றும் மேல் மாகாணத்திலும் உள்ளூராட்சி சபைகளில் கூடுதலான பிரதிநிதிகளை அமர்த்திவிட முடியும் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை.

ஆனால், இந்த மலையத் தமிழ் கட்சிகளின் ஐக்கியமும் ஒற்றுமை உணர்வும் வெறும் பேச்சளவில் மட்டும் தானா? என்ற சந்தேகமும் ஏற்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபை தேர்தல்களுக்காக பல கட்சிகளும் சுயேச்சைக்குழுக்களும் கட்டுப் பணத்தைக் கூட செலுத்தி விட்டன. ஆனால், இம் மலையகக் கட்சிகள் மட்டும் இன்றுவரை எதனையும் கூறாமல் இழுத்தடித்துக் கொண்டே இருக்கின்றன.

எவ்வாறு போட்டியிடுவது என்பது தொடர்பாகவும், எந்த அடிப்படையில் கூட்டணி அமைப்பது என்பது தொடர்பாகவும் பேசுகிறோம், பேசுகிறோம் பேசிக் கொண்டே இருக்கின்றோம் எனக் காலம் கடத்திக் கொண்டே போகின்றனர்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பாக தேர்தல் ஆணையாளர் அரசியல் கட்சிகளுக்கு அனுப்பிவைத்த கடிதங்களுக்கு இ. தொ. கா. பதில் அளித்துள்ளது. தமது கட்சி தேர்தலில் போட்டியிடும் என்றும் அறிவித்துள்ளது.

ஆனால், மலையக மக்கள் முன்னணி இக்கட்டுரை எழுதும் நேரம்வரை தேர்தல் ஆணையாளருக்கு எவ்விதமான பதிலையும் அனுப்பவில்லை என்றும் தெரியவந்துள்ளது.

இந்த சந்தர்ப்பத்தில் மற்றும் ஒரு விடயமும் கசிந்துள்ளது. இ. தொ. கா. தலைவர் ஆறுமுகன் தொண்டமான் ஜனாதிபதியுடன் நேரடியாகப் பேசி ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டுள்ளார். அதனால் அவர் எந்த சந்தர்ப்பத்திலும் அரசுடன் ஒட்டிக் கொள்ளலாம், சில அமைச்சுப் பதவிகளையும் ஏற்றுக் கொள்ளலாம் என சில இ. தொ. கா. முக்கிய பிரமுகர்கள் கூறுகின்றனர். அதோடு ஆளும் கட்சியுடன் இணைந்து போட்டியிடவும் வாய்ப்புண்டு என்றும் கூறுகின்றனர்.



ஆறுமுகன் தொண்டமான்

இது தவறாகவும் இருக்கலாம் அல்லது வழமையான பல்டி சாம்ராஜ்யத்தில் மற்றும் ஒரு அத்தியாயமாகவும் இருக்கலாம்.

ஆனால், ஏமாற்றப்படுபவர்கள் மலையக மக்கள் தான் என்பது மட்டும் உறுதி. எமது தலைவர்கள் ஒன்றுபட்டுவிட்டார்கள், எமக்கு ஒளிமயமான எதிர்காலம் தான் என்று நம்பும் மக்களின் மகிழ்ச்சி வெள்ளத்தில் மண்ணைவாரிப் போட்டதாகவே அமையும்.

எனவே மலையகத் தலைவர்கள் தமது அரசியல் சுய இலாபங்களுக்காக தமது போக்கை அடிக்கடி மாற்றிக் கொள்வது முழு மலையத்தையுமே பலம் இழக்கச் செய்து விடும்.

தம்மிடம் இருந்து பிரிந்து சென்றவர்களும், தனித்து ஜாகை அமைத்துக் கொண்டவர்களும் அரசின் பக்கம் இருப்பதால் அதனைத் தடுக்க வேண்டும். குறிப்பாக மத்திய மாகாண அமைச்சர் அருள்சாமி, திகாம்பரம் குழுவினரும், சதாசிவம், சென்னன் குழுவினரும் அரசுடன் நட்புறவுடன் செயற்படுகின்றனர். அரசின் செல்வாக்குடன் இவர்கள் பல இடங்களைப் பிடித்து விடுவார்கள் என்று மலையகப் பெருந்தலைவர்கள் அஞ்சுகின்றார்களா?

எம்மீது எமக்க நம்பிக்கை இல்லையா? மலையக தமிழ், கட்சிகள் தனித்து நின்று தமது சக்தியை காட்ட முடியாதா? ஏன் உங்கள் மீதும், உங்கள் அமைப்பின் மீதும் உங்களுக்கு நம்பிக்கை இல்லையா? அதிகாரத்தில் இருக்கும் கட்சியுடன் ஒட்டிக் கொண்டு தான் உங்களால் சேவை செய்ய முடியும் என்று நம்புகின்றீர்களா?

அவர்கள் அரசுடன் ஒட்டிக் கொண்டார்கள் என்பதால் நீங்களும் ஒட்டிக் கொள்ள வேண்டுமா? எமக்கென்று ஒரு இலட்சியம், உறுதியான கொள்கை கிடையாதா?

உங்கள் மீதே உங்களுக்கு நம்பிக்கை இல்லாதபோது, மக்கள் எப்படி உங்களை நம்புவார்கள்? தினம் ஒரு கட்சி, நாள் ஒரு கட்சிக் கொள்கை என்றால் உலகம் உங்களை மதிக்குமா?

இந்த லட்சணத்தில் ஏன் தமிழ் மக்களின் ஒற்றுமை பற்றியும், ஓரணியில் ஐக்கியப் படுவது பற்றியும் குரல் எழுப்புகின்றீர்கள். உங்களுக்குப் பாதுகாப்பு தேவை என்றால் எதையும் செய்வீர்களா?

இப்பொழுதும் காலம் கடந்து விடவில்லை. உங்களுடைய ஒற்றுமை ஐக்கியம் என்பதெல்லாம் பேச்சில் மட்டும் இருக்கக் கூடாது. அதனை செயலிலும் காட்டவேண்டும். துணிந்து நில்லுங்கள் வெற்றி நிச்சயம். அதுவே மலையத்தின் விடிவுக்கு வழி.

---



## டேஸ்ட்கடை தனிகாசலம்



## மலையகக் கண்ணோட்டம்

இரா. புத்திரசிகாமணி

# அதிகாரிகளும் புரோக்கர்களாக மாறிவிடாமல் இருந்தால் சரி

தனிகாசலம் அண்ணன் நற்பணி மன்ற அலுவலகத்துக்குச் செல்ல தயாராகிக் கொண்டிருந்தார். அப்பொழுது திலகா அன்றைய தினசரிகளுடன் வந்தாள்.

"வணக்கம் அண்ணா"

"யாரு திலகாவா? வணக்கம் வணக்கம்; என்ன ஏதாவது புது நியூஸ் இருக்கா?"

"ஆமாங்க அண்ணன் நிறைய இருக்கு"

"எங்கே பார்ப்போம் - அப்படி என்னதான் புதுசா போட்டிருக்கு என்று பார்ப்போம்"

"இதைப் பாருங்க அண்ணன். புதுசா கச்சேரிகள், பிரதேச செயலகங்கள், அரசாங்க அதிபர் மற்றும் மாவட்ட அரச அலுவலகங்கள் என்பவற்றில் தொடர்பாடல் அதிகாரிகளாக ஆள் சேர்க்க விண்ணப்பம் கோரப்பட்டள்ளது"

"அப்படியா ரொம்ப நல்ல நியூஸ் தானே! இவ்வளவு காலம் எல்லோரும் சொல்லிச் சொல்லியே காலத்தைக் கழித்து விட்டார்கள். இப்ப ஆவது அப்பிளிகேசன் கேட்டு இருக்காங்களே! அது பெரிய சங்கதி தான்"

"அண்ணன் இந்த தொடர்பாடல் அதிகாரிகள் என்றால் அவர்களுடைய கடமைகள் என்ன?"

"அதுவா, சொல்றன் கேளுங்க, இப்ப நம்ம சனங்கள் அரசாங்க அலுவலகங்களுக்குப் போறாங்க. அங்கே இருக்க அதிகாரிகளுக்கு தமிழ் தெரியல, நம்ம ஆக்களுக்கு சிங்களம் புரியல. அதனால் இந்த தொடர்பாடல் அதிகாரிகள் நமது பிரச்சினையைக் கேட்டு சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் விளங்கப்படுத்தி நம்ம ஆளுங்களோட பிரச்சினைகளை முடித்துக் கொடுக்க வேண்டும். அது தான் அவர்களின் கடமை"

"அடே அப்பா இது பெரிய சங்கதி தானே!"

"ஆமாம் இப்ப கச்சேரி வாசல்களிலும், மற்றும் அரசாங்க அலுவலகங்களிலும் புரோக்கர்கள் பண்ற அட்டகாசம் கொஞ்ச நஞ்சமா?"

"சரியாச் சொன்னீங்க அண்ணா! போன வாரம் எங்க மாமா அவருடைய மகளின் பெர்த் சேட்டிபிக் கட்டை எடுக்க கச்சேரிக்கு போயிருக்காரு......"

"கச்சேரியில போமை வாங்கி நிரப்பிக் கொடுக்க வேண்டியது தானே"

"அங்க தானுங்களே விசயமே இருக்கு. மாமா மகள் அவசரமாக ஒரு இன்டர்



வயூக்குப் போக பேர்த் சேட்டிபிக்கட் உடனே தேவைப்பட்டிருக்கு. உடனே எடுப்பது எப்படி என்று யோசித்துக்கொண்டிருக்கும் போது தான் புரோக்கர் [illegible] இருக்கா"

"அப்படன்னா புரோக்கர் காக்கா அன்றைக்கு நரி முகத்தில முளிச்சி இருக்காங் போல"

"சரியாத்தான் சொன்னீங்க எங்க மாமாவும் வசமா மாட்டிக்கிட்டாரு. ஐயா பேர்த் சேட்டிபிக்கட் எல்லாம் உடனே எடுக்க முடியாது. இன்று எப்பிளிகேசன் போட்டா ஒரு மாசம் கழிச்சிதன் சேர்ட்டிபிக்கட் கிடைக்கும் என்று ஒரு குண்டைத் தூக்கி போட்டு இருக்கார். எங்க மாமாவுக்கு பெரிய சங்கடமாப் போச்சு எப்படியாவது உடனே எடுக்க வேண்டும். மகள் இண்டர்வியூவுக்குப் போக வேண்டும். ஏதாவது மாற்று வழியில் எடுக்க முடியுமா என்று கேட்டுள்ளார்."

"அடடே புரோக்கர் காக்காவுக்கு கோழிக் கறிதான் என்று சொல்லு"

"வேற என்னா! பெரிசா கதையை அவிழ்த்து விட்டுள்ளார். முன்மாதிரி இல்ல. இப்ப சரியான கஷ்டம். சின்ன ஆளுகளைப் பிடித்து ஒன்றும் செய்ய முடியாது நேரடியா பெரிய ஆளுகிட்டத்தான் போகனும்,"

"எப்படியோ தம்பி ஈரைப்பிடித்தாவது புள்ளையோட சேர்டிபிக்கட் எடுக்கனும். எவ்வளவு செலவு போனலும் காரியமில்லை வேலையைப் பாருங்க என்று எங்க மாமா கூறியுள்ளார்"

"நல்ல வேடிக்கைதான் இருக்கு அப்புறம் என்ன [illegible]"

"வேற என்னங்க அண்ணை சொளையா ஐநூறு ருபாவை வாங்கிக் கொண்டு, எங்க மாமா செலவிலேயே பகல் சாப்பாடு தேத்தண்ணி செலவை எல்லாம் முடித்துக் கொண்டு மாலையில் சேட்டிபிக்கட்டை கொண்டு வந்து கொடுத்துள்ளார் மாமாவும் சந்தோஷமா வாங்கிட்டு வந்துவிட்டார்"

"அடப் பாவமே சும்மா பத்து ருபா ஸ்டேம்பை ஒட்டி, இண்டர்வியூ கடிதத்தை காட்டி இருந்தால் உடனே சேட்டி பிக்கட்டை வாங்கி இருக்கலாமே?"

"இந்த விவரம் தெரியாததினாலே தானே புரோக்கர்மார்கிட்ட மாட்டிக்கிறாங்க"

"இனிமேல் இந்த நிலை ஏற்படாமல் இருக்கத்தான் அரசாங்கம் புது நடவடிக்கை எடுத்து இருக்கு. மலையகத்தில் படித்த இளைஞர் யுவதிகளை தெரிவு செய்து இப்படியான வேலைகளை செய்து கொடுக்க நியமிக்க போறாங்க"

"ரெம்ப நல்ல விடயம்தான் இந்த அதிகாரிகளும் புரோக்கர்களாக மாறிவிடாமல் இருந்தால் சரி. இன்னும் ஒரு விடயம் பாருங்க அண்ணே! நுவரெலியா மாவட்ட அம்பகமுவ பிரதேச சபைக்கு மட்டும் தானே விண்ணப்பம் கேட்டிருக்காங்க"

"ஆமாம் ஆமாம், நல்ல நேரத்தில நினைவு படுத்தினாய். இதைப்பற்றி மினிஸ்ட்ரிக்கு டெலிபோன் செய்து கேட்டேன். இந்த பேப்பர் காரங்க தவறுதலா போட்டு விட்டாங்களாம். நுவரெலியா மாவட்டத்தில் நுவரெலியா, அம்பகமுவ, வலப்பனை கங்குராங், கெத்த, கொத்மலை ஆகிய பிரதேச சபை பிரிவுகளில் வசிப்பவர்களும் விண்ணப்பம் போடலாம் என கூறினார்கள்"

"அப்படியா சங்கதி பேப்பரை பார்த்துப் புட்டு நம்ம பசங்க தடுமாறிப்போயிட்டாங்க. நான் உடனே போய் எல்லாரையும் எப்பிளிகேசன் போடச்சொல்லி சொல்றேன்" என்று விடைபெற்றாள் திலகா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் போட்டி இல. 198

சொற்சிலம்பம் 198 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பிவைக்கவேண்டிய கடைசித்தினம் பெப்ரவரி 19ஆம் திகதி ஆகும். விடைகள் பெப்ரவரி 26ஆம் திகதி சுடர் ஒளியிலும், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் மார்ச் 5ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.196க்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும், இரண்டாவது பரிசாக 150 ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும்.பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**

'சுடர் ஒளி'

85,ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,

கொழும்பு–14.

## சொற்சிலம்பம் போட்டி இல. 198

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | ■ | 4 | 5 | 6 |
| 7 | | | ■ | 8 | | | |
| 9 | | | 10 | | ■ | | ■ |
| | ■ | 11 | | ■ | 12 | | 13 |
| ■ | 14 | | | 15 | | ■ | |
| 16 | | ■ | 17 | | | 18 | |
| 19 | | 20 | | ■ | 21 | | ■ |
| 22 | | | ■ | 23 | | | |

## சொற்சிலம்பம் போட்டி இல. 196

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 சு | 2 பா | 3 வ | ம் | ■ | 4 க | த் | 5 தி |
| 6 வா | ட | ல் | ■ | 7 நு | ரை | ■ | ரு |
| 8 ச | ல் | லா | 9 ப | ம் | ■ | 10 ச | ம |
| ம் | ■ | 11 தி | ரு | ■ | 12 சி | ந் | தி |
| ■ | 13 ச | க் | க | ள | த் | தி | ■ |
| 14 த | ங் | க | ல் | ■ | த | ■ | 15 க |
| 16 ம | க | ம் | ■ | 17 நி | ம் | 18 ம | தி |
| 19 து | தி | ■ | 20 ப | றை | ■ | 21 து | ரை |

## சொற்சிலம்பம் போட்டி இல.198

**இடமிருந்து வலம்**

1. கட்டுமீறிய காம இச்சையுடையவன்
4. நெஞ்சுக்குப் பின்புறம்
7. மெல்லிய உலோகப் படலம்
8. ஒருவனுக்கென எழுதப்பட்டது
9. காதில் அணிவது
11. ஒரு பறவை
12. ஒரு வகை சேஷ்டை
14. சுரம்/சன்னி
16. நில்/நிற்பாட்டு.
17. எல்லாமும்/அனைத்தும்.
19. மருமகன்
21. மென்(மை) அல்ல
22. பாய்ந்து/எம்பி
23. அன்புடையாரின் இதுவும் உரியவர் பிறர்க்கு

**மேலிருந்து கீழ்**

1. கொலையாளி
2. கூரையின் உயர்ந்த பகுதி
3. பேதி தரும் காய்
4. பிள்ளைகளுக்கு இது அமுத சுரபி
5. இரட்டை நிலை
6. பாய்
8. தனது
10. கடைக்குட்டி/கடைசிப் பிள்ளை
12. பலமிக்கவன்/வல்லமை மிக்கவன்
13. பொன்னைச் சோதிப்பது இதில் இட்டு
14. கருமையான இருள்
15. கூட்டல் குறி
16. தங்களது
18. பின்பு அல்ல
20. மகிழ்/ஒரு உணவு/ சாறுக்கும் திண்மத்துக்கும் இடைப்பட்ட ஒரு நிலை

## சொற்சிலம்பம் போட்டி இல. 193

1. வே.சத்தியமூர்த்தி,
   உடையா மணல்,
   வல்வெட்டித்துறை.
2. இ.மதன்,
   பிரதான வீதி, அன்னமலை 01,
   கல்முனை.
3. ஆ.உமாசங்கர்,
   பண்டிதமணி இல்லம்,
   கலாசாலை வீதி,
   திருநெல்வேலி / யாழ்

### பாராட்டுப் பெறுவோர்

1. க.கமலேஸ்வரன்,
   இல: 192, ஆறுமுகம் வீதி,
   வட்டக்கச்சி, கிளிநொச்சி.
2. ஜீ.சத்தியபாரதி,
   86/15, பன்வில வீதி, வத்துகாமம்.
3. திருமதி சுகிர்தராணி,
   ஜெயரெட்ணம் 'ஸ்ரீ அகம்',
   ஆரையம்பதி – 02
4. செல்வி. பவானி சின்னப்பன்,
   இல 48/15, பி.டவுன்,
   அட்டன்.
5. எ.வாசவி,
   இல 620, நாவலர் வீதி,
   அரியாலை, யாழ்
6. கு. கஜேந்தினி,
   இல: 403ஏ, ஸ்கந்தபுரம்,
   கிளிநொச்சி.
7. லோகீஷன் கௌறி,
   தேவாலய வீதி, நுணாவில் மேற்கு,
   சாவகச்சேரி.
8. ச. தர்ஷிகன்,
   ''நியூ சாந்தி மில்''
   சங்கரத்தை, வட்டுக்கோட்டை.
9. எஸ்.என்.மணி,
   இல 106, மஹிந்த மாவத்தை,
   நுவரெலியா.
10. த.தர்மினி,
    இல 189 கந்தபுரம்,
    கிளிநொச்சி.

# சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | நேரம் | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7.59 | நிகழ்ச்சிகள் ஆரம்பம் | நிகழ்ச்சிகள் ஆரம்பம் | நிகழ்ச்சிகள் ஆரம்பம் | நிகழ்ச்சிகள் ஆரம்பம் | நிகழ்ச்சிகள் ஆரம்பம் | 6.59 | நிகழ்ச்சி ஆரம்பம் | நிகழ்ச்சி ஆரம்பம் |
| 8.00 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | 7.00 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா |
| 9.00 | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | 7.30 | சங்கீத மேடை | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா |
| 9.30 | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | 8.00 | குட்டி சுட்டி | மேஸ்க் கார்டுன் |
| 9.55 | இயற்கையுடன் ஒருநிமிடம் | இயற்கையுடன் ஒருநிமிடம் | இயற்கையுடன் ஒருநிமிடம் | இயற்கையுடன் ஒருநிமிடம் | இயற்கையுடன் ஒருநிமிடம் | 8.30 | | சிறுவர் நிகழ்ச்சி |
| 10.00 | உங்கள் சொய்ஸ் | மீண்டும் மீண்டும் சிரிப்பு | பாட்டுக்கு பாட்டு | நம்ம நேரம் | கொண்டாட்டம் | 9.00 | ஹொலிவூட் மூவி–குட்டி சுட்டி | அரட்டை அரங்கம் |
| 10.30 | நெஞ்சில் நின்ற ராகங்கள் | | ஆடலும் பாடலும் | இனிய கானங்கள் | | 9.30 | குட்டி சுட்டி – கார்ட்டுன் | சன்டே சமையல் |
| 11.00 | அகல்யா | அகல்யா | அகல்யா | அகல்யா | இசைத் தென்றல் | 10.00 | களம் | சப்தஸ்வரங்கள் |
| 11.30 | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | 10.30 | திரை விமர்சனம் | டொப் 10 மூவீஸ் |
| 12.00 | நட்சத்திரம் | திரை வானம் | சன்டே சமையல் | மங்கையர் சொயிஸ் | மங்கை | 11.00 | இப்படிக்கு நீங்கள் | வர்த்தக உலகம் |
| 12.30 | லன்ச் டைம் செய்திகள் | லன்ச் டைம் செய்திகள் | லன்ச் டைம் செய்திகள் | லன்ச் டைம் செய்திகள் | லன்ச் டைம் செய்திகள் | 11.30 | சினி செய்ஸ் | சின்ன சின்ன ஆசைகள் |
| 01.00 | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | 12.00 | றிலாக்ஸ் டைம் | |
| 01.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | 12.30 | | ஸ்டார் ஸ்பெஷல் |
| 4.30 | டிஸ்னி வேல்ட் | டிஸ்னி வேல்ட் | மைடியர் பூதம் | மைடியர் பூதம் | மலரும் மொட்டும் | 01.00 | சக்தி மேட்னி | பிளக் பஸ்ரர் மூவி |
| 5.00 | கிய பியர்ஸ் | ஹி– மான் | கிட்ஸ் ஸோன் | தமிழ் காட்டுன் | என்றும் கலாட்டா | 4.00 | விக்கிரமாதித்தன் | டொப் 10 ஸ்ஸேங்ஸ் |
| 5.30 | கொண்டாட்டம் | சினி சௌய்ஸ் | ஸ்டார் ஸ்பெஷல் | சுபர் சீன் | | 5.00 | நகைச் சுவை விருந்து | சூப்பர் சீன்ஸ் |
| 6.00 | இசைத் தென்றல் | இசைத் தென்றல் | இசைத் தென்றல் | இசைத் தென்றல் | இசைத் தென்றல் | 5.30 | | நிஜத்தின் நிழல் |
| 6.30 | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | 6.00 | அறிவு | மின்னல் |
| 6.55 | முதன்மைச் செய்திகள் | முதன்மைச் செய்திகள் | முதன்மைச் செய்திகள் | முதன்மைச் செய்திகள் | முதன்மைச் செய்திகள் | 6.30 | திமி தக்க தா | |
| 6.58 | இயற்கையுடன் ஒருநிமிடம் | இயற்கையுடன் ஒருநிமிடம் | இயற்கையுடன் ஒருநிமிடம் | இயற்கையுடன் ஒருநிமிடம் | இயற்கையுடன் ஒருநிமிடம் | 6.55 | முதன்மைச் செய்திகள் | முதன்மைச் செய்திகள் |
| 7.00 | மனைவி | மனைவி | மனைவி | மனைவி | மனைவி | 7.00 | ஊரும் உலகும் | வேலன் |
| 7.30 | கணவருக்காக | கணவருக்காக | கணவருக்காக | கணவருக்காக | கணவருக்காக | 7.30 | எஸ் எம் எஸ் ஷோ | |
| 8.00 | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | 8.00 | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள |
| 8.30 | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | 8.30 | ராஜ ராஜேஸ்வரி | இளையகானம் |
| 8.59 | நிகழ்ச்சி நிறைவு | நிகழ்ச்சி நிறைவு | நிகழ்ச்சி நிறைவு | நிகழ்ச்சி நிறைவு | நிகழ்ச்சி நிறைவு | 8.59 | நிகழ்ச்சி நிறைவு | நிகழ்ச்சி நிறைவு |

மணித்தியாளச் செய்திகள் 10.25, 11.25, 14.25, 15.25, 16.25, 17.25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்பதியரிடம் உண்மை வேண்டும்!

கணவன் மனைவி உறவை இரண்டு கோணங்களில் அலசலாம். தாய், தந்தை, தம்பி, தங்கை, அண்ணன், அக்காள், அவர்களது பிள்ளைகள் இவை எல்லாம் ஒவ்வொருவருக்கும் இரத்த சொந்தங்கள். அப்பாவுடனோ, அம்மாவுடனோ கோபிப்போம், தம்பி, தங்கைகளோடு சண்டையிட்டுக் கொள்வோம். கொஞ்ச நேரத்திலோ ஒரு சில நாட்களிலோ பகை மறந்து பழகிவிடுவோம். பேசி விடுவோம். விளைவுகள் பெரிதாகத் தொன்றுவதில்லை. ஆனால், வேறு வேறு உலகில், சூழலில், கற்பனையில், கருத்தில் வளர்ந்த இருவர் திருமணம் என்ற ஒப்பந்தத்தால் மட்டுமே சேர்த்து வைக்கப்படுகிறார்கள். இவர்களுக்குள் ஏற்படும் சிறு சிறு பிரச்சினைகள் கூட பூதாகரமாக வெடித்துப் பெரும் பிரச்சினைகளுக்கு உள்ளாகின்றன.

ஒரு தொழிலில் இறங்கும் இரண்டு பங்குதாரர்கள் தங்களது ஒப்பந்தங்களை மீறும் போது ஏற்படும் பிரச்சினைகளைப் போலவே, கணவன் மனைவியரிடையே போட்டுக் கொள்ளப்பட்ட ஒப்பந்த மீறல்களால் குடும்பப் பிரச்சினைகள் தோன்றுகின்றன.

ஒப்பந்தத்தின்படி என்றால் ஒரு மனைவி தனது கணவனிடம் எதிர்பார்க்கும் அம்சங்கள் என்ன என்று முதலில் பார்ப்போம் . முதலாவது பாதுகாப்பு. நம் சமூக அங்கீகாரங்களில் இருந்தும் நெருக்கடிகளில் இருந்தும், உணவு, உடை, உறைவிடம் ஆகிய அடிப்படை அம்சங்களில் இருந்தும் கிடைக்கும் பாதுகாப்பு. இரண்டாவது அன்பு, தம் மீதும் தனது குழந்தைகள் மீதும் கணவன் காட்டக்கூடிய உண்மையான அன்பு. மூன்றாவதாக மரியாதை. அழத்தெரிந்த, சிரிக்கத் தெரிந்த மனிதனுக்கு ரோசம் என்ற குணம் உண்டு. தனது பிறப்பை, படிப்பை, சேவையை, தியாகத்தை மதித்து நடத்தக்கூடிய மரியாதையை எதிர்பார்கிறாள். நான்காவதாக, புரிதல். தனது நடவடிக்கைகளைத் தவறான கண்டோட்டத்தில் நோக்காத தனது உணர்வுகளை மதிக்கின்ற புரிதல் இதனை நான்காவதாக எதிர்பார்க்கிறாள். இத்தனை அம்சங்களையும் எதிர்பார்த்தபடி இருக்கும்போது ஐந்தாவதாக அவளது உடலும், மனமும் சுகிக்கும் விதத்தில் தன் கணவனோடு கொள்ளும் உடல்உறவு. இவைதான் கணவரிடம் எல்லா மனைவிகளும் எதிர்பார்ப்பது.

திருமணம் என்ற பந்தம் கூட ஒரு வியாபாரம் தான். வியாபாரத்தில் ஒரு முகமான கவனம் இருப்பது மிக அவசியம். தனது தொழிலின் மீது முழுஈடுபாடும், ரசனையும், நம்பிக்கையும் கொண்டு செயல் பட்டால், அந்த வியாபாரியின் சக்தி முழுவதும் ஒரு முகப் படுத்தப்பட்டு அவரது வெற்றியின் அளவானது மிகப் பெரிய நிலையை எட்டும். அதைவிட்டு விட்டு , போவோர் வருவோர் கூறும் பேச்சையெல்லாம் கேட்டு, அதில் கொஞ்சம் வாய் வைப்போம், இல்லை இதில் கொஞ்சம் முயற்சி பண்ணலாமே என்று அலைபாயும் மனநிலையில் இருந்தால் வளர்ச்சியின் வீச்சு குறையும்.

குடும்பத்தில் கூட இதே நிலைதான். கணவன் தான் அன்பு செலுத்த, பாசத்தைப் பொழிய, சமூக அங்கீகாரத்துடன் உறவு வைத்துக் கொள்ள ஒப்பந்தம் மேற்கொண்டிருப்பது தனது மனைவியுடன் மட்டுமே. தனது மனைவி, குழந்தைகள் மீது மட்டுமே அன்பையும், பாசத்தையும் ஒருமுகப் படுத்திப் பொழிந்தால் அந்தக் கணவனின் வளர்ச்சி மிகப்பெரிய அளவில் இருக்கும். கணவன்-மனவை பந்தத்தில் "உண்மை" என்பது மிக மிக அவசியமானது. தனது கணவன் தனக்கு மட்டுமே உண்மையாக இருக்கிறான் என்பதை ஒரு பெண் மிகப் பெரிய பாக்கியமாகக் கருதுகிறாள். அப்படிப்பட்ட கணவனை சகல விதங்களிலும் மகிழ்ச்சியாக வைத்திருக்க எண்ணுகிறாள். பெரும் பாலான இல்லங்களில் தன்னளவில் கண்ணியமாக நடந்து கொள்வதும் நடக்கிறது. ஆனால், இன்றும் சில இல்லங்களில், மனைவியைக் கணவனும், கணவனை மனைவியும் கட்டுப்படுத்தாமல் விட்டு விடும் நிலை கூடிக் காணப்படுகின்றது. இது போன்ற இல்லங்களில் வளர்ச்சி என்ற ஒன்றே அறவே இருக்காது என்பது மட்டு நிச்சயம்.

ஒரு அனுபவம். கணவன் அழுதுகொண்டு இருக்கிறார். மனைவியும் அழுது தவிக்கிறாள். அவர்களால் தங்கள் நிலையை ஆற்றுப் படுத்தவே முடியவில்லை. நடுத்தர வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்த கணவன் மனைவி இடையே விரிசல் விழ அவர்கள் வீட்டிற்கு வந்து சென்ற நண்பர்கள் வட்டமே காரணமாக இருந்திருக்கிறது.

திருமணம் முடிந்து பல ஆண்டுகள் இவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் உண்மையாகவே வாழ்ந்து வந்திருக்கிறார்கள். இருவருக்கும் நிறைய பணம் சேர்க்க வேண்டும் என்ற ஆசை. தொழில் நிமித்தம் பழகும் பெண் தோழிகளுடன் கணவன் தொடர்பு கொள்ளத் தொடங்கியபோது, மனைவி



ஆடிப் போனாள். பின்னாளில் இந்தத் தொடர்பு இட்டுச் செல்லும் படுபாதாள விளைவுகளைப் பற்றி அறியாமல் கணவனின் வெளித் தொடர்பை அனுமதித்திருக்கிறாள். நாட்கள் சென்றதுதான் மிச்சம். பொருளாதார மாற்றம் நிகழவில்லை. இன்னொரு நண்பர் வெளிநாடு சென்றால் நிறைய சம்பாதிக்கலாம் என்று அறிவுரை சொல்ல, கணவன் மனைவியை வெளிநாடு அனுப்புகிறான். ஏற்கனவே கணவனுக்கு வழங்கிய சுதந்திரத்தை இப்போது இவளும் கையில் எடுத்துக் கொள்ள கணவன், மனைவி இருவருக்குள்ளும் இருந்த ஈர்ப்பு சுத்தமாக இல்லாமல் போனது. ஒரு கட்டத்தில் நிராயுதபாணியாக நின்ற இவர்களது குழந்தைகளின் எதிர்காலம்? கன்னத்தில் சொரேலென அறைய, விழித்துக் கொண்டவர்கள், தங்களின் குற்ற உணர்ச்சியில் இருந்து மீள முடியாமல் இப்போது தவிக்கிறார்கள்.

மனைவி தன் கணவனிடம் எதிர்பார்க்கும் அம்சங்களைப் போல் கணவன் தன்மனைவியிடம் எதிர்பார்க்கும் அம்சங்களையும் வரிசைப்படுத்தலாம். முதலில் தான் தன் மனைவிக்குக் கொடுத்திருக்கும் வாழ்க்கையில் அவள் திருப்தியாக இருக்கிறாளா? என்று எதிர்பார்க்கிறான். அடுத்ததாக மனைவி தன் மீது கொண்டுள்ள நம்பிக்கையைக் கருதுகிறான். மூன்றாவதாக அவள் தனக்கு வழங்கும் மரியாதை. இதற்கு அடிமைத்தனம் என்ற அர்த்தம் கிடையாது. நான்காவதாக மனைவிக்கென்றே இயற்கையும் சமூகமும் நிர்பந்திக்கின்ற கடமைகளைச் சரியாகச் செய்ய வேண்டும் என எதிர்பார்க்கும் கணவன். ஐந்தாவதாகவே உடல் உறவில் மனவையின் பங்கை எதிர்பார்க்கிறான். இங்கும் உறவு என்பது அதற்கு முந்தைய நான்கு நிலைகளையும் மிகச் சரியாகப் பின்பற்றும் மனைவிக்குக் கணவன் அளிக்கும் மிக உயர்ந்த பரிசு என்றே கொள்ளலாம்.

நமது சமூகம் பெரும்பாலும் நெறிப்பட்டு வாழ்பவர்களைக் கொண்டது. புதிய தலைமுறை உயர்வான எண்ணங்களுடன், திருமணம் என்ற ஒப்பந்தத்தை மீறாமல் கட்டுப்பாட்டுடன் வாழ்வதற்குப் பழக்க வேண்டியவர்கள் பெற்றோர்.

நல்ல உடை வாங்கித் தருவது, செலவுக்குப் பணம் தருவது, நல்ல கல்லூரியில் சேர்த்துப் படிக்க வைப்பது, கை நிறைய சம்பாதிக்கும் வேலையில் அமர்துவதோடு பெற்றோரின் கடமை முடிந்துவிடுவதில்லை. திருணத்துக்குத் தயாராகும் பிள்ளைகளிடம் திருமண ஒப்பந்தம் பற்றி நிறையப் பேச வேண்டும்.

திருமணம் என்ற பந்தத்திற்குப் பின்னரே ஆணுக்கும், பெண்ணுக்கும் உடல் உறவுக்கு சமூக அங்கீகாரம் கிடைக்கிறது. திருமணத்திற்குப்பின் வெளித் தொடர்பு கொள்வது தனது தலையிலேயே வாரியிறைத்துக் கொள்ளும் மண் என்றும், ஒருமுகப்படுத்தப்பட்ட சக்தியால் உயர்வான பலனைப் பெற முடியும் என்றும் எதிர்காலச் சந்ததி ஆரோக்கியமாக உருவாக கணவன் மனைவி என்ற கட்டுக்கோப்பான ஒரு சமூக அமைப்பு அவசியம் என்றும் அறிவுறுத்த வேண்டும். அடிப்படை நல்லபடி அமைந்துவிட்டால், சமூகத்தில் குற்றம் புரிபவர்களைத் திருத்தும் வேதாந்திகளாகக் கூட உங்கள் பிள்ளைகள் உருவாகலாம்.

தெய்வம் தொழாள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை - என்பது மனைவிமார்களுக்கு மட்டுமல்ல கனவர்மார்களுக்கும் பொருந்தும்.


---

# காத்ரீனா, ரீட்டா பெயர் எப்படி வந்தது?

சூறாவளி வரவைத் தெரிவிக்கும் முன்னறிவிப்பாளர்களுக்கும் மக்களுக்கும் இடையே நல்ல தகவல் தொடர்பை உருவாக்கவே சூறாவளிக்கு பெயர்கள் சூட்டப்படுகின்றன. இந்த சூறாவளிகள் சில சமயம் ஒரு வாரம் வரை நீடித்திருக்கும். ஒன்றைத் தொடர்ந்து இன்னுமொன்று வரும். ஆகவே மக்கள் மனதில் குழப்பம் ஏற்படமால் பெயர் சூட்டினால் எந்தப் பகுதியில் எத்தனை நாள் வரை எந்த சூறாவளி வீசும் என்பது தெரியப்படுத்தப் படுகிறது! இரண்டாவது உலக மகா யுத்தத்தன் போது சூறாவளிக்கு பெண்கள் பெயரை சூட்டுவது வழக்கத்திற்கு வந்தது. இதை முன்னறிவிப்பு செய்யும் முன்னறிவிப்பாளர்கள் தங்கள் தோழிகளின் பெயரையோ அல்லது மனையிவின் பெயரையோ சூட்ட ஆரம்பித்தனர். பெண்களின் மனமும் பார்வையும் திசையை விட்டு திசை மாறுவதுபோல இந்த சூறாவளிகளும் மாறுவதால் பெண்களின் பெயர்கள் இடப்பட்டன என்று சொல்லப்பட்டவுடன் இதற்கு பெண்ணிய ஆதரவாளர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்ததை ஒட்டி ஆண்களின் பெயர்களும் சூட்டப்பட ஆரம்பித்தன. ஆறு பட்டியல்களில் இருந்து இப்போது சுழல் முறைப்படி வரிசையாக பெயர்கள் சூறாவளிக்குச் சூட்டப்படுகின்றன. ஒரு லிஸ்ட் முடிந்தால் அடுத்த லிஸ்ட் பெயர்கள் அமுலுக்கு வந்துவிடும். இதன்படி காத்ரினா, லீ, மரியா, நட், ஒப்லியா, பிலிப், ரீடா, ஸ்டான், டாமி, வின்ஸ், வில்மா என்று [illegible]

# கரப்பான் பூச்சி

ஆச்சரியம் ஆனால் உண்மை. கரப்பான் பூச்சி கதிரியக்கத்தால் அவ்வளவாக பாதிக்கப்படாத ஒரே பூச்சி



என்பது. சிக்கலான உடல் உறுப்பு அமைப்புகள் இல்லாததாலும் குறைந்த ஜீன் அல்லது டி.என்.ஏ இருப்பதாலும் கரப்பான் பூச்சிக்கு கதிரியக்கத்தை எதிர்த்து நிற்கும் ஆற்றல் உருவாகிறது! செல்கள் இரண்டாகப் பிரியும் போது அவை அதிகம் கதிரியக்கப் பாதிப்பிற்கு உள்ளாகின்றன. கான்சர் செல்கள் மனித உடலில் அதிக தடவைகள் பிரிவதனால் நோய் பரவுகிறது. கரப்பான் பூச்சிக்கோ மோல்டிங் சைக்கிள் என்னும் அறிவியல் விதியின் படி ஒரு சுழற்சிக்கு ஒரே ஒரு தடவை தான் செல் பிரிகிறது. அதாவது மனித இனம் முழுவதுமாக கதிரியக்கத் தால் அழிந்து விட நேரிட்டாலும் கரப்பான் பூச்சி இனத்தில் முக்கால் பங்கு இனம் உயிருடன் இருக்கும்! ரெம் என்ற அளவு மனித உடலின் மீது கதிரியக்கம் பாதிக்கப்படுவதை எடுத்துக் காட்டும் அளவு. மனித உடலின் மீது கதிரியக்கம் பாதிக்கப்படுவதை எடுத்துக்காட்டும் அளவு 800 ரெம் இருந்தாலே மனிதன் இறந்துடுவான். ஆனால் அறிவியல் ஆய்வின் படி அமெரிக்க கரப்பான் பூச்சிகள் 67,500 ரெம் அளவையும் ஜெர்மென் கரப்பான் பூச்சிகள் 90,000 ரெம் அளவையும் தாங்குகின்றன!.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளைத் தோலுக்கு அடிமையான தமிழன்

தமிழர் தம் நிலப் பகுதிகளைத் தொடர்ந்து இழந்து கொண்டு வருகின்றனர். இந்திய முழுவதும் இருந்த தமிழர் தொடர்ந்து நிகழ்ந்த படையெடுப்புகளால், விந்திய மலை தாண்டி, தெற்கு நோக்கி வந்தனர். தென்னிந்தியா எனும் திராவிட இந்தியத் தலைமையையும் இழந்து, வட வெங்கடம் - தென்குமரி என்று சுருங்கினர்.

காலப்போக்கில் வட வெங்கடம் தென்குமரி எல்லைக்கு நடுவே இருந்த சேரத் தமிழ் நாட்டையும் வடவெங்கடத்தையும் இழந்தனர். கோடிக்கணக்கான உண்டியல் காசு கொட்டும் திருப்பதியையும் இழந்தனர். தேவிகுளம், பீர்மேட்டையும் இழந்தனர். கண்ணகி கோவில் என்று வழிபட்டுவந்த கம்பர் வட்ட மங்கலதேவி கோவிலையும் இழந்தனர்.

இலங்கை முழுவதும் தமிழ் நாடாக இருந்த நிலை, கலிங்க அரசன் விசயனின் வருகைக்குப்பிறகு, இலங்கை சிங்களத் தேசமாகத் தமிழர் இடங்கொடுத்தனர். தென்னிந்திய சேர, சோழ, பாண்டிய மன்னரும் இடமளித்தனர். வளமான தென்னிலங்கையை இழந்து, வளமற்ற வட இலங்கைப் பகுதிக்குத் தமிழர் ஒதுக்கப்பட்டனர். ஒடுக்கப்பட்டனர். 1983க்குப் பிறகு வட இலங்கைப் பகுதியையும் இழந்து அகதிகளாகவும், அனாதைகளாகவும் உலக நாடுகளில் பரவிக்கிடக்கின்றனர்.

### தமிழ்மொழியின் தலைமை

இந்திய மொழிகளில் தமிழும், சமஸ்கிருதமும் மிகப் பழமையானவை. அவ்விரண்டில் மிகப் பழமையான மொழி, இந்த மண்ணிற்கே உரிமையுடைய மொழி. தமிழ் ஒரு காலத்தில் இந்தியா முழுவதும் பேசப்பட்ட மொழியாகலாம். மிக மிகச் சிறந்த இலக்கியமான தொல்காப்பியமும், மிகச் சிறந்த படைப்புகளான திருக்குறளும், சிலப்பதிகாரமும் இன்ன பிறவும், வேறு எந்த இந்திய மொழிக்கும் இல்லாத பெருமைகள். சமஸ்கிருதமும் வழக்கு இழந்த மொழியாகிவிட, தமிழ் தொடர்ந்து பேசப்பட்டுவருகிறது, எழுதப்பட்டு வருகின்றது. காலம் தோறும் இடையறாது இலக்கியப் படைப்புகளை தொடர்ந்து பெற்று வரும் ஒரே இந்திய மொழி, தமிழே.

இங்ஙனம் தொன்மை, வளமை, உயிர்ப்பு முதலாயின இருந்தும் இந்தியாவில் தலைமை இடத்தைத் தமிழ் பெறாது போனதேன்? இந்தச் சிறப்புகளைப் பெற்றிராத சமஸ்கிருதம் சிறப்புப் பெற்று விளங்குகிறது. அதன் சேய் மொழியான இந்தி, இந்தியத் தலைமையை எய்தித் தமிழர் உள்ளிட்ட 110 கோடிமக்களுக்கும் ஆட்சி மொழியாகிவிட்டது. வந்த மொழி தலைமை எய்த, சொந்த மொழி தமிழ் - சொந்த மண்களான தமிழ் நாட்டிலும், புதுவையிலும், இலங்கையிலும் தலைமையையும் உரிமையும் எய்தாமல் போனது ஏன்? காரணம் யார்? அடிமைத்தனமும் அடிமைத் தமிழரும் காரணம் என்பது சொல்லாமலே பெறத்தகும் விடையாகும்.

### கறுப்பர்

ஆபிரிக்கா கண்டத்தில் வாழும் மக்கள் நீக்ரோ இனத்தவர். நிறத்தால் கறுப்பர். கண்ணும் முடியும் கறுப்பு.



கூர்மையற்ற மூக்கினம். இவர்களின். கிளைப்பிரிவினர் தென்னிந்தியாவிலும், மத்திய இந்தியாவிலும், அவுஸ்திரேலியாவிம் பழங்குடி மக்களாக உள்ளனர். திராவிடரும் இவ்வினத்தைச் சார்ந்தவரே. ஆகத் தமிழர் கருப்பு இனத்தை சேர்ந்தவர். கறுப்பு நிற இனத்தைச் சேர்ந்த தமிழருக்கு வெள்ளை நிறமும் பொன்னிறமும் கவர்ச்சி கரமான நிறங்களாக இருக்கின்றன.

இந்நிறமுள்ள மக்கள் உயர்ந்தவர்களாக இவர்களின் வரலாற்றில் தொடர்ந்து நிலைத்து வருகின்றனர்.

விண்ணுலகத் தேவர்கள் என்று இவர்களால் கற்பனை செய்யப்படுவோர் வெள்ளை நிறத்தினர். இவர்கள் தலைமேல் வைத்து வழிபடும் சிவபெருமானும், அவன் மகன் முருகனும் செந்நிறக் கடவுளராக உள்ளனர். தமிழர் மேல் படையெடுத்து வந்த ஆரியர், வட இந்தியர், இஸ்லாமியர் வெள்ளை நிறத்தவராகவே இருந்தனர்.

15ஆம் நூற்றாண்டில் மேற்குக் கடற்கரையில் வந்து இறங்கிய வெள்ளைக் காரர்கள் தமிழர் பார்வைக்கு பூவுலகத் தேவர்களாகப் பட்டிருக்க வேண்டும்.

தம் கறுப்பு நிறத்தைப் பற்றி தாழ்வு உணர்வும், வெள்ளை நிறத்தைப் பற்றி மேலுணர்வும் வெள்ளை நிற மக்களுக்கு தமிழர் அடிமையாக ஒரு காரணமாக இருக்க வேண்டும் என்று கருதுதல் தகும். ஆரியரைத் தேவர்கள் என்று போற்றிய தமிழர்கள், வெள்ளைக் காரர்களை வெள்ளைத் துரை என்று போற்றினார். வெள்ளைச் சாமி என்ற பெயரும் வெள்ளைக்காரன் வெள்ளைக்காரி என்ற குறிப்புகளும் தமிழர் வெள்ளைக்காரர் மேல் வைத்திருந்த மதிப்பைக்காட்டும்.

தமக்கு உள்ளேயே சண்டை போட்டுக்கொள்ளும் இவர்கள் வெளியிலிருந்தும் வெள்ளை நிறத்தவரை எதிர்த்து போரியக்கம் நடத்தாததும், எதிர்ப்புக் காட்டாததும் தமிழர் தம் நிறம் சார்ந்த தாழ்வுணர்ச்சியைக் காட்டுவதாகும். இதனை வரலாறு மெய்ப்பிக்கிறது. ஐரோப்பிய அமெரிக்க வெள்ளைக் காரரைப் பெரும் எதிர்ப்புக் காட்டாமல் கறுப்பர்கள் ஆபிரிக்காவிலும், அவுஸ்திரேலியாவிலும் அடங்கிப் போயினர். ஆனால், ஜப்பான், சீனா, தாய்லாந்து ஆகிய நாடுகளில் வாழ்ந்த மஞ்சள் நிற மங்கோலிய மக்கள், வெள்ளைக் காரரை மதிக்கவில்லை. எதிர்த்தனர், ஏற்றுக் கொள்ளவுமில்லை.

### வெள்ளைத் தோல்

குறுந்தோகை கடவுளை வர்ணிக்கும் போது 'பவழத்தன்ன மேனி' என்று புகழும். பரிபாடல், ''உருவும் உருவத்தீ ஒத்தி'' எனக் குறிப்பிடும். தேவாரம், நடராசர் திருவுருவை ''பவழம் போல் மேனியில் பால் வெண்ணீறும்'' எனப் புகழும். இக்குறிப்புகள் சிகப்பழகின் மேல் தமிழர்களுக்குள்ள மோகத்தைக் காட்டுவனவாகும்.

இன்று சிகப்பழகு பெறுதல் பற்றி தொலைக்காட்சியில் விளம்பரங்கள் செய்யப்படுகின்றன. பவுடர் சோப், என்ணெய் முதலான சிகப்பழகு தரும் என்று வெளிச்சமிடும் விளம்பரங்கள் எங்கும் எதிலும் நிரம்பி வருகின்றன.

தமிழர் வெறிகொண்டு விரும்பிப் பார்க்கும் திரைப்படங்களிலும், தொலைக்காட்சிப் படங்களிலும் தமிழே தெரியாத - கேரள, ஆந்திர, வட இந்திய நடிக - நடிகையர் வெகுவாகப் பெருகி இருப்பதற்குத் தமிழர் மனதில் ஓங்கி இருக்கும் தம் கறுப்பு நிறம் பற்றிய தாழ்வு மனப்பான்மையே பெரிய காரணம் ஆகும். தமிழ்த் திரையுலகில் தமிழைத் தாய் மொழியாகக் கொள்ளாத அயல்மொழிநடிகையர் வருமாறு; குஷ்பு, சிம்ரன், நக்மா, ஜோதிகா.

தமிழ்க் குடும்பத்தினர் தம் பிள்ளைகளுக்குத் திருமணமுயற்சி செய்யும் போது, சிவப்பு பெண்ணையும் மாப்பிள்ளையையும் தேடுகின்றனர். தமிழரின் உச்சக்கட்டத் தாழ்வு மனப்பான்மைக்கு இது ஒரு சான்று.

# தீருமா மலையகத்தின் அவல நிலை?

காலத்தின் கோலத்தைக் கருதி இன்றைய மலையகத் தலைமைகள் ஒன்று பட்டுச் செயற்பட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன. மலையகத் தமிழ் மக்கள் படுகின்ற துன்பங்களை கண்டும் காணாதவர்கள் போன்று மலையகத் தமிழர்கள் நடந்து கொண்டு வருகின்றனர். மக்களின் வாக்குகளைப் பெற்று ஆட்சி பீடம் ஏறியதும் ஆளுக்கொரு திசையில் நவக்கிரகங்களைப் போன்று தங்களின் தேவைகளுக்கேற்ப அரசியல் நாடகத்தை இவர்கள் அரங்கேற்றி வருகின்றனர். மலையக கட்சிகள் ஒன்று சேரப்போகின்றன ஒன்று சேரப்போகின்றன என்று மக்களை ஒரு பிழையான திசைக்கே இட்டுச்செல்கின்றனர் தலைவர்கள். மலையகத்திற்கு சேவைகள் செய்யாவிட்டாலும் பொய்யான வாக்குறுதிகளை கூறி மக்களை ஏமாற்றாது இருப்பதே இவர்கள் செய்கின்ற சேவையாக இருக்க வேண்டும். ஒன்றாக இணைந்து செயற்பட முதற்சுற்று பேச்சுவார்த்தையும் இரண்டாம் சுற்றுப்போச்சுவார்த்தையும் முடிவடைந்து விட்டன. இது வெறும் வேஷம் மாத்திரமே தலைவர்களே! மலையக மக்களுக்கு உதவி செய்யாவிட்டாலும் பரவாயில்லை உபத்திரவம் செய்யாது இருந்தாலே உதவியாகும். ஆளும் கட்சியில் இருக்கின்ற போது சேவை செய்ய முடியாத இவர்கள் எதிர் கட்சியில் இருந்து கொண்டு என்ன செய்து விடப் போகிறார்கள்.

**இவ்வாறான ஏமாற்று வேலைகள் நடைபெற்றுக் கொண்டே போனால் மலையகத்தில் இளைஞர்கள் அரசியல் மாற்றத்தை ஏற்படுத்துவது நிச்சயம்.**

இப்போது மலையகப் பகுதிகளிலே பொலிசாரின் கெடுபிடிகளினால் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைகளை எதிர்நோக்கி வருவதை எந்த அரசியல் கட்சியும் தட்டிக் கேட்க முன்வரவில்லை. ஆளும் கட்சியில் உள்ளவர்களிடம் கைது தொடர்பாக கேட்டால் ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியிருக்கிறோம் உடன் தீர்வு எடுப்பார் என்று கூறுகின்றனர். எதிர் கட்சியினர் இந்தியாவிலும், லண்டனிலும் தங்களின் சொந்த வேலைகளை முடித்துக் கொண்டு வருகின்றனர். இந்நிலை தொடரும் பட்சத்தில் மீண்டும் வாக்குக்கேட்டு சென்றால் காலத்தின் நன்மை கருதி மக்களே இவர்களுக்கு தக்க தீர்ப்பு கூறுவர் என்பது உறுதியாகும்.

தொழிலாளர்களின் சம்பள பிரச்சினைக்கு என்ன நடந்தது. இதை செய்ய போகிறோம், அதை செய்ய போகிறோம் என வெறும் வாய்ச்சொல் வீரர்களாகவே இருக்கின்றனரே தவிர செயலில் எதையுமே காண முடியவில்லை.

இன்னுமொருவிடயம் தோட்ட உட்கட்டமைச்சினால் மலையக மக்களின் பிள்ளைகளுக்கு கொடுக்கவிருந்த ஆசிரியர் நியமனம். இந்த நியமனம் இப்போது கிடைக்கும், அப்போது கிடைக்கும் என இளைஞர்கள் தாங்கள் செய்து வந்த வேலைகளையும் கைவிட்டு விட்டு தற்போது தங்கள் வீட்டினிலே வெட்டியாக இருக்கின்றனர். இதனை பார்க்கும்போது இன்றைய தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர்களும், அன்றைய உட்கட்கமைப்பு அமைச்சர்களும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளாகவே காணப்படுகின்றனர்.

இன்று மலையகத்தில் மூன்றாம் சக்தியாக செயற்பட்டு வருகின்ற அமைப்பு காலத்தின் தேவை கருதி இளைஞர்களின் உணர்வுகளுக்கும் எதிர்காலத்திற்கும் மதிப்பளித்து உரிய அமைச்சருக்கு அழுத்தம் கொடுத்து வாக்குறுதிகளை அமுலாக்க வேண்டும். இந்த சக்தியின் பின்னணியிலே மலையகத்தில் இளைஞர் கூட்டம் இருந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த அருமையான சந்தர்ப்பத்தில் இன்றைய தலைவர்கள் முன்னைய தலைமைகள் செய்த அதே பிழைகளை செய்யாது மலையகத்தில் ஓர் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும்.

விஷாலி

# குறைந்துள்ளனவா பெண்களுக்கு எதிரான குற்றங்கள்?

பெண்கள் எல்லாத் துறைகளிலும் முன்னேறிக் கொண்டு இருக்கின்றனர். தங்களை தடுத்து நிற்கும் தடைக் கற்களை உடைத்துக்கொண்டு வருகின்றனர். இருப்பினும் பெண்கள் மீதான குற்றச்செயல்கள் குறைந்தபாடாகத் தெரியவில்லை.

பெண்களுக்கு எதிரான குற்றங்கள் சிறு வயது முதல் வயதான காலம் வரை தொடர்ந்து வருகின்றன. ஏன் கருச்சிதைவு என பிறப்பதற்கு முன்பிருந்தே பிரச்சினைகள் பெண்களை துரத்துகின்றன.

இளம் பெண்களுக்கான பிரச்சினைகளில் ஈவ்டீசிங் முக்கியமானது. பொது இடங்களில், பேருந்துகளில், திரையரங்குகள் ஏன்கோவில்களில் கூட பெண்கள் ஈவ்டீசிங்-குக்கு உள்ளாகின்றனர். மனதளவிலோ உடலளவிலோ ஒரு ஆண் பெண்ணை பாதிக்கச்செய்வதை ஈவ்டீசிங் எனலாம்.

வேலை செய்யும் இடங்களில் பிற ஆண்களால் பாலியல் தொல்லைகளுக்குள் சிக்கிக் கொள்ளுதல், தவறான நடவடிக்கைகள், அநாகரிகமான பேச்சுக்கள், எதிர்பாராத போது உரசுதல், சீண்டுதல் என்று விதவிதமான பிரச்சினைகளை பெண்கள் சந்திக்கின்றனர்.

நவீன காலத்தில் பெரும்பிரச்சினையாக உருவெடுத்திருப்பது போர்னோகிராபி எனப்படும் ஊடகம் வழியிலான குற்றங்கள். ஆபாசமான புகைப்படங்கள், சுவரொட்டிகள், ஆபாசமான செய்திகள் இவற்றுள் அடங்கும். டொமஸ்டிக் வயலன்ஸ் எனப்படும் குடும்ப அளவிலான குற்றங்கள் அதாவது கணவனது கொடுமை, மனைவி மீது சந்தேகப்பட்டு சிகரெட்டினால் சூடு போடுவது போன்ற பல கொடுமைகள், வரதட்சணை போன்ற தொல்லைகளால் ஏற்படும் கொடுமைகள், மாமியார் கொடுமை, மாமனார், மைத்துனர் போன்றோரின் பாலியல் தொல்லைகள் எனப் பல உள்ளன. இவை குறித்த விழிப்புணர்வை பெண்களிடம் உருவாக்க வேண்டி உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# செல்போன் (Cell PHONE) வைரஸ்



இது வரை கணினிப் பொறி மூலம் பரவும் வைரஸ்கள் பற்றியே அறிந்திருந்த நாம் Cell PHONE மூலம் பரவும் வைரஸ்கள் பற்றி அதிகம் அறிந்திருக்கவில்லை. ஆனால் நாம் எல்லோரும் கட்டாயம் அறிந்திருக்க வேண்டிய Cell PHONE வைரஸ் பற்றி சுருக்கமாக தெரிந்து கொள்வோம். இன்று உள்ள அறிவியல் வளர்ச்சியின் காரணமாக Cell PHONE உபயோகிப்பவர்கள் எண்ணிக்கை கற்பனை பண்ண முடியாத அளவிக்கு வளர்ச்சியடைந்துள்ளது. இது வரை நிம்மதியாக Cell PHONE பேசிக்கொண்டிருப்பவர்களுக்கு வந்துவிட்டது ஆபத்து. சமீபத்தில் ரஷ்யாவில் உள்ள காஸ்பர்ஸ்கீ லேப் எனப்படும் நிறுவனம், கிரபிர் (CRABIR) எனப்படும் வைரஸ் மொபைல் போன் மூலம் பரவுவதைக் கண்டுபிடித்து உள்ளது.

இது போன்ற வைரஸ்கள், நாம் செல்போன்களை பேசுவதற்காக மட்டும் பயன்படுத்தும் போது தாக்குவதில்லை. ஆனால் இன்று செல்போன் உபயோகிப்பவர்கள் அதிகம் பயன்படுத்தும் S M S என்று கூறப்படும் சிறிய அளவிலான தகவல்களை அனுப்பும் போதுதான் பரவுவதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆகையால், இனி S M S அனுப்புவோர் வைரஸ்களிடம் இருந்து தப்ப வேண்டுமானால் SMS அனுப்புவதை நிறுத்திக் கொள்ள வேண்டும். இந்த Cabir எனப்படும் வைரஸ் புரோகிராமானது செல்போனில் உள்ள ஒப்பரேற்றிங் சிஸ்டம் (Operting System) எனப்படும் செல்பேனை இயக்கும் கட்டுப்பாடு புரோக்கிராம்களை பாதிப்படையச் செய்கிறது. ஆகையால் சில சமயங்களில் செல்போனை முழுவதுமாக செயலிழக்கச் செய்து விடும்.

இவ்வாறான புரோக்கிராம்களை எழுதுபவர்கள் சர்வதேக அளவில் வைரஸ் புரோகிராம்களை எழுதி கை தேர்ந்தவர்கள் ஆவார்கள். முதன் முதலில் காஸ்பர்ஸ் கீ லேப் எனப்படும் நிறுவனம் ஒரு தனி மனிதனின் செல்போனில் வந்த S M S மூலம் தான் வைரஸ் புரோகிராம்கள் செல்போனில் வருவதை கண்டுபிடித்தது. இந்த S M S ஆனது ஒரு அடையாளம் தெரியாத நபரின் Email முகவரி மூலம் அனுப்பப்பட்டது. அதன் தன்மையை உணர்ந்த இந்த ரஷ்ய நிறுவனம், இது ஒரு கணிப் பொறியால் மிகவும் திறமை வாய்ந்த, அதிக அனுபவம் வாய்ந்த ஒருவரால் தான் அனுப்பப்பட்டு இருக்கிறது என்பதைக் கண்டறிந்துள்ளது.

அதே நேரத்தில், குறிப்பிட்ட ரஷ்ய நிறுவனத்தின் கணிப்புப்படி இந்த Crabir வைரஸானது மிகவும் விரையில் பரவக்கூடியது என்று தெரியவந்துள்ளது. இது போன்ற வைரஸ்கள் பரவுவதற்கு இன்று கணினிப்பொறித் துறையில் புகழ் பெற்று விளங்கும் புளூடூத் தொழில் நுட்பம் பயன்படுத்தப்படுகின்றது. இது போன்ற வைரஸ்கள் எதிர்பாராத பல பாதிப்புகளை செய்வதோடு மட்டுமல்லாமல் சில சமயங்களில் செல்போனையே செலிழக்கச் செய்யும் அளவிற்குக் கூட போகலாம் என்று கணிக்கப்பட்டிருக்கின்றது. இது போன்ற வைரஸ் புரோக்கிராம்களை முறியடிப்பதற்கு நவீன தொழில் நுட்ப யுக்திகளை பயன்படுத்தி செல்போன் தயாரிப்பு நிறுவனங்கள் உற்பத்தி திறனை வளர்த்து வருகின்றன.

# சீனாவில் கூகிள் சேவை தணிக்கை

கட்டுப்பாடுகளுடன் கூகிள் இணையத் தேடல் சேவை தொடங்கப்பட்டுள்ளது

இணையத்தில் தேடல் நடத்துவதற்கான முன்னணி நிறுவனங்களில் ஒன்றான 'கூகிள்', சீனாவின் பண்பாடுகளுக்கு இணங்க தணிக்கை செய்யப்பட்ட சீன கூகிள் சேவை ஒன்றை ஆரம்பித்துள்ளது.

கூகிள் நிறுவனம் சீனக் கணினிப் பயன்பாட்டாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கத் தவறியுள்ளது என பேச்சுரிமை ஆர்வலர்கள் கூறியுள்ளனர். ஆனால் தமது செயல்பாடுகள் சரிதான் என கூகிள் நிறுவனம் பதிலளித்துள்ளது.

இதர பிரபல தேடல் நிறுவனங்களான யாஹூ,மைக்சொப்ட் போன்றவை சீனாவில் ஏற்கனவே தணிக்கை முறைகளை பின்பற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

# அறிவியல் துணுக்குகள்

## பெப்ரவரி மாத முக்கிய தினங்கள்

- *1-ஆம்திகதி ஒக்ஸ்போர்ட் ஆங்கில அகராதியின் முதல் பிரதி வெளியிடப்பட்ட நாள் (1884)*
- *2-ஆம்திகதி இரண்டாம் உலகப் போரில் ரஷ்யப் படைகளிடம் ஜெர்மனியப் படைகள் ஸ்டாலின் கிராட் நகரில் சரண் அடைந்தன (1943),*
- *3-ஆம்திகதி அறிஞர் அண்ணா பிறந்த நினைவு தினம், ஒன்பதாம் லூனா விண்கலத்தை இத்தினத்தில் ரஷ்யா சந்திரனில் இறக்கியது (1966).*
- *4-ஆம்திகதி இலங்கை சுதந்திர தினம், இரண்டாம் உலகப் போரின் போது நேசநாடுகளின் தலைவர்கள் ருஸ்வெல்ட், சர்ச்சில், ஸ்டாலின் ஆகியோர் யால்டா நகரில் பேச்சுவார்த்தை (1945) நடத்தினர்.*
- *6-ஆம்திகதி 30வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு இங்கிலாந்தில் வாக்குரிமை அளிக்கப்பட்டது.*
- *7-ஆம்திகதி பிரபல நாவலாசிரியரான சார்ள்ஸ் டிக்கின்ஸ் பிறந்த நாள் (1812).*
- *8-ஆம்திகதி முதன் முதலாக போயிங் 747 ரக விமானங்கள் இயக்கப்பட்ட தினம் (1969), பிரபல எழுத்தாளர் ஜான் ரஸ்கின் பிறந்த தினம் (1819).*
- *9-ஆம்திகதி முதல் டேவிஸ் கோப்பை டென்னிஸ் போட்டிகள் தொடக்கி வைக்கப்பட்டன (1900), ரஷ்ய பிரதமர் யூரி ஆன்ட்ரபோவ் நினைவுநாள் (1984).*



# பூமியில் பூகம்பம்

எங்கோ ஓரிடத்தில் பிறந்து சில நொடிகளில் உலகையே உலுக்கும் இயற்கையின் சீற்றங்களில் ஒன்றே பூகம்பம் அல்லது நிலநடுக்கம் ஆகும். பூகம்பத்தினால் ஏற்படும் பேரழிவுகளுக்கு சாவுமணி அடிக்க விஞ்ஞானிகள் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

விண்கலங்களின் உதவியுடன் புவித்தட்டு நகர்வை கண்காணித்து 20 அல்லது 30 ஆண்டுகளில் எற்பட இருக்கும் புவி நடுக்கம் அல்லது பூகம்பம் பற்றியே விஞ்ஞானிகள் இதுவரை அறிந்து கொண்டனர். ஆனால் இப்போது புவித் தட்டு நகர்வுகளை விண்கலங்களின் உதவியுடன் உடனுக்குடன் அறியக்கூடிய வசதிகளை ஏற்படுத்துவதில் விஞ்ஞானிகள் தீவிர ஆர்வம் காட்டி வருகின்றனர்.

தரையில் உள்ள புவியசைவு கண்காணிப்பு நிலையங்களிலும் பார்க்க விண்கலத்தின் உதவியுடன் புவியசைவுகளைக் கண்காணிப்பது சிறந்த முறை என்று விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

தரைக் கண்காணிப்பு நிலையங்களின் மூலம் குறைந்தளவு பரப்பளவில் அதாவது சுமார் 50கி.மீ சுற்றளவில் நிகழக்கூடிய புவி மாற்றங்களைப் பற்றி மட்டுமே அறிய முடியும். ஆனால் விண்கலத்தின் மூலம் பூமிக்கு அடியில் உலகின் எப்பகுதியில் மாற்றங்கள் நிகழ்ந்தாலும் அவற்றை அறிந்து மக்களை எச்சரிக்கை செய்ய முடியும். எனவே விண்கலத்தின் உதவியுடன் புவி அசைவுகளைக் கண்காணிப்பது சிறந்த முறை என்று விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

புவியில் எற்படும் செயற்கை இரைச்சல்களையும் புவித்தட்டில் ஏற்படும் மாற்றங்களால் உருவாகக்கூடிய இயற்கை ஒலிகளையும் வேறுபடுத்துவதில் விண்கலன்கள் சிக்கல்களை எதிர்நோக்குகின்றன.

இந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்கான வழிவகைகள் பற்றி ஆராய்வதில் விஞ்ஞானிகள் இப்போது ஈடுபட்டுள்ளனர்.

# பர்முடா முக்கோணம்



முற்றிலும் அறிவியலால் விளங்கிக் கொள்ள முடியாத மர்மங்களுள் ஒன்று பர்முடா முக்கோணம். அட்லாண்டிக் கடல் பகுதியில் இருக்கும் இந்த இடத்தில் கப்பல்கள் போனாலோ அல்லது அதன்மேல் விமானங்கள் பறந்தாலோ அது மர்மமான முறையில் மறைந்து போய் விடுகின்றது.

மியாமி, போட்டோரிக்கோ, பெர்முடா தீவு ஆகிய மூன்று பகுதிகளையும் புள்ளிகள் போட்டு (கற்பனையில்) இணைக்கும்போது காணப்படும் பரப்புத்தான் மர்முடா முக்கோணம் எனப்படுகிறது.

இப்பகுதிக்கு 1964இல் வின்சன்ட் என்பவரே பெர்முடா முக்கோணம் என்று பெயர். ஏராளமான விமானங்களும் கப்பல்களும் இந்த இடத்தில் மர்மமான முறையில் மறைந்து விட்டன. இப்பகுதியில் விமானமோ அல்லது கப்பலோ பயணம் செய்யும் போது திசையறி கருவிகள் தாறுமாறாகச் சுற்றும் என்று சொல்லப்படுகிறது.

என்சைக்ளோ பீடியா பிரிட்டானிக்காவின் 15ஆவது பதிப்பில் இது பற்றிய செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இங்கு விமானங்களும் கப்பல்களும் மறைவதற்கு காரணமாக பின்வருவனவற்றைக் கூறுகிறார்கள்.

- கடலின் அடியில் இருக்கும் காந்தத்தின் விளைவு.
- [illegible] இருந்து மெதேன் வாயு வெளிப்படுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்சுவை கதம்பம்

ஆக்கம்: ஜூலியட்

## இன்றும் இளவரசி



பிரிட்டிஷ் மக்களின் பெருமதிப்புக்குரிய எலிசபெத் மகாராணியின் தங்கையான மார்கரட் இளவரசியைப் பற்றிய தொலைக்காட்சி நாடகமொன்று பிரிட்டனின் தொலைக் காட்சி ரசிகர்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

மார்கரட் தனது 78 ஆவது வயதில் மரணமடைந்து பல ஆண்டுகள் உருண்டோடிவிட்டன.

இப்போது இவர் உடலுறவு கொள்வது, தன்னினச் சேர்க்கையில் ஈடுபடுவது, கனாபில் எனப்படும் போதை வஸ்து புகைப்பது போன்ற காட்சிகள் இந்த நாடகத்தில் காண்பிக்கப் படுகின்றன.

இவ்வாறு கேவலமான முறையில் மார்கரட் இளவரசி தொலைக் காட்சி நாடகமொன்றில் சித்திரிக்கப்படுவதை அவரது முன்னாள் காதலனான லீவெலின் பலமாக கண்டித்திருப்பதுடன் மனித உணர்வுகளைச் சுரண்டி பணம் திரட்ட மேற்கொள்ளப்பட்ட முயற்சி இது என்று தனது கோபத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்.

லீவெலினுடன் இளவரசி இரகசிய தொடர்பு வைத்திருந்த போது அவரை விட 17 வயது குறைந்த வாலிபனாக லீவெலின் இருந்தார் என்பதும் Liewellyn இருந்ததுடன் மார்கரட் அப்போது சினோடன் பிரவுவை மணமுடித்து இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



## வச்சுக்கிட்டா தப்பில்லை

நடிகை தியாவிடம் கவர்ச்சி பற்றிக் கேட்டால், ''அதிகம் காட்டினால், அம்மா செருப்பால் அடிப்பாங்க!'' என்கிறார். ஆனால், இந்தி கவர்ச்சிப் புயலான தியா மிர்சாவிடம் விளம்பர நிறுவனம் ஒன்று ''எதாவது நல்ல கருத்து சொல்லுங்க'' என்று கேட்டது. அப்போது தியா சொன்ன கருத்து என்ன தெரியுமா? ''திருமணத்துக்கு முன் 'செக்ஸ்' உறவு வைச்சுக்கலாமா வேண்டாமா என்பது தேவையில்லாத பிரச்சினை. 'செக்ஸ்' உறவு வைச்சுக்கிட்டா தப்பில்லை! ஆனால், பாதுகாப்பா வைச்சுக்கோங்க! நானும் செக்ஸ் உறவில் ஈடுபட்டு இருக்கிறேன். அது பாதுகாப்பான உறவு. இதற்காக என் கைப்பையில் எப்போதும் இரண்டு ஆணுறைகள் வைத்திருப்பேன் ! படித்த பெண்கள் பாதுகாப்பான செக்ஸ் வைச்சுக்கப் பழகணும். கடையில் போய் ஆணுறை வாங்க வெட்கப்படாதீங்க'' என்றார், தியாமிர்சா.!



இம்மாதம் 29ஆம் தேதி சீனாவில் புத்தாண்டு பிறந்தது. இந்த ஆண்டு நாய்களுக்கான ஆண்டாக சீனாவில் கொண்டாடப்படுகிறது. தைவானில் உள்ள தைபேயில் நாய்களுடன் புத்தாண்டை வரவேற்க மகிழ்ச்சியுடன் காத்திருக்கின்றனர் இந்த சிறுவனும், சிறுமியும்.



லெபனான் தலை நகர் பெய்ருட்டில் பேஷன் ஷோ நடந்தது. இதில் சிரியாவைச் சேர்ந்த நடிகை ரக்தா மகிழ்ச்சியுடன் அணிவகுத்து வந்தார். உலக அமைதியை வலியுறுத்தும் வகையில் அவர் அணிந்து வந்த ஆடையில் அமெரிக்காவின் சுதந்திர தேவி சிலை உட்பட பல நாடுகளின் சரித்திர, மத முக்கியத்துவம் வாய்ந்த சின்னங்கள் இடம் பெற்றிருந்தன. ஆடையின் மேல் பகுதியில் சேர்ச்சும், மசூதியும் வடிவமைக்கப்பட்டுள்ளன.



## ராகுல் ராஜா

இந்தியாவின் முடிக்குரிய இளவரசராகக் கருதப்படும் நேரு குடும்ப அரசியல் வாரிசும், ராஜீவ் காந்தியின் மகனுமான ராகுல் காந்தி இந்திய உப கண்டத்தின் பிரதமராக முடி சூடுவதற்காக இன்னும் சிறிது காலம் பொறுத்திருக்க விரும்புகிறார்.

2009ஆம் ஆண்டு இந்தியாவில் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலை நோக்கி காங்கிரஸ் கட்சியை வழிநடத்திச் செல்வதற்கு அதிகளவில் பொறுப்புகளை ஏற்றுக் கொள்ளுமாறு 35 வயதுடைய, சினிமா நடிகரைப் போன்று தோற்றமளிக்கும் இவருக்கு கட்சியின் ஆதரவாளர்களின் நெருக்குதல் அதிகமாகி வருகிறது.

அண்மையில் ஹைதராபாத்தில் இடம் பெற்ற காங்கிரஸ் கட்சியின் மாநாட்டில் அபிமானிகளின் அன்புத் தொல்லைக்காளாகிய ராகுல், கட்சிப் பணிகளில் அதிகளவில் ஈடுபட முன்வருமாறு அவர்கள் விடுத்த கோரிக்கையை நிராகரித்த போது இப்போதும், தான் ஒரு அரசியல் கற்றுக்குட்டியே என கூறியிருப்பதுடன் நிச்சயம் உங்களை ஏமாற்றப் போவதில்லை என்றும் கூறியிருக்கிறார்.



## பேசும் பொம்மை

இளவரசி டயானாவின் தோற்றத்தைக் கொண்ட பேசும் பொம்மை அமெரிக்காவில் விற்பனைக்கு விடப்பட்டுள்ளது.

''நான் இங்கே துக்கத்துடன் இருக்கிறேன். உங்களின் இதயத்தைக் கொள்ளை கொண்ட அரசியாக மிளிரவேண்டும் என்பதே எனது ஆசை''- என்று இந்தப் பொம்மை கொஞ்சு மொழியில் பேசுகிறது.

வெள்ளை நிறப் பாவாடையும் ஜாக்கெட்டும் அணிந்துள்ள டயானா பொம்மைகள். வைக்கப்பட்டுள்ள பெட்டிகளில் வேல்ஸ் இளவரசி என்று அச்சிடப்பட்டுள்ளது.

Time capsule Toys என்ற நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டு சந்தைக்கு விடப்பட்டுள்ள இந்தப் பொம்மைகள் 25 சரித்திர முக்கியம் வாய்ந்த விடயங்களைப் பற்றிய வசனங்களை பேசும் வல்லமை கொண்டவை என தெரிகிறது.

பொம்மையின் பின்னால் உள்ள பொத்தானை அழுத்தியதும் அது பேசஆரம்பிக்கிறது.

''என்னைப்பற்றி அளவுக்கதிகமான விடயங்கள் பத்திரிகைகளில் வெளியாகின்றன. ஆம் அவை அளவுக்கு அதிகமானவை. இப்போது நான் நல்லவற்றை செய்யவே விரும்புகின்றேன். நான் இங்கு வெறுப்புடன் அமர்ந்திருக்கவில்லை. துக்கத்துடனேயே இருக்கிறேன்'' என்று சொல்கிறது அது.

பார்ப்பவர்களை கவரும் வகையில் பொம்மைக்கு அழகாக மேக்கப் செய்யப்பட்டுள்ளது. அதன் விலை 3000 ரூபாய். முதல் தடவையாக 10,000 டயானா பொம்மைகளே விற்பனைக்கு விடப்பட்டுள்ளன.

டயானா பொம்மையை தயாரித்த நிறுவனம் ஜக்குலின் கென்னடி, லாராபுஷ், ஜொனிகா[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களத் திணிப்புக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள்

காணிகளை அந்நியர்களுக்கு விற்பதைத் தடைசெய்வதற்கான ஒரு சட்டத்தை அரசாங்கம் 1963ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தியது. ஆனால், இதன் உண்மையான நோக்கம் தமிழர்களின் காணிவாங்கும் உரிமைகளைக் கட்டுப்படுத்துவதே.

காணி வாங்கும் ஒருவர் தாம் இலங்கைப் பிரஜை என்பதை காணிப்பதிவாளர் திருப்தியடையும் வகையில் நிருபிக்க வேண்டும் அல்லது கொள்முதல் விலைக்கு சமமான ஒரு தொகையை அரசாங்கத்துக்கு செலுத்த வேண்டும். அப்படி இல்லையெனின் எந்த ஒரு அரசாங்கக்காணிப் பதிவேட்டிலும் அந்தக் காணி கொள்முதல் செய்யப்பட்ட விவரம் பதியப்பட முடியாதென்பதை அச்சட்டம் வலியுறுத்தியிருந்தது. இந்த நிலையில் ஒரு தமிழர் அல்லது முஸ்லிம் இலங்கைக் குடியுரிமை சட்டத்தின்கீழ் தாம் ஒரு இலங்கை குடிமகன் என்பதை நிருபிப்பதில் ஏற்படும் கஷ்டங்கள் பற்றி ஏற்கனவே ஓரிடத்தில் விளக்கப்பட்டுள்ளது. இப்படியான நிலைமையில் ஒரு காணியை கொள்முதல் செய்யும் போது காணி உறுதியொன்றினைப் பதிவு செய்து கொள்வதில் இந்த மக்கள் எதிர் கொள்ளக்கூடிய கஷ்டங்கள் எவ்வாறு இருக்கும் என்பதைக் கூறத்தேவையில்லை.

வி.ஏ.கந்தையா மரணமானதையடுத்து ஊர்காவற்றுறை நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டிருந்த நான் அப்பொழுது ஒரு புதிய நாடாளுமன்ற உறுப்பினராக நாடாளுமன்றத்தில் இருந்தேன். இந்தச் சட்டத்தை நான் மிக வன்மையாகக் கண்டித்து நாடாளுமன்றத்தில் பேசினேன். இதிலுள்ள நடைமுறைக் கஷ்டங்களை மட்டுமின்றி குடியுரிமையை நிருபிக்கும் சாத்தியமே இல்லாத நிலைமைகளை நான் எடுத்துக்காட்டினேன். வழமையாக சிங்களவர்களுக்கு சாதகமாகவே இருந்துவரும் சேர்.ராஸீக் பரீத், எஸ்.ஏ.ஹமீத் போன்ற முஸ்லிம் தலைவர்களும் கூட காணிக்கொள்முதல் செய்பவர்கள் முஸ்லிம் பெயரையுடையவர்களாய் இருக்கும் பட்சத்தில் எதிர்நோக்கக்கூடிய கஷ்டங்கள் குறித்து அதிர்ச்சியடைந்தார்கள்.

சட்டம் நிறைவேற்றப்பட்டது. அது இப்பொழுது 1963ஆம் வருடத்தின் நிதிச் சட்டம் என அறியப்படுகின்றது. இதன்படி காணிவாங்கும் எவரும் தமிழ் - முஸ்லிம் பெயர்களுடையவர்களாய் இருக்கும் பட்சத்தில் குடியுரிமை நிருபிக்கப்படும் வரையில்




அவர்களின் காணி உறுதிகள் பதிவுசெய்யப்படாமல் கிடப்பில் போடப்பட்டன. இப்படியான உறுதிகள் வருடக்கணக்கில் காணிக்கந்தோர்களில் தேங்கிக்கிடந்தன.

அடுத்த சட்டம் நீதிமன்றங்களின் மொழி தொடர்பானது. இதன்படி நாடுமுழுவதும் நீதிமன்றச் செயற்பாடுகள் சிங்களத்தில் நடைபெறவேண்டும். நீதிமன்றப்பதிவுகளும் சிங்களத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்தச் சட்டத்தில் தமிழ் மொழிக்கும் சற்று இடமளிக்கப்பட வேண்டும் என்று பிரதம மந்திரி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க விரும்பியதாகவும் ஆனால், அவரது அமைச்சர்களில் ஒருவ்ரான பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க விடாப்பிடியாக நின்று அப்படியான சலுகைக்கு இடம்தரவில்லை என்றும் அந்தக் காலத்தில் பேசிக்கொள்ளப்பட்டதுண்டு.

தமிழர் பிரச்சினை தொடர்பான கொழும்பு தமிழ் அறிவாளிகளின் அணுகுமுறையும், அவர்கள் அதனை விளங்கிக்கொண்ட தன்மையும் கொஞ்சமும் பிரயோசனமற்



றவை என்பதை அரசாங்கம் சிங்களம் மட்டும் சட்டத்தை மிகக்கடுமையாக நடைமுறைப் படுத்தத் தொடங்கியிருந்ததிலிருந்து புரிந்து கொள்ளக் கூடியதாய் இருந்தது.

### தமிழ் பாடசாலைகளுக்கு சிங்கள ஆசிரியர்கள்

இந்த நிலையில் தமிழரசுக் கட்சி தனது செயற்பாடுகளை கொழும்பிலிருந்து, அவை எங்குதேவையோ அந்த வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கே மாற்றிக்கொண்டது. இந்த மாகாணங்களிலேயே சிங்களத்தின் தாக்கம் அதிகமாக உணரப்பட்டது. அதற்கு எதிர்ப்புணர்வும் உச்சத்தை அடைந்திருந்தது.

மேலும், தமிழ் பேசும் பிள்ளைகளுக்கு சிங்களத்தைக் கற்பிப்பதற்காக வடக்கு - கிழக்கு உட்பட நாடு முழுவதும் உள்ள தமிழ் பாடசாலைகளுக்கு சிங்கள ஆசிரியர்களை அனுப்புவதற்கான திட்டமொன்றை அரசாங்கம் வகுத்திருப்பதாகவும் செய்திகள் வெளிவந்திருந்தன. அரசாங்கத்தைப் பொறுத்தவரை சிங்களத்தில் ஜி.சீ.ஈ (சா/த) சித்தியடைந்த ஆயிரக்கணக்கானசிங்கள இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதாக இருந்திருக்கலாம். ஆனால், தமிழர்களைப் பொறுத்தவரை மெதுவாக தமிழ் மொழியை நசுக்கி ஒழிக்கும் காரியமாகவே அது தென்பட்டது.

இவ்வாறுதான் தமிழ் இனத்தை சிங்கள பிரதான நீரோட்டத்தில் ஒன்றுகலக்கச்செய்யும் முயற்சியானது பேச்சளவிலும் விவாத அளவிலும் மட்டுமின்றி நிதர்சனமாகவும் செயலுறுப் பெறத் தொடங்கியது. எதற்குத் தமிழர்கள் பயந்தார்களோ அதுவே அவர்களின் கதவருகில் வந்து சேர்ந்து விட்டிருந்தது.

இன்னொரு விடயத்தை தமிழரசுக்கட்சி கருத்தில்கொள்ள வேண்டியிருந்தது.

சிங்களத்தைப் படிக்கவேண்டாம் என்ற கோரிக்கைக்கு எல்லா தமிழ் அரச ஊழியர்களுமே செவிசாய்த்தார்கள் என்று கூற முடியாது.

அரசாங்க சேவையிலிருந்த பெரும் எண்ணிக்கையிலான இளம் ஊழியர்கள் சிங்களம் படிக்க மறுத்தார்கள் என்றாலும் நீண்டகால சேவையிலிருந்தவர்களும் பெரிய குடும்பங்களை பராமரிக்க வேண்டியிருந்தவர்களும் தயக்கம் காட்டவே செய்தார்கள். பெரும் சம்பளங்களையும், ஓய்வூதியங்களையும் இழப்பதற்கு அவர்கள் தயாராய் இருக்கவில்லை.

கொழும்புத் தமிழ் அறிவாளிகளின் பிடியிலிருந்து விடுபடுவதற்கான நிர்ப்பந்தம் தமிழரசுக் கட்சிக்கு ஏற்பட்டமையானது, எனக்குத் தனிப்பட்ட முறையில் மகிழ்ச்சியாகவே இருந்தது. மீண்டும் அதன் பழைய தடத்தில் அதனை நகர்த்த முடியும், தமிழ் மக்களின் விடுதலை என்ற அதன் புனிதமான இலட்சியத்தின்பால் கவனத்தை திருப்பும்படி செய்து விடலாம் என்று நம்பினேன். மக்கள் விடுதலை இயக்கம் என்ற அதன் நிலைப் பாட்டிலிருந்து விலகிச் சென்றதற்கான வாழ் நாள் முழுவதும் மறக்க முடியாத ஒரு பாடத்தை கட்சி படித்துவிட்டது என்றதோர் திருப்தி எனக்கு ஏற்பட்டிருந்தது.

### கட்சியின் தலைமைச் செயலகம்

யாழ்ப்பாணம் நகரில் 2ஆம் குறுக்குத் தெருவில், இலக்கம் 22 கட்டடத்தில் தான் தமிழரசுக்கட்சி எப்பொழுதுமே செயல்பட்டு

## யாழ். கச்சேரி வாசலில் சிங்களம் மட்டும் சட்டத்தின் பிரதிகள் குவிக்கப்பட்டு எரிப்பு

வந்துள்ளது. இந்தக் கட்டடத்தில்தான் கட்சி ஆரம்பிக்கப்பட்டு ஒரு சக்திமிக்க விடுதலை இயக்கமாகவும் தமிழ் மக்களின் தனிப்பெரும் பிரதிநிதித்துவ ஸ்தாபனமாகவும் வளர்த்தெடுக்கப்பட்டது. இங்கிருந்து தான் கட்சியின் பெரும்பாலான போராட்டங்கள் வெற்றிகரமாக ஆரம்பிக்கப்பட்டு நிறைவேற்றப் பட்டன. சுதந்திரத்திற்குப் பின்னர் உருவான மிகச் சிறந்த தலைவர்கள் பலரும் இங்கிருந்து தான் உருவாகி வளர்ந்தார்கள். இந்த அடிப்படையில் சிலர் அது ஒரு அதிஷ்டகரமான கட்டடம் என்று கூடச் சொல்வார்கள். இந்தக் கட்டடத்தை கைவிட்டதையடுத்து தமிழரசுக் கட்சி சீர்குலைந்து போக நேர்ந்தது. ஒரு தீர்மானத்தின் மூலம் நான் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டேன்.

இருந்த போதிலும், பண்டா-செல்வா ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதாக கட்சிக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுமாறு அரசாங்கத்தை வற்புறுத்துவதற்கு எடுக்கப் பட்ட முயற்சிகள் தோல்வி கண்டமையாலும் சிங்களத்தை அமுல்படுத்துவதில் அரசாங்கம் முனைப்புடன் செயற்பட தொடங்கியிருந் தமையாலும் 2ஆம் குறுக்குத் தெருவிலிருந்த கட்சியின் தலைமைச் செயலகம் மீண்டும் சுறுசுறுப்படைந்தது. நானும் இரண்டு வருட கால புறக்கணிப்புக்குப் பின் மீண்டும் அந்த சூறாவளிக்குள் ஈர்க்கப்பட்டு விட்டேன்.

சிங்களத் திணிப்புக்கு எதிராக ஏராளமான கூட்டங்களும், ஊர்வலங்களும் ஆர்ப்பாட்டங்களும் நடத்தப்பட்டன. தலைவர்களின் வழிகாட்டலில் தொண்டர் அணிகள் அரசாங்கக் காரியாலயங்களுக்கு ஊர்வலமாகச் சென்று ஊழியர்களைச் சிங்களம் படிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளும் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தனர்.

செல்வநாயகம் நோய்வாய்ப்பட்டு உடல் பலவீனமுற்றிருந்தபோதிலும் அப்படியானதோர் ஊர்வலத்தை நடத்திச் சென்றார். ஒரு குறிப்பிட்ட நீளமான ஊர்வலம் யாழ்ப்பாண நகர வீதிகள் யாவற்றின் ஊடாகவும் சென்று யாழ்ப்பாணம் கச்சேரியை அடைந்தது.

அங்கு ஒரு குட்டிச் சுவரின் மீது ஏறிநின்று வட்டுக்கோட்டை எம்.பி ஏ.அமிர்தலிங்கம் மக்களுக்கு சொற்பொழிவாற்றினார். சிங்களத்தை ஏன் படிக்கக்கூடாதென்பதற்கு அவர் விளக்கம் அளித்தார். கொடுங்கோன்மையை எதிர்ப்பதில் மக்கள் உறுதியாக நிற்கவேண்டுமென அவர் வலியுறுத்தினார். பின்னர் கச்சேரி வாசலில் சிங்களம் மட்டும் சட்டத்தினதும் புதிய அரசமைப்பினதும் பிரதிகள் குவிக்கப் பட்டு எரியூட்டப்பட்டன.

இவை அனைத்துமே அரச தரப்பில் எதுவித தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. தமிழ் மக்களின் உணர்வுகள்பற்றி தமக்கு எதுவித அக்கறையும் கிடைக்காது என்பது

நாடு சுதந்திரம் அடைந்த நாளில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம்வரை இடம்பெற்ற முக்கிய அரசியல் நிகழ்வுகளை உள்ளடக்கியது 'தமிழ் தேசத்தின் வீழ்ச்சியும் எழுச்சியும்' (The Fall and Rise of the Tamil Nation)



தற்போது கனடாவில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஊர்காவற்றுறை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வி. நவரத்தினம் ஆங்கிலத்தில் எழுதிய இந்த நூலின் தொகுப்பு , தொடர் அரசியல் கட்டுரையாக சுடர்ஒளி வாரமலரில் வெளிவருகிறது. படியுங்கள்.

போல் அரசு நடந்து கொண்டது.

நிலைமை மிகவும் விரக்தி அளிக்கும் நிலைக்குப் போய்விட்டதால் என்ன செய்யலாம் என்பது குறித்து நான் சற்று அழமாகவே சிந்திக்கத் தொடங்கினேன்.

### சத்தியாக்கிரகம் பற்றிய யோசனை

மக்கள் பங்களிப்புடன் நேரடி நடவடிக்கையில் இறங்காது போனால் எந்தவித பயனுமிருக்காது, சிங்களம் பரப்பப்

தமிழில் 'பேனா'

படுவதை தடுக்க முடியாது என்று எனக்குத் தெளிவாகத் தெரிந்தது. கொடுங்கோல் தனத்தை தமிழ் மக்கள் சகித்துக் கொள்ள மாட்டார்கள் என்பதைக் காட்டுவதற்கு ஏதாவது செய்தாக வேண்டும். இதை செய்வதற்கு வடக்கு-கிழக்கு மாகாணங்களில் அரசாங்க காரியாலயங்கள் செயல்படுவதைத் தடுத்து நிறுத்தியாக வேண்டும்.

பெருமளவில் மக்கள் பங்கெடுப்புடன், சாத்வீக முறையில் சத்தியாக்கிரக இயக்கங்களை நடத்துவதன் மூலமே இது சாத்தியமாகும். அதுவே வழியென்று தோன்றியது.

செயற்குழுக் கூட்டத்தில் இந்த விடயத்தை நான் கிளப்பினேன். தமிழ் மாகாணங்களில் அரசாங்க காரியாலயங்கள் செயல்பவதை நாங்கள் தடுத்து நிறுத்த வேண்டும் என்று எடுத்துக் கூறினேன். வழமைபோல் செல்வநாயகத்திற்கு அதில் நம்பிக்கை ஏற்படவில்லை.

இந்த விடயம் விவாதத்திற்குரியதாக இருக்கவில்லை. இம்மாதிரியான ஒரு பெரும் போராட்டத்தை அவரது சம்மதமும் ஆசீர்வாதமுமின்றி முன்னெடுக்க முடியாது. எனவே, குழு இந்த விடயத்தில் அதற்கு மேல் கவனம் செலுத்தவில்லை.

அடுத்து வந்த நாட்களில் கூட்டங்களும், ஊர்வலங்களும் நடைபெற்றுக்கொண்டிருந்த அதேவேளையில், பெரும் மக்கள் பங்களிப்புடன் இயக்கங்களை நடத்த வேண்டும் என்ற கருத்தை நான் வலியுறுத்தி வந்தேன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# செல்வமே

குழந்தைகள் திருமண வாழ்வின் நினைவுச் சின்னங்கள், நடமாடும் பொக்கிஷங்கள். குழந்தைகள் பெறாமலே வாழும் வாழ்க்கை நிறைவற்ற ஒரு வாழ்க்கை. குழந்தையில்லாத் தாய்க்கு மலடி என்ற பெயர் தான் சமூகத்தில் கிடைக்கிறது.

இப்படி வாழ்வியலின் முழுமையை ஏற்படுத்தித் தரும் குழந்தைகளை நாம் பொக்கிஷமாக பாதுகாக்க வேண்டியது மிக மிக அவசியமாகும். எல்லாத் தாய்மாருக்கும் குழந்தைகள் மீது அளவற்ற பாசமும், அக்கறையும் கண்டிப்பாக இருக்கிறது. ஆனால், அவற்றை காட்ட விழையும் சந்தர்ப்பத்தில் தான் அநேகமான தாய்மார்கள் தவறு செய்து விடுகிறார்கள்.

உங்கள் குழந்தைகளை சிறு வயது முதல் சுயமாக இயங்க அனுமதியுங்கள். 'அதை தொடாதே, இதை செய்யாதே, வெளியில் விளையாடாதே, ஓடாதே, கத்தாதே' என்று தொட்டதுக்கெல்லாம் தடை விதிக்காதீர்கள். குழந்தைகள் துள்ளி விளையாட வேண்டிய பருவமிது. அவர்களின் சின்னச் சின்ன ஆசைகளுக்கு தடை விதிக்காதீர்கள். குழந்தையை இப்படி அடக்கத் தொடங்கினீர்கள் என்றால் உங்கள் குழந்தை சுறுசுறுப்பற்ற சோம்பல் மிக்க குழந்தையாக வளரக் கூடும்.

அவர்கள் செய்யும் சின்னச் சின்னத் தவறுகளைப் பெரிது படுத்தாதீர்கள், அன்பால் சொல்லி திருத்துங்கள். சிறு குழந்தை தானே, சட்டென்று புரிந்து கொள்ளும். அதை விடுத்து சின்னத் தவறுகளுக்கெல்லாம் அடித்து திருத்த பார்த்தீர்களென்றால் விடை பூச்சியம் தான். ஒன்று அடிவாங்கி, வாங்கி மன வெறுப்பில் முரட்டுத்தனமாக உங்கள் பிள்ளைகள் வளரலாம். அல்லது சின்ன விடயங்களுக்கு கூட பயப்படுகின்ற பயந்த சுபாவமுடையவர்களாக வளரலாம். எப்படி வளர்த்தாலும் அது ஆபத்தே.



குழந்தை விரும்பாத உணவுளை வற்புறுத்தி திணிக்காதீர்கள். 'போதும்' என்று சொன்ன பிறகும் உணவை வாய்க்குள் வைத்து தள்ளாதீர்கள். இவையெல்லாம் குழந்தைகளுக்கு உணவின் மீதும், உங்கள் மீதும் வெறுப்பையே ஏற்படுத்தும்.

பள்ளி செல்ல முன்பே இத்தனை முரண்பாடுகள் என்றால் குழந்தை பாடசாலை செல்லத் தொடங்கிவிட்டால் பிரச்சினைகள் புதிது புதிதாக முளைக்கத் தொடங்கி விடுகின்றன.

ஆரம்ப காலத்தில் பள்ளி செல்ல மறுத்து சில குழந்தைகள் அடம் பிடிக்கும். அவர்களைக் கவனமாகக் கையாளுங்கள். அடித்து உதைத்துக் கொண்டு போய் பாடசாலையில் விட நினைக்காதீர்கள். குழந்தைகள் தெரிவு செய்யும் துறையிலேயே அவர்களை செல்ல விடுங்கள். 'எனக்கு பரதநாட்டிய வகுப்பு போக ஆசையாயிருக்கும்மா' என சொல்லும் குழந்தையிடம், 'அதெல்லாம் வேணாம். நீ சங்கீத வகுப்புக்கு போ' என்று அவளது ஆர்வத்தை புறக்கணிக்காதீர்கள். தன்னால் எது முடியும் என்று குழந்தைகள் அறிவார்கள். நடனம், சங்கீதம், சித்திரம், விளையாட்டு என ஒவ்வொரு குழந்தையும் ஒவ்வொரு துறையில் திறமையாயிருக்கும். அந்தத் துறைகளில் அவர்களை ஊக்குவியுங்கள். அது தான் அவர்களது எதிர்காலத்துக்கு நல்லது.

எதாவது ஒரு பாடத்தில் குழந்தை குறைவான புள்ளியைப் பெற்றுவிட்டால் குழந்தையை திட்டாதீர்கள். ஏன் அந்தப் பாடத்தில் புள்ளி குறைந்தது? என யோசித்து அறிந்து அந்தப் பாடத்தில் அந்தக் குழந்தையை கவனம் செலுத்த வையுங்கள்.

உங்கள் குழந்தையை விட கூடிய புள்ளி பெற்றிருக்கும் எதிர் வீட்டு குழந்தையுடன் ஒப்பிட்டு பேசாதீர்கள். அது குழந்தைகள் மனதில் தாழ்வுணர்ச்சியை ஏற்படுத்தும். மாறாக, "அவனை விட நீ கெட்டிக்காரன்டா செல்லம், இந்த முறை மார்க்ஸ் குறைவாயிருக்கு என்று கவலைப்படாதே அடுத்த முறை நீதான் நிறைய மார்க் எடுப்பாய்" என்று தித்திப்பான வார்த்தைகளால் நம்பிக்கையையும், ஊக்கத்தையும் அளியுங்கள்.

உங்கள் குழந்தைகளின் சின்னச் சின்ன ஆசைகளை மறுதலிக்காதீர்கள். சின்னச் சின்ன சாதனைகளை அலட்சியப் படுத்தாமல் தட்டிக்கொடுங்கள். உற்சாகப் படுத்துங்கள்.

அப்துல் கலாம், முரளீதரன், சானியா மிர்சா, கல்பனா சாவ்ல் எல்லோரும் வானத்திலிருந்து குதித்துவிடவில்லை. நம் மத்தியில் இருந்து தான் உயர்ந்தார்கள் என்பதை மறந்துவிடாதீர்கள்.

தாயின் வார்த்தைகள் தான் குழந்தைகளுக்கு உற்சாக டொனிக்குகள். குழந்தையின் முதல் பள்ளிக்கூடமே தாய் தான்.

சகோதரிகளே! தாய்மையடைவதை விட பூரிப்பைத் தருவது, உங்கள் குழந்தைகளை நல்லவர்களாக, திறமையானவர்களாக வளர்த்தெடுப்பது.

ஒவ்வொரு குழந்தையும் எதிர்கால சமூகத்தின் தூண்கள். அவர்களை திறம்பட வளர்த்தெடுப்பது உங்கள் கைகளில் தான் தங்கியுள்ளது.

-இந்து-

## பியூட்டி
### உங்கள் சொய்ஸ்

**வாளைப்பழம்:-**

சருமம் நன்றாக வரண்டு பொலிவின்றி காணப்படுபவர்கள். நன்கு கனிந்த மஞ்சள் வாழைப்பழத்தை மசித்து ஒரு தேக்கரண்டி தேன் கலந்து முகத்தில் தடவி 15 நிமிடங்களின் பின் வெதுவெதுப்பான தண்ணீரில் கழுவிவிட வேண்டும்.

**ஸ்ட்ரோபரி:-**

விட்டமின் சி சத்து நிறைந்த பழவகை இது. ஸ்ட்ரோபரியை மசித்து அப்படியே முகம் கண்கள் என எல்லா இடங்களிலும் தடவி பத்து நிமிடங்கள் ஊறியதும் குளிர் தண்ணீரை முகத்தில் அடித்துக் கழுவி விடவும். குளிர்மையாக உணர்வீர்கள்.

**பப்பாளி:-**

சருமத்தை வெளுக்கச் செய்வதில் மிக முக்கிய பங்கு வகிக்கிறது பப்பாளி. பப்பாளியை மசித்து அதன் சுழை எடுத்து கொஞ்சம் பால் விட்டு கலந்து முகத்தில் தடவவும் பத்து நிமிடங்கள் கழித்துக் கழுவலாம்.

**தக்காளி:-**

தக்காளி ஒரு இயற்கையான பிளீச்.

சாறை தண்ணீரோடு கலந்து முகத்தில் தடவி ஐந்து நிமிடங்கள் கழித்து குளிர் நீரில் கழுவவும் சருமம் பளிச்சென மாறும்.

**அப்பிள்:-**

அப்பிளிலுள்ள பெக்டின் என்ற நொதியம் சருமத்துக்கு ஊட்டமளிக்க கூடியது. அப்பிளின் சதைப்பற்றான பகுதியை மசித்து முகத்தில் தடவி சிறிது நேரம் ஊறவிட்டு கழுவினால் வியர்குரு, அலர்ஜி என்பவை நீங்கும்.

**மோர்:-**

எண்ணெய் வழிகின்ற சருமத்துக்கு மோரைத் தடவி சிறிது நேரம் ஊறவிட்டு கழுவலாம்.

**குங்குமப் பூ:-**

இரண்டு கிராம் குங்குமப் பூவை இரண்டு மேசைக்கரண்டி பாலில் கொதிக்கவைத்து கூழாக்கி கொள்ள வேண்டும். இந்தக் கலவையை முகத்தில் மற்றும் கழுத்தில் தடவி கால் மணி நேரம் ஊறவிட்டு கழுவினால் நிறம் பளிச்சென மாறும்.

## வாரம் ஒரு கேள்வி-பதில்

**கே:- எனக்கு இப்போது 18 வயது. உயர்தரம் கற்று வருகிறேன். எனது 16 வயதில் ஒருவரைக் காதலித்தேன். வீட்டுக்கு தெரியவந்ததும் என்னை ஏசி அடித்தார்கள். மறந்து விடச் சொல்லி வற்புறுத்தினார்கள். அவர்கள் சொன்னதும் இது பருவக்கோளாறோ என்று நினைத்து நானும் அவருடன் தொடர்பை நிறுத்திக் கொண்டேன். ஆனால், வீட்டில் இப்பொழுதும் என்னை அதே கண் கொண்டு பார்க்கின்றனர். சின்ன தவறுக்கு கூட அதையே சுட்டிக்காட்டி ஏசுகின்றனர். நான் காதலித்தவர் இப்பொழுது வேறொரு பெண்ணைக் காதலித்துக் கொண்டிருக்கிறார். ஆனால் என்னை வீட்டார் நம்ப மறுக்கின்றனர். நான் என்ன செய்வது? கண்ணீருடன் பதிலுக்காய் காத்திருக்கிறேன்.**

**க.வந்தனா,**
**மட்டக்களப்பு.**

ப:- காதல் அழகான, அற்புதமான விடயம். காதலிக்காத மனிதனே உலகில் கிடையாது. எல்லோரும் அனுபவிக்க வேண்டிய விடயம் காதல். ஆனால் பதின்நான்கு முதல் இருபது வயது வரை உள்ள பிள்ளைகள் தமக்கு ஏற்படுகின்ற பருவக் கோளாறை எதிர்பால் கவர்ச்சியை காதல் என்று தவறாக அர்த்தம் கற்பித்துக் கொள்கின்றனர். அது தான் பிரச்சினை. சரி, பிழை தெரியாத அந்த வயதில் பிள்ளைகள் தவறு விடும் போது பெற்றோர் சொல்லித் திருத்த வேண்டும். பிள்ளையை 'மறமற'.என சொல்லிவிட்டு அடிக்கடி பெற்றோரே அதை ஞாபகமூட்டிக் கொண்டிருக்கின்றனர். இது தான் அநேக பெற்றோர் விடுகின்ற தவறு.

வந்தனா, நீங்கள் காதலித்தவரைப் பற்றி இப்போது நன்றாகத் தெரிந்திருக்கும். நீங்கள் சூடு கண்ட பூனை. நிச்சயம் அடுப்பங்கரையை நாடமாட்டீங்கள் என நான் நம்புகிறேன்.

இப்போதைய உங்கள் இலக்கு கல்வி மட்டுமே. கஷ்டப்பட்டு படியுங்கள். நல்ல தொழில் செய்து முன்னேறுங்கள். உங்கள் பெற்றோருக்கும் உங்கள் மீது நம்பிக்கை பிறக்கும்.

யார் சொல்வதைப் பற்றியும் கவலைப் படாதீர்கள். கண்ணீர் வாழ்வையே சிதைத்துவிடும். 'வாழ்த்துவோர் வாழ்த்தட்டும், தூற்றுவோர் தூற்றட்டும்' என்று நினைத்துக் கொண்டு உங்கள் வழியில் செல்லுங்கள். தடைக்கற்களை படிக்கற்களாக்கிக் கொள்ளுங்கள்.

நிஜமான காதல் உங்களுக்கு தகுந்த வயதில் வந்தால் பெற்றோரிடம் சொல்லுங்கள். அப்படியே வராமல் போனாலும் பிரச்சினையில்லை. காதலுக்கும், திருமணத்திதுக்கும் உங்களுக்கு இன்னும் காலமிருக்கிறது.

இப்போது நீங்கள் காதலிக்க வேண்டியது கல்வியை மட்டுமே. நிச்சயம் வெற்றியடைவீர்கள்.

## சமையல் டிப்ஸ்...

⊢ பப்படத்தை பிரிட்ஜில் வைத்துவிட்டு பிறகு எடுத்துப் பொரித்தால் அதிகம் எண்ணெய் உறிஞ்சாது.

⊢ வாழைப் பூவை நன்கு ஆய்ந்து மிக்ஸியில் ஒரு நிமிடம் போட்டு அரைத்தால் அழகாக பொடிப் பொடியாக வரும்.

⊢ வெங்காயத்துடன் சிறிது உப்பைச் சேர்த்தால் விரைவாக வதங்கிவிடும்.

⊢ குழந்தைகள் ஐஸ்கிரீம் சாப்பிட்ட உடனே ஒரு தம்ளர் சுடு நீரைக் குடிக்கச் செய்தால் சளி பிடிக்காது.

⊢ எந்தத் துவையல் செய்வதாக இருந்தாலும் சிவப்பு மிளகாயின் அளவை சற்றுக் குறைத்து, பச்சை மிளகாயை சேர்த்து அரைத்தால் சுவையும், மணமும் கூடுதலாய் இருக்கும்.

⊢ காலை நேர அவசரத்தில் கரட், போஞ்சி போன்ற எந்த மரக்கறி என்றாலும் நன்றாக கழுவி அடுப்பில் வைத்துவிட்டு வெந்த பிறகு எடுத்து நறுக்கினால் இலகுவாக இருக்கும். இப்படி செய்வதால் மரக்கறியின் நிறமும் மாறாது. விட்டமினும் குறையாது.

⊢ ஒரு தம்ளர் ரவையை ஒரு சட்டி தயிரில் கொட்டிக் கலந்து உப்புமா செய்தால் வித்தியாசமான சுவையுடன் இருக்கும்.

யசோ கிருஷ்ணராஜா,
நாவலப்பிட்டி.



## பெண்

பொறுமையின் சிகரமே
குடும்ப குலவிளக்கே
கண்களில் கண்ணீர்
கரை புரண்டோட
சிதறிய முத்துக்களாய்...
வாழ்க்கையே போர்க்களம்
வாழ்ந்துதான் பார்க்கலாமென
வாழாதே!...
வாழநினைத்தால் வாழலாம்
ஆனால் வாழ மனம்
நினைக்கலையேயென
ஏங்காதே!...
உனக்கோர் காலம்
உனக்கோர் நேரம்
அன்று நீ
வானத்தின் விண்மீனாய்,
இருளகற்றும் சுடர் ஒளியாய்,
மொட்டவிழ்ந்த மென் மலராய்,
விலையுயர்ந்த மாணிக்க
மாதுவாய்
வாழ்வாய்....
வாழ்விலுயர்வாய்...

எஸ்.ஜெயா,
கிளிநொச்சி.

## சமைக்க சுவைக்க




**தேவையான பொருட்கள்:-**

| | |
|---|---|
| கோதுமை மா | 500 கிராம் |
| சீனி | 250 கிராம் |
| நெய் | 200 மி.கிராம் |
| பால் | 250 மி.லீற்றர் |
| அப்பிள் | 3 |
| முந்திரிப்பருப்பு | 100 கிராம் |
| கொக்கோ | 2 மேசைக் கரண்டி |
| தேங்காய் துருவல் | 1/2 மூடி |
| திராட்சை | 100 கிராம் |
| சோடா உப்பு | சிறிதளவு |

**செய்முறை:-**

•சிறிது நெய்யில் முந்திரி, திராட்சையை வறுத்து எடுத்துக் கொள்ளவும்.

•மீதமுள்ள நெய்யில் கோதுமை மாவையும் வறுத்துக் கொள்ளவும்

•பால், சீனி, தோல் சீவிய அப்பிள் அனைத்தையும் விழுதாக அரைக்கவும்.

•அவற்றை கோதுமை மாவில் கலந்து சோடா உப்பு, கொக்கோ சேர்க்கவும்.

•பிறகு தேங்காய் துருவலை தூவி குக்கரில் வைத்து ஆவியில் 15 நிமிடம் வேகவைத்து எடுக்கவும்.

•அதன் மீது நெய்யில் வறுத்த முந்திரி, திராட்சையை தூவவும்.

•ஆறியதும் துண்டுகளாக வெட்டிக்கொள்ளவும்.

## கேள்வி-பதில்

*அன்புக்குரிய சகோதரிகளே!*

உங்களுக்குரிய இந்தப் பக்கத்தில் கேள்வி-பதில் பகுதி ஒன்றை ஆரம்பித்துள்ளோம்.

உங்கள் கேள்வி குடும்பப் பிரச்சினை சம்பந்தப்பட்டதாக இருக்கலாம், சமூகப் பிரச்சினை சம்பந்தப்பட்டதாக இருக்கலாம் அல்லது தனிப்பட்ட பிரச்சினையாக இருக்கலாம். உங்களுடைய கேள்விகளுக்கு பதில் அளிக்கப்படும். அத்துடன் இப் பகுதிக்கு வாசகர்களாகிய உங்களிடம் இருந்து ஆக்கங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன.

**உங்கள் கேள்விகள், ஆக்கங்கள் ஆகியவற்றை அனுப்ப வேண்டிய முகவரி:-**

பெண்
சுடர் ஒளி வார இதழ்
85, ஜயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சென்னைதான் எனக்குப் பிடிச்ச ஊரு

ஹோட்டலில் தங்கி தமிழ் படங்களில் நடித்துவரும் அசின், இப்போது சென்னை ஹாரிங்டன் வீதியில் அடுக்குமாடி வீடு வாங்கி குடியேறி விட்டார். அடுத்து சென்னையிலே பிரமாண்டமாக சொந்த பங்களா கட்டி நிரந்தரமாக குடியேறுகிறார். 'நான் கேரளாவை சேர்ந்தவளாக இருந்தாலும், தமிழ் படங்களில் தான் என்னுடைய திறமையைக் காட்ட வாய்ப்புக் கிடைத்தது, அதன் மூலம்தான் நான் பேசப்படும் நடிகையாக உயர்ந்திருக்கிறேன். எனவே சென்னைதான் எனக்குப் பிடிச்ச ஊரு' என்கிறார்.

# ஆகாஷ் - நேகா ஜோடி சேரும் 'என்கவுண்டர்'

லட்சுமிராய், புதுமுகங்கள் வசந்த், சரண்ராஜ் நடித்த "அழகிய ஆபத்து" படத்தை தயாரித்துக் கொண்டிருக்கும் கே.எஸ்.எம். பிலிம்ஸ் பட நிறுவனம் அடுத்ததாகத் தயாரிக்கும் படம் "என்கவுண்டர்".

இந்தப் படத்தில் ஆகாஷ் கதாநாயகனாக நடிக்கிறார். கதாநாயகியாக நேகா நடிக்கிறார்.

ஆர்.சுந்தராஜன், தலைவாசல் விஜய், இளவரசு, முத்துக்காளை, ஜெயா முரளி, வடிவுக்கரசி, டி.பி.கஜேந்திரன் ஆகியோரும் நடிக்கிறார்கள். ஒளிப்பதிவு: யு.கே.செந்தில்குமார்.

எம். ராஜ் கண்ணா பாடல்களுக்கு பீட்டர் எம். ஜோசப் இசை அமைத்து தமிழ் இசையமைப்பாளராக அறிமுகமாகிறார். இவர் ஏற்கனவே கன்னடத்தில் இசை அமைப்பாளராகி சில படங்களின் மூலம் பரபரப்பாகப் பேசப்பட்டவர்.

எடிட்டிங்: எம்.என். ராஜா, கலை: ஷின்ஷி, நடனம்: அஜெய்ராஜ், ஸ்டண்ட்: ஜீவா, தயாரிப்பு மேற்பார்வை: டி.பி. வெங்கடேசன், நிர்வாகத் தயாரிப்பாளர்: வி.குணசேகரன், இணைத் தயாரிப்பு: எஸ். முத்துக்குமாரவேல், தயாரிப்பு: கே. மகேந்திரன், எம்.ஷாகுல் ஹமீது.

கதை, திரைக்கதை, வசனம், டைரக்ஷன்: எம். ராஜ் கண்ணா. படப்பிடிப்பு கடந்த 1ஆம் திகதி சென்னையில் தொடங்கியது. தொடர்ந்து கேரளா, விசாகப்படினம் போன்ற இடங்களில் நடைபெறுகிறது.

போலீஸ் துறையில் கையாளப்படும் 'என்கவுண்டர்' முறைபற்றி புதிய கோணத்தில் சொல்லும் கதை.





ராதிகாவின் ராடன் மீடியா ஓர்க்ஸ் நிறுவனம் தயாரிக்கும் 'தலைமகன்' திரைப்படத்திலிருந்து சில காட்சிகள். ஆர்.டி.பாலாஜி இப்படத்தை இயக்குகிறார். சரத்குமார், நயன்தாரா, வடிவேல், பிரகாஷ் ராஜ், ..... உள்ளிட்டோர் இதில் நடித்துள்ளனர்.

# நடிகை நமீதாவின் ரூ.1 1/2 லட்சம் வைர மோதிரம் மாயம்

சத்தியராஜ், சிபிராஜ், நமீதா ஆகியோர் இணைந்து நடிக்கும் புதிய படம் 'கோவை பிரதர்ஸ்.' இந்தப் படத்தை சக்தி சிதம்பரம் டைரக் செய்கிறார். படப்பிடிப்பு சென்னை மற்றும் சுற்றுப்புறங்களில் நடைபெறுகிறது.

கதைப்படி நமீதாவும், சிபிராஜும் காதலர்கள். இரண்டு பேர் சம்மந்தப்பட்ட காதல் காட்சிகள் மகாபலிபுரம் கடற்கரையில் படமாக்கப்பட்டன. காலை 9 மணிக்கு ஆரம்பித்த படப்பிடிப்பு, மாலை 6மணி வரை நடைபெற்றது. சிபிராஜும், நமீதாவும் கட்டிப்பிடித்தபடி கடலில் குளிப்பது போன்ற ஒரு காட்சியை டைரக்டர் சக்தி சிதம்பரம் படமாக்கிக் கொண்டிருந்தார். படப்பிடிப்பு முடியப்போகும் நேரத்தில், நடிகை நமீதா திடீரென அலற ஆரம்பித்தார்,

படப்பிடிப்பு குழுவினர் அனைவரும் அதிர்ச்சி அடைந்தனர். நமீதா 'ஓ' என கதறிஅழுதார். டைரக்டர் சக்தி சிதம்பரம் படப்பிடிப்பை நிறுத்திவிட்டு, நமீதாவிடம் போய் என்ன நடந்தது? என்று விசாரித்தார்.

நமீதா தன் கை விரலில் அணிந்திருந்த வைர மோதிரத்தை காணவில்லை என்று அழுது கொண்டே கூறினார். சிபிராஜை கட்டிப்பிடித்தபடி கடலுக்குள் உருண்டு புரண்ட போது, விரலில் அணிந்திருந்த மோதிரம் கழன்று விட்டதாக அவர் கூறினார்.

உடனே படப்பிடிப்பு குழுவினர் அனைவரும் கடற்கரையில் நமீதாவின் மோதிரத்தை தேட ஆரம்பித்தார்கள். நீண்ட நேரம் தேடியும் மோதிரம் கிடைக்காததால், நமீதா சோகமாக காணப்பட்டார்.

படப்பிடிப்பு ரத்துச் செய்யப்பட்டது.

காணாமல் போன நமீதாவின் மோதிரத்தின் மதிப்பு, ஒரு லட்சத்து அறுபத்தையாயிரம் ருபாய். அதை நமீதாவின் போய் பிரண்ட் தனது நட்பின் அடையாளமாக நமீதாவுக்கு கொடுத்திருந்தார். கடந்த 5 வருடங்களாக அந்த மோதிரத்தை தன் கை விரலில் அணிந்திருந்ததாகவும், அதை கடலில் தவறவிட்டதை மிகப்பெரிய இழப்பாக கருதுவதாகவும் நமீதா கூறினார்.

## சினி சினி

- கிளாசிக் பிலிம் சொசைட்டி ஆஃப் சிங்கப்பூர் என்ற அமைப்பு நடிகர் விக்ரமுக்கு 'ஸ்டார் ஆஃப் இந்தியா' என்ற விருது கொடுத்து கௌரவித்துள்ளது. தென்னிந்திய நடிகர்களில் விக்ரம் மட்டுமே இந்த விருதைப் பெறுகிறார்.
- சிவாஜிக்குப் பிறகு மூன்று அல்லது நான்கு படங்களில் மட்டும் நடிக்கத் திட்டமிட்டுள்ளாராம் சூப்பர் ஸ்ரார் ரஜினி. அதிலும் இளம் இயக்குநர்களின் படங்களில் மட்டும் நடிக்க ஆர்வம் காட்டுகிறாராம் சூப்பர் ஸ்டார்.
- சமூக சேவையில் முழுமுச்சாக இறங்கியிருக்கிறார் நடிகர் சூர்யா. இதற்காக 'சூர்யா சாரிடபில் டிரஸ்ட்' என்ற அமைப்பை ஏற்படுத்தியுள்ளார்.
- 'கோவை பிரதர்'ஸில் சிபிக்கு ஒரு நீண்ட வசனக் காட்சி. அந்த வசனத்தை சிபி ஒரே டேக்கில் பேசவே, ஆச்சரியத்துடன் 'எப்படி சிபி'.... என்று இயக்குநர் கேட்க, 'மண்ணின் மைந்தன்' இல் கலைஞரின் வசனத்தையே பேசியாச்சு! என்று ஒரே போடு போட்டுள்ளார்.
- 'இலக்கணம்' எனும் படத்தில் பாரதியாரின் பாட்டுக்கு பவதாரணி ட்யூன் போட்டிருக்கிறார் பாருங்கள் கேட்டுக் கொண்டே இருக்கலாம் என்று பாராட்டுபவர் கணவர் சபரிராஜா.
- 'நான் கேரளத்தில் அறிமுகம் ஆனாலும் என்னை வளர்த்தவர்கள் தமிழ் மக்கள் தான். அதனால் தமிழ் மக்களை நிச்சயமாக மறக்க முடியாது' என்கிறார் நயன்தாரா. அத்தோடு தமிழ் நன்றாக பேச ஆரம்பித்து விட்டதால் மலையாளம் மறந்து போய் விடும் போலிருக்கிறதாம் அம்மணிக்கு. தமிழ் வெல்க!
- நடிகர் விஜய் புதிதாக கறுப்புநிற பி.எம்.டபிள்யூ காரை இறக்குமதி செய்துள்ளார். இந்தக் காருக்கு டிரைவர் வைத்துக் கொள்ளாமல் தானே ஓட்டுகிறார் விஜய்.
- சட்ட குடும்பத்திலிருந்து வந்த நடிகையை லவட்டியிருக்கிறார் ஜெயம் குடும்ப வாரிசு. இருவரும் இணைந்து நடிக்கும் ஹார்ட் தீவ் படத்தின் இடைவேளைகளில் இருவரும் இணைந்தே காணாமல் போகிறார்களாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# கோவை பிரதர்ஸ்

'என்னம்மா கண்ணு', சார்லி சாப்ளின்', 'காதல் கிறுக்கன்', 'மகா நடிகன்', 'இங்கிலீஸ்காரன்' இந்த வெற்றிப் படங்களைத் தொடர்ந்து சக்தி சிதம்பரம் எழுதி இயக்கும் படம் 'கோவை பிரதர்ஸ்'.

இதில் சத்யராஜும், சிபிராஜும் இணைந்து நடிக்கிறார்கள். ''சத்தியராஜோடு 'மகாநடிகனில்' கலக்கிய நமீதா இதில் சிபிராஜுடன் ஜோடி சேர்கிறார். ''சத்தியராஜும், சிபிராஜும் ஒரே பெண்ணைப் பார்த்து லொல்லு விடுகிறார்கள்.

முதன் முறையாக அருண்பாண்டியன் 'கோவை பிர்தர்ஸ்' படத்தில் வில்லனாக அறிமுகமாகிறார். இசையமைப்பாளர் இமான் முதன்முறையா பாடகராகவே நடிக்கிறார். வழக்கமாக சத்தி சிதம்பரம் இயக்கத்தில் உருவாகும் படங்களில் சத்தியராஜ் பிரபல ஒரு கெட்டப்பில் வலம் வருவார். கோவை பிரதர்ஸில் 'கஜினி' சஞ்சய் ராமசாமியாக ஒரு காட்சியில் கலக்கி இருக்கிறார்.

உயர் பதவி வகிப்பவர்கள் அந்தப் பதவியை துஷ்பிரயோகம் செய்வதினால் ஏற்படும் விளைவுகள் தான் 'கோவை பிரதர்ஸ்' படத்தின் கதை.

இயக்குநர் சக்தி சிதம்பரத்திற்கும் ஒரு அரச அதிகாரிக்கும் சில வருடங்களுக்கு முன் ஏற்பட்ட வாக்குவாதம் தான் இந்தப் படத்தின் கதைக் கரு. தனியார் தொலைக்காட்சி நிறுவனத்தில் கோவை பிரதர்ஸ் என்ற பெயரில் நிகழ்ச்சி தயாரிக்கும் பொறுப்பில் சத்தியராஜ், சிபிராஜ் இருக்கிறார்கள்.

சிபிராஜ் ஆக்ஷன், அடிதடி, காமேடி எல்லாவற்றிலும் கலக்கியிருக்கிறார். சென்னை குற்றாலம் அம்பாசமுத்தரம், பாலருவி, தேனருவி, சுந்தர பாண்டிபுரம், மேக்கரை, அச்சன் கோவில், ஆரிங்காவு போன்ற இடங்களில் தொடர்ச்சியாக ஐம்பது நாட்கள் படப்பிடிப்பு நடந்திருக்கிறது.

குற்றாலத்திற்கு அருகில் உள்ள கரடி பால்ஸ் என்கிற இடத்தில் அதிகாலை நேரம் கமெரா இறங்கியது தான் தாமதம். வனத்துறை அதிகாரிகள் இயக்குநர் சக்தி சிதம்பரத்தை சூழ்ந்து கொண்டார்கள்.

கமெராவை பறிமுதல் செய்ததோடு சக்தி சிதம்பரத்தை காவல் நிலையத்திற்கும் அழைத்துச் சென்றார்கள். அன்றைய தினம் படப்பிடிப்பு ரத்துச் செய்யப்பட்டது. வனத்துறைக்குச் சொந்தமான இடத்தில் நுழைந்ததற்காக ரூபாய் 65 ஆயிரம் அபராதமும் விதித்தனர்.

உமா துடுக்குத்தனமான கேரக்டரில் நடித்திருக்கிறார். அவரது முறைமாமன் சத்யராஜ் ஏகாதேசி என்ற கேரக்டரில் வடிவேலு கலகலக்க வைத்திருக்கிறார். சத்தியராஜ், சிபிராஜ், வடிவேல், உமா ஆகியோருடன் அருண்பாண்டியன், 'வெண்ணிற ஆடை' மூர்த்தி, கோவை சரளா, மோகன், நடராஜன், மனோபாலா, பாலு ஆனந்த், அல்வா வாசு, போண்டா மணி, மார்த்தாண்டம், தம்பி ராமய்யா, ஆகியோர் நடித்திருக்கிறார்கள். ஒளிப்பதிவு: சுரேஷ்தேவன், இசை: இமான், கலை: வாசன் கருணா, பாடல்கள்: நா.முத்துக்குமார், நடனம்: சிவசங்கர், சாந்தி, அஜய்ராஜ், ஸ்ரண்ட்: தளபதி தினேஷ், கதை, திரைக்கதை வசனம் இயக்கம்: சக்தி சிதம்பரம், தயாரிப்பு சக்தி ப்ரித்தம்.

## 'வஞ்சகன்' படத்தில் சி.பி.ஐ. அதிகாரியாக சுமன்

சி.பி.ஐ வசம் ஒரு வழக்கு ஒப்படைக்கப்படுகிறது. சி.பி.ஐ அதிகாரிகளில் குறிப்பிடத்தக்கவர் சங்கர். இவர் ஏதாவது ஒரு வழக்கை கையில் எடுத்தால் அதில் வெற்றி பெற்றே தீருவார்.

அவர் கையில் தொடர் கொலை பற்றிய வழக்கு வந்து சேர விசாரணைக்கு இறங்கினார். அவர் விசாரணை நடத்த இறங்கி 2ஆவது நாளே அவருக்கு நெருக்கமான பெண் ஜீவாவைக் கடத்துகிறார்கள். மேற்கொண்டு விசாரணையில் இறங்கினால் அவள் கொலை செய்யப்படுவாள் என்று மிரட்டல் விடுத்தனர். அவர்களின் இருப்பிடத்தைத் தேடிக் கண்டுபிடித்த அந்த அதிகாரி சங்கர், அந்தக் கும்பலிடம் பயங்கரமாக மோதி; அவளைக் காப்பாற்றினார்.

இப்படி ஒரு காட்சி வீரா பிலிம்ஸ் 'வஞ்சகன்' என்ற படத்துக்காகப் படமானது.

சி.பி.ஐ அதிகாரி சங்கராக சுமன், இளம் பெண்ணாக ஜீவா நடித்தனர். வில்லன்களாக தேவன், சேது விநாயகம், அஜெய்ரத்தினம், ஜெய்சூரியா வந்தனர்.

இது தவிர 'மகாநதி' சங்கர், செந்தில், சின்னிஜெயந்த், ஷகீலா, கிரேன் மனோகர், பாண்டு, பாலு, ஆனந்த், மாறன், கொட்டாச்சி, மாஸ்டர் சந்திரஹாசன் ஆகியோர் நடிக்கிறார்கள்.

2ஆவது காதாநாயகியாக மலை ஜாதிப்பெண் ஒருவர் நடிக்கிறார். பானு, ஜீனத் என்ற அக்கா - தங்கைகள் கவர்ச்சி ஆட்டம் போட்டுள்ளனர். ஒளிப்பதிவு: கே.ஜி.சங்கர், இசை: பாடல்கள், ஜான் பீட்டர், எடிட்டிங்: ஆர்.டி.அண்ணாத்துரை.

நடனம்: சன்சிங் கண்ணா, சீனுபிரியா, கதை, திரைக்கதை, வசனம், டைரக்ஷன் ஏ.எம்.பாஸ்கர், தயாரிப்பு: எஸ்.வி.ஜெயபிரகாஷ்.

## சந்தியா துறு துறு பதில்



எப்போதும் துறு துறு என்று இருக்கும் காதல் சந்தியாவிடம் கேள்வி கேட்டாலும் துறு துறு என்றே பதில் அளிக்கிறார்.

காதல் பற்றி?
நல்ல உணர்வு.

உங்கள் செல்லப் பெயர்?
அம்மு

உங்கள் எதிர்காலப் படங்கள்?
வல்லவன், பொக்கிஷம், கூடல் நகர்.

உங்கள் எதிர்காலத் திட்டம்?
ஆடை வடிவமைப்பு நிபுணர் ஆவது, படிப்பை முடிப்பது.

உங்களுக்கு கிடைத்த பெரும் பாராட்டு?
டைரக்டர்கள் பாலச்சந்தர், ஷங்கர் பாராட்டியது.

உங்களைப் பற்றி நீங்கள் சொல்லுங்கள்?
என்னைப் பற்றி நான் சொல்லக் கூடாது. நீங்கள் தான் சொல்ல வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவரவர் வாழ்க்கை

சிறுகதை

வாசுகி கந்தசாமி



இந்தக் கல்யாணத்துக்கு போவதா என்பதில் நேற்றிலிருந்தே வதனாவுக்குள் பெரும் போராட்டம். சினேகிதி தயங்கியபடி தந்த அழைப்பிதழைப் பார்த்ததுமே, ஓடோடிப் போய்- பிரதீப்பின் முகத்தில் காறி உமிழவேண்டும் போலவும் திருமண வைபவத்துக்காக திரண்டிருக்கும் உற்றவர்கள் முன்னிலையில் அவனது சட்டையைப் பிடித்து உலுக்கி நியாயம் கேட்க வேண்டும் போலவும் உள்ளுக்குள் ஆவேசம்!

ஆனால் காதலித்தவளுக்கே இவ்வளவு தைரியமாக அழைப்பு விட்டிருப்பவன் ஆம்பிளை என்ற திமிரில் நேரிடையாகவே இவளைத் தரக்குறைவான வார்த்தைகளினால் சாடினால்.... அவமானம் இவளுக்குத்தான்! இவள் பார்க்கும் டாக்டர் உத்தியோகத்துக்கும் அது உவப்பானதாக இராது. உறக்கமின்றி கழிந்த இரவு முழுவதும் யோசித்துப் பார்த்ததில் அவனுக்காக இவ்வளவு காலமும் காத்திருந்தது வீண்வேலை என்பது புலனாகியது. அந்த ஏமாற்றம் தந்த வேதனை அவளைப் பாடாய்ப் படுத்தியது. அதனால்தான் ஆரவாரமில்லாமல் துயரத்தைத் தந்தவனுக்கே துயரத்தை பரிசளிப்பது என்ற முடிவுக்கு வந்திருந்தாள்!

"ஆம்... வதனாவா, அமெரிக்காவிலிருந்து எப்ப திரும்பினாயம்மா? முன் வரிசையில் இடமிருக்கு..." என்று உபசரித்த தணிகாசலத்தை ஊன்றிப்பார்த்தாள் வதனா. முகத்தில் புதிதாக முளைத்துள்ள மூக்குக் கண்ணாடியைப் போல அவரது அகமும் கூட மாறிவிட்டதா? கல்யாண மண்டபத்தில் பலகாரத்தட்டுக்களைத் தாங்கியவாறு குறுக்கும் நெடுக்கும் சுழன்று கொண்டிருந்த பிரதீப்பின் இளைய தங்கைகள் இருவரும் கூட குறைந்தபட்சம் சினேகபூர்வமாகவேனும் இவளை அணுகாதது என்னவோ செய்தது.

மணவறையில் பிரேமினி கூறைச் சேலையின் ஜொலிப்பில் தங்க ஆபரணங்கள் பூட்டி கறுப்பு நிலவாக கொலுவீற்றிருந்தாள்! அவளை ஒட்டிக்கொண்டு பிரதீப்பும் மணக்கோலத்தில்...

'இப்படியொரு சுயநலமிக்க குடும்பத்துக்குள் வந்து வாழ்க்கைப்பட வேண்டுமென்பதற்காகவா அம்மா அப்பாவைக் கூட ஒரு காலத்தில் எதிர்த்து நின்றேன்!' என இறந்து போனவர்களின் மீது பச்சாதாபம் பிறந்தது.

வதனாவைத் தெரிந்திராத பெண்கள் இருவர் பின்வரிசையிலிருந்து குசுகுசுப்பது வதனாவின் காதிலும் விழுந்தது. "மாப்பிள்ளைப் பெடி கல்லூரியில உயர்வகுப்பு படித்த காலத்தில ஒரு பெட்டையை விரும்பியிருந்ததாய் கேள்வி! இப்ப மணமகள் மாறியிருக்கிறபடியால் அவளைக் காய்வெட்டிவிட்டான் போல கிடக்கடி கமலம்."

"வாலிப வயதில் ஒவ்வொருத்தருக்கும் இப்படி நூறு காதல் வரும். ஆனால் கலியாணமெண்டு வரேக்குள்ள எல்லாத்தையும் கூட்டிக்கழிச்சு -இலாப நட்டங்களை கணக்குப் பண்ணித் தீரவேணும் கண்டியலோ...! வாழ்க்கை என்கிறது ஆயுளுக்கும் நிலைக்கப்போற பந்தமாச்சே.."

"நீ சொல்வது முழுக்கச் சரி பத்மா. என்ர பெறாமகளும் பள்ளிக்கூட காலத்தில படிக்கிறதை விட்டுட்டு காதலெண்டு கண்ணைமூடிக் கொண்டு திரிஞ்சவள். கட்டுப்படுத்தேலாமல் போக கொஞ்சம் விட்டுப் பிடிச்சன் பார்! அவன் படிப்பைக் குழப்பிப் போட்டு 'மெக்கானிக் வேலை' செய்ய ஆரம்பிச்சான். இந்தச் சொல்வழி கேளாத கழுதை பிறகும் கொஞ்ச நாள் அவன் பின்னாலேயே இழுபட்டாள். அதற்கப்புறம் எண்ணெயும் கொழுப்பும் பிரட்டின ஊத்தைச் சேட்டையே நாலைஞ்சு நாளுக்குப் போட்டுத் திரிகிறவனுக்கு வாழ்க்கைப்பட்டு என்ன சுகத்தை காணப்போறமெண்டு உலகம் விளங்கிட்டுது; திரும்பி வந்துட்டா, இப்ப மச்சான்காரன் ரிக்கட் அனுப்பி வெளியில போட்டாள்."

"பிரதீப்பும் தன்னை நம்பி நிற்கின்ற இரண்டு தங்கச்சிகளையும் கரை சேர்க்க சீதனத்தோடு இனாமாக கொஞ்சம் அதிகமாக எதிர்பார்த்திருப்பான் போலும். அதனால அந்தக் காதல் முறிஞ்சு போயிருக்கும் என்று நினைக்கிறன்."

வதனாவுக்கு எரிகின்ற நெருப்பில் எண்ணெய் ஊற்றியது அவர்களின் வார்த்தைகள்... ச்சே, அவனது தங்கைகளின் வளமான எதிர்காலத்தை எண்ணி அன்று கையறு நிலையிலிருந்தவனுக்கு அவளின் அப்பா தோள்தர முன்வந்த போது சுயமரியாதையை காரணம் காட்டி அவன் ஏற்க மறுத்தான். அதற்காக குடியிருந்த இனுவில் வீடு, தோட்டம் துரவு அனைத்தையும் விற்று தேறுவதைத் தருவதற்குக் கூட அப்பா தயாராகவிருந்தாரே....? பாவம், அம்மாவும் அப்பாவும் இறுதியில் அவளது மணக் கோலத்தைக் காணாத ஏக்கத்தோடு போய்ச் சேர்ந்து விட்டார்கள்.

இந்தப் பிரேமினியிடம் அப்படி என்ன மாயத்தைக் கண்டு சொக்கிப்போனான்? அவனுக்காக பிரேமினி எவ்வளவு விலை கொடுத்தாளோ...?

பணம் தான் அவனது குறிக்கோள் என்றால் இப்போது வதனாவிடம் கொட்டிக் கிடக்கிறதே லட்சம் லட்சமாக...! இந்தத் துரோகியின் காதலை நம்பி இடையில் கிடைத்த அனேக சந்தர்ப்பங்களை வதனா உதறிவிட்டிருந்தாள். அமெரிக்காவில் விமானமேறி ஊர் திரும்ப விருந்த சமயத்தில் கூட அந்த மலேசியத் தமிழன் ஜோர்ஜ் கூடவே ஒட்டிக் கொண்டு வந்திருந்தான். வதனா கண்டிப்பாக அவனிடம் நேரிடையாகவே சொல்லிவிட்டாள். "என்னொட வாழ்க்கைத் துணைவரை ஏற்கனவே தீர்மானிச்சுட்டன். தயவு செய்து அப்படியான எண்ணம் எதனையும் நீங்களாகவே கற்பனை பண்ணிக்கொண்டு என்னை அணுக வேண்டாம்" என்று. அப்படி உறுதியாக நின்றவள் இங்கு திரும்பிவந்து பார்த்தால்..

கறுவிக் கொண்டவள் கைப்பையை திறந்து பார்த்தாள். கல்யாணப் பரிசு பத்திரமாயிருந்தது! மணவாழ்வின் முதல் நாளே தம்பதிகளிடையே சந்தேகத்தையும் வெறுப்பையும் ஏற்படுத்தி நிரந்[illegible] கோலப் போகிறது! அவன் நினைத்து நினைத்து வருந்த வேணும்...

"குட் மோர்னிங் வதனா..." என்று காதருகில் யாரோ அழைக்கவே அவள் சிந்தனை அறுபட்டது.

"ஆ, கமலநாதன் வாங்க... வாங்க... நீங்க தூக்கி வைத்திருப்பது உங்க இரண்டாவது குழந்தையா? காலம் எவ்வளவு வேகமாக ஓடிக்கொண்டிருக்குது!"

"அமெரிக்காவை தொடர்ச்சியாக புயலும் வெள்ளமும் மாறி மாறி பாடாய்ப் படுத்தின சமயம் அங்குள்ள ஈழத்தவர்களையெல்லாம் ஒன்று திரட்டி நிவாரணப் பணிகளை முன்னெடுத்த உன் துணிச்சலை கொழும்பு ஆங்கில பேப்பரெல்லாம் முன்பக்கத்து செய்திகளாக வெளியிட்டிருந்தன தெரியுமோ? அங்கு நியூயோர்க்கில் 'கௌரவ நகர முதல்வர்' பட்டம் வேறு கிடைச்சிருக்காமே...! இதைவிட உனக்கு வேறெந்த அங்கீகாரமும் தேவையில்லை வதனா. இலவச மேற்படிப்புக்கும் வாய்ப்பிருக்கு..."

"அந்த இயற்கையின் சீற்றம் இன்னொரு வடிவத்தில சுனாமியாக உருவெடுத்ததையும் மிகப்பெரியளவில் அழிவுகளை இங்கும் ஏற்படுத்தியதையும் அங்கிருந்து அறிந்து வருத்தப்பட்டேன்! என்ன செய்ய...?" அவள் பேச்சில் வருத்தம் தெரிந்தது.

"அது நடந்து ஒரு வருஷம் கடந்த பிறகும் பாதிக்கப்பட்டவங்க வாழ்க்கை இன்னும் விடியலை... அதிலும் தமிழ்ப் பிரதேசங்களில் குந்தியிருக்க ஒரு நிரந்தர இல்லிடம் கூட அவங்களுக்கு கிடைக்கலை."

"நீ ஆராய்ச்சிக்காக புறப்பட்டுப் போன போது பணியாற்றிய அதே குழந்தைப் பிள்ளை விடுதியிலதான் இப்பவும் பொறுப்பு வைத்தியராக இருக்கிறேன். மேற்கொண்டு 'டிகிரி' முடிக்கிறதுக்கு பொருளாதார வலுவுமில்லை."

"கமலநாதன், உங்களுக்குத்தான் பிரைவேட் கிளினிக் நடத்திறதிலும் உடன்பாடில்லை. வரட்டுத் தத்துவங்களையும் நடைமுறை வாழ்க்கைக்கு ஒவ்வாத வீரவசனங்களையும் கல்லூரி நாட்களில் இருந்தே வாய் கிழியக் கத்திக் கொண்டு கிடைக்கிற வாய்ப்புக்களை வீணாக்கிட்டீங்க..." என்றவளின் வார்த்தைகள் அவரை ஆழமாகத் [illegible] ஒரு தடவை அவர் சீதனம் வாங்காமல் திருமணம் செய்ய உத்தேசித்த போது இதேமாதிரி அவரையும் பிரதீப்பையும் கடிந்திருக்கிறாள்.

தாலிகட்டும் நேரம் நெருங்க வதனாவுக்கு இருப்புக் கொள்ளவில்லை. தலைவலிக்கிறது. காரிலிருக்கும் தலைவலி மாத்திரைகளை எடுத்துக்கொண்டு வருவதாகச் சொல்லி அவசரமாக இருக்கையிலிருந்து அகன்றாள். சடுதியாக அவளில் ஏற்பட்ட முகமாற்றமும் பதற்றமும் அவளைவிட 'சீனியரான' கமலநாதனுக்குப் புரியாமலில்லை.

வெளியே சென்றவள் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு மீள இருப்பிடம் திரும்பியபோது அறுகரிசி தூவி மணமக்களை வாழ்த்தும் சடங்கு நிறைவுக்கு வந்திருந்தது. அனைவரும் புறப்பட ஆயத்தமாயிருந்தனர்.

இவளை நெருங்கிவந்த கமலநாதன் "வதனா! பிரதீப்புக்கு நடக்கும் இந்தக் கல்யாணத்தில உனக்கு உடன்பாடில்லை என்பதும் அவன் மீதான வெறுப்பு இன்னும் அதிகரிச்சிருக்கு என்கிறதும் புரியுது" என்றார்.

வதனா பேசாமலிருந்தாள். 'அவன் எதிர்பார்த்ததில் எது என்னிடமில்லை- படிப்பா, பணமா? பிறகேன் இப்பிடியொரு பச்சைத் துரோகம்...' என்ற கேள்வி வதனாவின் பார்வையில் தெறித்தது.

"மணப்பெண்ணின் உறவுகள் எவரும் இப்போது உயிரோடில்லை. மொத்தம் பதினொருபேர்... சுனாமி பேரலை ஓங்கியடித்த சமயம் வடமராட்சி கிழக்கில் வாழ்ந்த அவ்வளவு பேருமே...."

மணமக்களும் புறப்பட எழுந்தனர். அப்போதுதான் வதனா கவனித்தாள், மணமகள் வலதுபக்கம் சாய்ந்து சாய்ந்து நடந்து சென்றாள்.

"கமலநாதன் நீங்க சொல்றது..."

"ஆமாம் பிரேமினி கூட இடிந்த வீட்டுச் சிதைவுக்குள் அகப்பட்டு மூன்று நாட்களின் பின்பே மீட்கப்பட்டாள். வலது கால் முழங்காலுடன் சிதைஞ்சு அகற்றியாச்சு. சுனாமி வந்ததுக்கு இரண்டு நாளுக்குப் பிறகு அவளுக்கு கல்யாணம் முற்றாகியிருந்தது. பாவம்.. அதன் பிறகு ஆறுமாதங்கள் சித்தப்பிரமை பிடிச்சுப் போயிருந்தா! பாதிக்கப்பட்டவங்களுக்கு ஆரம்பம் முதலே தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தனது சத்திக்கு மிஞ்சின வகையில் கைகொடுத்து வருகுது...."

"நாங்கள் பல்கலைக் கழகத்தில் மருத்துவக் கற்கையை முடித்துக் கொண்டு வெளியேறிய பிறகு பிரதீப்பும் அந்த நிறுவனத்தின் அவசர கால மீளமைப்பு பிரிவின் நிர்வாகப் பணியை பொறுப்பேற்றுக் கொண்டது எனக்கு ஞாபகமிருக்கு கமலநாதன்".

".... என்ன காரணமோ தெரியாது. தனிமரமாக நிற்கிறவளுக்கு ஆயுள் முழுக்க ஒரு ஆதாரமாக இருக்க பிரதீப் விரும்பினான்! அல்லல்படுகின்ற பல்லாயிரம் மக்களுக்குள் இந்த ஒரு ஜீவனுக்காகவாவது பக்கத்துணையாயிருக்கும் ஆத்ம திருப்தி அவனுக்குக் கிடைச்சிருக்கு!" அவர் விழியோரம் ஈரம் கசிய வதனாவுக்கு மூச்சே நின்றுவிடும் போலிருந்தது.

'ஓ ஆண்டவரே... சத்தமில்லாமல் எவ்வளவுபெரிய மாற்றத்தை- எழுச்சியை ஏற்படுத்தியிருக்கிறான் பிரதீப். அது புரியாமல்....'

கைப்பையைத் திறந்து கட்டாகக் கிடந்த காகிதங்களை வெளியே எடுத்தாள் வதனா.

"வதனா இது...?" கமலநாதன் இதை எதிர்பார்க்கவில்லை.

"அவ்வளவும் பிரதீப் கைப்பட எழுதித்தந்தவை. நமக்குள்ளே இருந்த தொடர்பு இனி அடிமனத்திலிருந்தே முற்றாகத் துடைத்தழிக்கப் படவேண்டியது." என்றவள் கட்டைப் பிரித்து மூச்சடங்கிக் கொண்டிருந்த ஓமகுண்டலத்தில் போட்டாள். ஒரு நிமிடம் கொழுந்து விட்டெரிந்ததன் பின் சாம்பல் எஞ்சியது.

எல்லோரும் வெளியேறிச் சென்ற பின் மண்டபம் வெறிச்சோடிக் கிடந்தது. வதனாவின் மனத்தைப் போல... ஆனால் அந்த வெறுமைக் குள்ளும் ஒரு தெளிவு இருந்தது.

(யாழ் ஆர்ப்பனை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப் பூங்கா

## காதல் செய் மனமே!

காதல் செய் மனமே காதல் செய்
மாதா பிதா குரு தெய்வத்தை காதல்
செய்
மானசீக காதல் செய்
உன் ஆன்மா மகிழும் வரை
காதல் செய்மனமே காதல் செய்
காதலை காதல் செய்
காலத்தை நோக்கி அந்தக் கல்வியை
காதல் செய்
மானத்தை காதல் செய்
மங்காத புகழ் கொண்ட
மணித் தமிழைக் காதல் செய்
உன்னைக் காதல் செய்
உனக்குத் துணையான
பெண்ணைக் காதல் செய்
விண்ணைக் காதல் செய்
விளைச்சல் தரும் அந்த
மண்ணைக் காதல் செய்
சுற்றும் சுற்றத்தின்
உறவைக் காதல் செய்
சூதுவாதற்ற நட்பை
காதல் செய்
மெச்சும் உலகம் உன் கற்பை
காதல் செய்
செய்யும் தொழிலின் சிறப்பை
காதல் செய்
மேன்மை விளங்கும் உன் மதத்தை
காதல் செய்
காதல் செய் மனமே காதல் செய்

*என்.ஓவியா,*
*யாழ்.பல்கலைக்கழகம்.*

## எப்படி நிகராகும்

*போரை நிறுத்தலாம்*
*மரணத்தை நிறுத்த முடியுமா?*
*இலங்கை அரசே*
*பதில் சொல்*
*இன ஒழிப்பும்*
*கற்பழிப்பும்*
*இரண்டறக் கலந்த*
*இலங்கை இராணுவம்..*
*தருமமும் நேர்மையும் - நிறைந்த*
*ஈழத் தமிழருக்கு...*
*நிகராவது எப்படி?*
*நியாயமாகுமா?*

*இ.ரஜீந்திரமூர்த்தி,*
*திருமலை.*

## முகவரி

என் உள்ளத்தின்
ஒளி விளக்கே!
முகம் மலர்ந்த
உன் சிரிப்பில்
என்னை
ஈர்த்தவனே,
என் கவி வரிகளுக்கு
களம் அமைத்த
காதலனே,
விழி நீரில் ஒளி இழந்து
தவிக்கிறேன் – உனக்காக
இப்போது எங்கிருக்கிறாய்?

*எஸ். சுரேகா,*
*பரந்தன்.*

## கல்யாண வேடிக்கை

பிரபல நடிகை நடிகருக்கு
ஹோட்டலில்
கோடிகள் செலவில்
காதல் திருமணம்
ஊடகங்களில்
வர்ண விளம்பரங்கள்
அடுத்த நாள் செய்தியில்
அவசரமாய் வரும்
சேர்ந்த ஜோடிகள்
சிநேகமாகப் பிரிந்தனர்!

*நாதனூர் நந்தினி.*

## ஏன் வீசி எறிந்தாய்....?

*கண்களில் கசிந்தது*
*நெஞ்சில் வடிந்தது*
*தேகத்தில் உறைந்தது*
*உந்தன் காதல்*
*உறவு தொலைத்தேன்*
*உறக்கம் தொலைத்தேன்*

*எதையோ எல்லாம்*
*இதற்காய் தொலைத்தேன்*
*வாழ்வின் வசந்தம்*
*யாவும் இழந்தேன்*

*நெஞ்சில் உன்னை*
*நித்தம் நினைத்தேன்*
*மொத்தத்தில் உன்னில்*
*என்னையே தொலைத்தேன்*

*இத்தனையும் செய்த*
*எந்தன் மனதை*
*இன்று ஏனோ*
*வீசி எறிந்தாய்...?*

*ஷ்.ஜெகன்,*
*நல்லூர்.*

## நெருக்கம்

காற்றைக் கவனித்துக் கேள்– என்
காதல் கண்மணியே
காது கூசும் கவிதைகள்
நான் வடிப்பேன் உனக்காக
பட்டுப் பூச்சிகள் வளர்க்கிறேன்
பாவையுனக்கு சேலை நெய்ய
பாசமே நெஞ்சில் முள் குத்தி
பரிதவிக்கிறேன் காதலின் வேதனையால்
விழிக்குள் உதிக்கும் கனவுகள்
விம்மும் எண்ணக் குமுறல்
விஞ்சும் உந்தன் நினைவால்
விசும்பில்லாமல் உள்ளேன்
ரோஜா இதழின் தேன் சுவையே
ரொக்கமாய் தருவேன் முத்தங்களை
விடியல் மெல்ல வெளுக்கிறது
விரைந்து வருவேன் காதலியே.

*ஜோ.கிறிஸ்டி,*
*களுத்துறைச்சிறை.*

## நீயென்பதால்

காயப்பட்ட
இதயத்திற்கு
மருந்துபோடவில்லை
காயமே
நீ என்பதால்...

**சி.க. இசையழகன்,**
**கிளிநொச்சி**

## நாய்

நண்பனோ பகைவனோ
உற்றாரோ உறவினனோ
யாரிங்கு வந்தாலும்
எச்சரித்து உள்ளனுப்பும்
'என் எஜமானுக்கு
துரோகம் செய்யாதே'
என்று...

**எம்.தமிழினி,**
**யாழ்ப்பாணம்**

## ஊமைச் செவிகள்

பூபாளம் தேடும் ராகமாக
உனக்குள் நான் ஒளிந்திருக்க
தினமும் நீ எனைக் கடக்க
அந்த ராகத்தின் ஒலியை நீ
அறியாமல் - நான் ரசிக்க
உனது செவிகள் மட்டும்
செவிப்பறை இழந்தது ஏனோ?

*சி.ஷாலினி,*
*திருகோணமலை.*

## எழுதாத கவிதை

எழுத முயன்று
ஒவ்வொரு முறையும்
தோற்றுப் போகிறேன்
மீண்டும் மீண்டும்
எழுதாத கவிதையாய்
எனது காதல்!

*கு.தவசீலன்,*
*விசுவமடு.*

## கற்பனை

உன் பாதம் பட்ட
மண் எடுத்து
பளிங்கு மாளிகை
அமைத்தேன்
பாடும் பறவைகள்
இரண்டும் கூடி வாழ...
பருவகால மாற்றத்தால்
பளிங்கு மாளிகை
சரிந்தது
மண் மாளிகையாய்...

*பா.பகீரதன்,*
*மல்லாவி*

## அம்மா

*பாசம் என்ற சொல்லுக்கும்*
*பரிவு என்ற சொல்லுக்கும்*
*அர்த்தம் தேடி*
*அகராதியைப் புரட்டினேன்*
*என்ன ஆச்சரியம்*
*அதிலெல்லாம் உன் பெயர்.*

*மதன்,*
*சுந்தீரிபுரம்.*

# சிரிக்க சிந்திக்க சிப்ஸ்

லண்டன் ரயில் நிலையங்களில் அல் கொய்தாவைச் சேர்ந்த தற்கொலைப் படையினர் தாக்குதல் நடத்தி 56 அப்பாவிகளைக் கொன்றனர். இதைத் தொடர்ந்து உடலில் குண்டுகளைக் கட்டிக்கொண்டு வரும் தீவிரவாதிகளைக் கண்டுபிடித்து கைது செய்வதற்கு வசதியாக உயர் தொழில் நுட்பம் கொண்ட டிஜிட்டல் ஸ்கானர் கருவிகளை வாங்கியிருக்கின்றார்கள். இவை பயணிகளை நிர்வாணமாகப் படம் பிடித்துக் காட்டும். இவற்றை லண்டனில் உள்ள மிகப்பெரிய ரயில் நிலையங்களில் பொருத்தி 4 வாரங்களுக்கு பரீட்சிக்க உள்ளனர்.

* * *

உலக அளவில் ஏராளமான ரசிகர்களை



நாளுக்கு நாள் அதிகமாக கவர்ந்திழுப்பவர் பிரிட்டனி ஸ்பியர்ஸ் என்ற துள்ளிசைப் பாடகியே.

கடந்த ஆண்டு கூகிள் மற்றும் யாஹூ இணைய தளங்களில் அதிகமாகத் தேடப்பட்டவர் இவரே. கடந்த நான்கு ஆண்டுகளாக யாஹூ தளத்தில் இவர் முன்னணி இடத்தைப் பிடித்து வருவது குறிப்பிடத்தக்கது.

* * *

சென்னை நகர மக்கள் மாலை வேளைகளில் பொழுதைக் கழிக்க எங்கே போகிறார்கள்?

இது பற்றி ஒரு கணக்கெடுப்பு நடந்தது. 325 ஆண்-பெண்களிடம், "கடந்த 3 மாதத்தில் நீங்கள் வெளியில் எங்கே போனீர்கள்?" என்று கேட்கப்பட்டது அதற்கு அவர்கள் சொன்ன பதில் கீழ்வருமாறு அமைந்திருந்தது.

| | |
|---|---|
| படம் பார்க்க | - 80% |
| கடற்கரை | - 79% |
| கடை | - 37% |
| பூங்கா | - 8% |
| நாடகம், நடனம், பாட்டு | -6% |
| விளையாட்டு | - 1% |
| கோவில் | - 1% |
| உறவினர் வீடுகள் | - 1% |
| எங்கும் போகவில்லை | - 1% |

* * *

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும்



காணோம்" - என்று பாடிய பாரதியாருக்கு தமிழ், ஆங்கிலம், இந்தி, சமஸ்கிருதம், பிரெஞ்சு, வங்காளி, லத்தீன், ஜெர்மன், உருது, அரபி, தெலுங்கு, மலையாளம் ஆகிய 12 மொழிகள் தெரியும். பாரதியாரை நினைத்தால் அடேயப்பா என்று வியக்கத் தோன்றுகிறதல்லவா?

* * *

நடிகர் சார்ளி சப்லின் தனது நண்பருடன் ரயிலில் பயணம் செய்து கொண்டிருந்தார். நண்பர் ரயில் பெட்டியின் ஜன்னலுக்கு அருகே அமர்ந்து இயற்கைக் காட்சிகளை ரசித்துக்கொண்டிருந்தார். பசுமை நிறைந்த காட்சிகளை கண்டதும் சப்ளினைப் பார்த்து "என்ன அழகு பார்த்தீர்களா? இதை ரசிப்பதற்கு ஆயிரம் பவுண்கள் கொடுக்கலாம்" என்றார். சப்ளின் உடனே சங்கிலியைப் பிடித்து இழுத்துவிட்டார். ரயில் நின்றது. பயணிகள் என்னவோ ஏதோ என்று விழித்தனர். அப்போது சப்ளின் தனது நண்பரை நோக்கி "என்ன திகைத்து விட்டீர்கள்? மலையின் அழகை இப்போது ரசிக்கலாமே! இதற்கு நீங்கள் ஆயிரம் பவுண்கள் கொடுக்க வேண்டாம். ஐந்து பவுண் கொடுத்தால் போதும் அபாயச் சங்கிலியை இழுத்து ரயிலை நிறுத்திய குற்றத்துக்காக" என்று சொல்லி வேடிக்கை பார்க்க ஆரம்பித்துவிட்டாராம்.

* * *

ஸ்வீடனில் உள்ள ஒரு ஹோட்டல்



முழுக்க முழுக்க பனிக்கட்டிகளாலேயே கட்டப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு வருடமும் குளிர்காலம் முடிந்தவுடன் உருகிவிடும் இந்த ஹோட்டலை அடுத்த வருடமும் மறுபடியும் புதிதாக உருவாக்குவார்கள்.

* * *

தென்னாபிரிக்காவில் ஒரு ஆண், ஒரு பெண்ணைப் பார்த்தால் அப்



பெண் உடனே மெழுகுவர்த்தியை ஏற்றி வைப்பாளாம். அம்மெழுவர்த்தி அணையும்வரை அவன் அந்தப் பெண்ணுடன் பேசிக்கொண்டிருக்கலாம். தனக்கு பிடித்தமான ஆணாக இருந்தால் அப்பெண் நீளமான மெழுகுவர்த்தியையும் பிடிக்காதவனாக இருந்தால் மிகச் சிறிய மெழுகுவர்த்தியையும் ஏற்றி வைப்பாளாம்.

* * *

கோவை செஞ்சிலுவை சங்கத்தின் சார்பில் எயிட்ஸ் ஊர்வலம் நடந்தது. அதில் கலந்து கொண்ட கல்லூரி மாணவர் ஒருவர் தனது முதுகில் 'உனது மனைவியை மட்டும் நேசி. எயிட்ஸ் வருமா யோசி என்று கொட்டை எழுத்துகளில் எழுதியிருந்தது அனைவரது கவனத்தையும் கவர்ந்தது.

*என்னவளே*
*செல்போனில்*
*தினமும் பலமுறை*
*நீ தரும் 'மிஸ்' கோல்*
*என் சுவாசம்*
*சில வேளை*
*நீ அனுப்பும் மெசேஜ்*
*என் இரத்த ஓட்டம்!*
*ஒரு முறை*
*நீ பேசும் பேச்சு*
*என் இதயத்துடிப்பு!!*

* * *

எழுதுங்கள். இது தான் எழுத்தாளராக விரும்புகிறவர்களுக்கு என் அறிவுரை. எழுதமுடியும், எழுத வேண்டும் என்று நினைத்துக்கொண்டிருப்பதை விட எழுத ஆரம்பிப்பது நல்லது. ஏனென்றால் சும்மா ஆசைப்படுவது என்பது வேறு. ஆசைகளை செயல்படுத்துவது என்பது வேறு. அதனால் செயலில் இறங்குங்கள். எழுதுங்கள் என்கிறார் பிரபல எழுத்தாளர் ஷெல்டன்.

* * *

*ஒருவர் என்னை விரும்புகிறார். அவர் எப்படிப்பட்டவர் என்பதை எப்படி அறிந்து கொள்ளவது.*

*'அது'க்கு அவசரப்பட்டால் அவர் பறந்து போகும் வண்டு என்பதை புரிந்து கொள்ளலாம்.*

* * *



''அடிக்கடி வருகிறாய் நீ திருந்தவே மாட்டாயா?''
''சிறைச்சாலை எனக்கு சின்ன வீடு, சாமி''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் பக்கம்

## தோல்வி படிக்கட்டுகள்



ஒரு ஊரில் சோமு, இராமு என்று இரண்டு வியாபாரிகள் இருந்தனர். வியாபாரத்தில் இருவருக்கும் போட்டி. போட்டியை சமாளித்து சோமு நன்றாக முன்னேறினான். இதனால், அவன் மீது இராமு பொறாமை கொண்டான்.

ஒரு நாள் இருவரும் வியாபாரத் துக்காக வெளியூருக்குப் போனார்கள். ஒரு காட்டு வழியில் போகும் போது சோமுவுக்குத் தாகம் எடுத்தது. "அதோ, அங்கே ஒரு கிணறு உண்டு" என்று இராமு சோமுவை அழைத்துப் போனான்.

அது பாழுங்கிணறு. இறங்கி தண்ணீர் குடிக்க வழி இருக்கிறதா என்று சோமு எட்டிப் பார்த்தான். அப்போது இராமு அவனை உள்ளே தள்ளிவிட்டான்!

சோமு வெளியே வந்து விட்டால், தனது சதி தெரிந்துவிடுமே என்று இராமு நினைத்தான். எனவே, சுற்றிலும் இருந்த மண்ணை அள்ளி கிணற்றுக்குள் போட்டான். கிணற்றை மூடிவிட முயற்சி செய்தான்.

மண் உள்ளே வந்து விழ விழ, சோமு அதன் மீது ஏறி நின்றான். கிணறு நிறைய மண் குவிந்தபோது, சோமு வெளியே குதித்தான்!

அவனைப் பார்த்து, இராமு ஆச்சரியப்பட்டான்! "ஏய்... எப்படி வெளியே வந்தாய்?" என்று கேட்டான்.

"கிணற்றுக்குள் மண் விழ விழ அதன் மீது ஏறி வந்தேன்" என்று சோமு சொன்னான்.

அவன் மேலும் கூறினான். "தோல்விகளைப் படிகளாகப் பயன்படுத்திக்கொள்ளுகிறவன், வெற்றி பெறுவான்!"



## யானையை வீழ்த்தும் சிங்கம்

ஆபிரிக்க சிங்கங்கள் காட்டெருமை, வரிக் குதிரை, மான், காட்டுப் பன்றி, ஒட்டகச்சிவிங்கி போன்றவற்றை வேட்டையாடி உண்ணுகின்றன. ஒட்டகச்சிவிங்கி குட்டிகளின் பாடுதான் இதில் திண்டாட்டம். காடுகளில் வாழும் ஒட்டகச் சிவிங்கிகளின் குட்டிகள் பிறந்து ஒரு வருடம் ஆவதற்குள் சிங்கத்திற்கு இரையாகி விடுகின்றன. சில நேரங்களில் 10, 15 அடி உயரமுள்ள பெரிய ஒட்டகச்சிவிங்கிகளைக் கூட சிங்கம் வீழ்த்தி இரையாக்கிவிடும்.

கோடை காலத்தில் யானைக்குட்டிகளையும் சிங்கம் ஒரு கை பார்த்து விடுகிறது. ஓடையில் நீர் அருந்த வரும் குட்டிகளை தாயிடமிருந்து லாவகமாக பிரித்து நான்கைந்து சிங்கங்கள் ஒரே நேரத்தில் அவற்றின் மீது பாய்ந்து அவற்றை வீழ்த்தி விடும்.

பொதுவாக யானைகளை வேட்டையாட சிங்கங்கள் விரும்புவதில்லை. ஆனால் கோடைக்காலத்தில் நீண்ட நாட்கள் இரை கிடைக்காத போது யானையின் மீதே கை வைத்து விடுகின்றன.

200 கிலோ எடையுள்ள சிங்கம் 2000 கிலோ எடைக்கும் அதிகமுள்ள யானையை வேட்டையாடுவது ஆச்சரியமான விஷயம்தான்.



## கரப்பான் பூச்சி

ஒரு கரப்பான் பூச்சியின் தலையை அதன் உடலில் இருந்து மிகச் சரியாக அறுத்து, அகற்றி விட்டால், பல வாரங்கள் அது தலையில்லாமலேயே உயிர் வாழும். அதன் பின்னர் அது இறப்பது உணவு உட்கொள்ள முடியாததால் தான். அதாவது பசியால் தான்.

## இயற்கை பாதுகாப்பு

பூனை இனத்தில் மிகவும் அழகான விலங்கு புலிதான். மத்திய மற்றும் தெற்கு ஆசியாவில் புலிகள் அதிகம் காணப்படுகின்றன. புலிகளின் மீதுள்ள கோடுகள் இயற்கையிலேயே அதற்கு மிகுந்த பாதுகாப்பை தருகின்றன.

ஏனெனில் புலிகள் வசிக்கும் காட்டுப் பகுதியில் உயரமான புல்லும், அடர்ந்த மூங்கில் மரங்களும் உள்ளன.

இவற்றின் பின்னணியில் புலிகள் இருக்கும் போது அவற்றைப் 'பார்ப்பது' கடினம். இதனால் இரை விலங்குகள் அருகில் வரும் வரை புலி காத்திருந்து அவற்றை வேட்டையாடுகின்றது.

மனிதர்கள் வேட்டைக்காக வரும்போது புலிகள் மூங்கில், புல் புதர்களுக்குள் மறைந்து தப்பி விடுகின்றன.






## அற்புதமான ஓர் உறுப்பு!

மனித உறுப்புகளில் மற்ற எந்த விலங்குகளுக்கும் இல்லாத அளவுக்கு வளர்ச்சி அடைந்த உறுப்பு என்ன?

கட்டை விரல்தான்!

கட்டை விரல் ஒரு நாளில் எத்தனை வகையான வேலைகளைச் செய்கிறது என்று பார்த்தால் வியப்பு ஏற்படும். கட்டை விரல் மிக வலிமையானதும் கூட!

பரிணாம வளர்ச்சியில் மனிதன் தொடர்ந்து கையைப் பயன்படுத்தியதனால் கட்டை விரல் இவ்வாறு மாறியது.




## விடுகதை

1) நான் சொன்னேன் பதிலுக்கு அவனும் சொன்னான். ஒரு முறையல்ல இருமுறை. அவன் யார்?
2) பள்ளம் கண்டால் பாய்வான். மேடு கண்டால் திகைத்து நிற்பான். அவன் யார்?
3) வராதவன் வந்தால் திறக்காதவனும் திறப்பான். அவன் யார்?
4) பிறந்த பின் வளர்ந்தது, வளர்ந்த பின் மறைந்தது. அது என்ன?
5) சூடு பட்டுச் சிவந்தவன், வீடு கட்ட உதவினான் அவன் யார்?
6) உதை பட்டவன் ஓடும் ஓட்டம் பார்க்க, ஆயிரமாயிரம் பேர். அது என்ன?
7) தலையைச் சீவினால் தாகம் தீர்ப்பான். அவன் யார்?
8) எட்டிப் பார்த்தாள் இளைய ராணி ஓடி ஒளிந்தது இருட்டு. அவள் யார்?
9) எழுத்தைக் கடத்துவான். ஓசையின்றி அதை நடத்துவான். அவன் யார்?
10) ஓட்டுக்குள் இருப்பான் நம் பார்வைக்கு, ஆனால் வீட்டுக்குள் இருப்பான் அவன் பார்வையில். அவன் யார்?

1) எதிரொலி 2) தண்ணீர் 3)கொட்டாவி 4) பற்கள் 5) செங்கல் 6) கால்பந்து விளையாட்டு 7) இளநீர் 8) நிலா 9) கார்பன் பேப்பர் 10) ஆமை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதியின் அவலம்

இ.கவாஸ்கர்
தண்ணீரூற்று.




ஊசிபோலக் குத்தும் மாசிப் பனி மூசிப் பெய்து கொண்டிருக்கும் ஓர் அதிகாலை வேளை. "தங்கச்சி எழும்பம்மா எழும்பு" என்று வசந்தி மகளை தட்டி எழுப்பினாள்.

"என்னம்மா இப்ப ஏன் எழுப்பினியள்? எத்தனை மணி?" என்று சோம்பல் முறித்தபடி போர்த்துப் படுத்திருந்த தாயாரின் கிழிந்த சேலைக்குள் இருந்து எட்டிப்பார்த்தாள் பிரிஜா.

"மணி நான்கரை; சத்தம் போடாமல் எழும்படியம்மா" என்று சொல்லிக்கொண்டு வசந்தி விளக்கை அருகில் வைத்தாள். அங்கும் இங்கும் கிழிந்த பாய். ஆங்காங்கே மேகத்தைப் பார்க்கக்கூடிய பொத்தல் விழுந்த கூரை. இடிந்து விழுந்த மண்சுவர். மழையில் நனைந்த ஈரவிறகு. அதனுடன் போராடும் வசந்தி. இவைஎல்லாம் அந்தக் குடிசையின் வறுமையை பறைசாற்றி நிற்கின்றன.

தனது ஒரு மகளையும் கணவனையும் யுத்த இடம்பெயர்வின் மூலம் இழந்தாள் வசந்தி. அவளுக்கு ஆறுதல் அளிக்கவோ என்னவோ பிரிஜா மட்டும் எஞ்சி இருக்கிறாள்.

பிரிஜா மிகவும் நல்ல சுட்டிப் பெண். படிப்பிலும் நல்ல கெட்டிக்காரி. ஆனால் தன் கண் முன்னே ஷெல் வந்து வீட்டுக்கு மேல் விழுந்து குடும்பமே அழிந்ததைக் கண்ட அதிர்ச்சியில் இருந்து மீள முடியாதவளாய் தவித்தாள். அவளை அவளது இயல்பு நிலைக்கு மாற்றியது வசந்தியின் தாய்ப் பாசம்.

அவளது அறிவைப் போல் அவள் மிகவும் பருத்த தோற்றம். யாரும் அவளைப் பார்த்தால் பதினாறு வயதுச் சிறுமிஎன்று சொல்ல மாட்டார்கள். வஞ்சனையற்ற உயரம்.

"இந்தா இதனை குடிச்சிட்டுப்படி" தேநீர் என்ற பெயரில் வெந்நீர் சாயத்தை கொண்டு வந்து கொடுத்தாள் வசந்தி. ஆனால் அதிகாலை குளிருக்கு அதுவும் சுவையாகவே இருந்தது. திடீர் என்று வீட்டின் எட்டுத் திசைகளிலும் பாய்ந்து பாய்ந்து நாய் குரைக்கும் ஓசை. இந்த நேரம் ஏனம்மா குரைக்கிறது? வசந்தியின் கண்களில் பீதி. எட்டிப்பார்த்த வண்ணம் "யாரோ வந்திட்டாங்கள் போல" என முணு முணுத்தபடி காதை கூர்மையாக்கினாள். பர பர பர என வேலிகளை மிதிக்கும் சப்பாத்துச் சந்தம். மிகவும் தயக்கம் அடைந்தாள் வசந்தி. அவள் சென்ற முறையும் சுற்றிவளைப்பில் இருந்து பிரிஜாவை மீட்டுக்கொண்டு வரப்பட்டபாடு இறைவனுக்குத்தான் தெரியும்.

வாசல் கதவு இரும்பால் அடிப்பது போன்று டக் டக் என பலமாக தட்டப்பட்டது. "வெளியே வாங்க ஏய் உள்ளுக்க யாரு" என அரைகுறைத் தமிழில் வாசலில் ஒரு குரல் ஓங்கி ஒலித்தது. கதவை தயக்கத்துடன் திறந்தாள் வசந்தி.

"என்...ன... ஐயா?" என தயக்கமாகக் கேட்டாள் வசந்தி. "உள்ள யாரு?" அதட்டினான் அந்த துப்பாக்கிக்காரன்.

"என் மகள் படிக்கிறாள்"

"ஏய் எல்லாம் வெளியே வா"

"தங்கச்சி பிரிஜா" என்று இழுத்த குரலில் தயக்கத்துடன் கூப்பிட்டாள் வசந்தி. கையில் புத்தகத்துடன் வெளியே வந்தாள் பிரிஜா. அவளது அழகைக் கண்ட சீருடைக்காரனின் கண்களில் காம வெறி. அவளை உற்று நோக்கிய வண்ணம் "கொட்டியா உள்ள வச்சிருக்கிறது?" என்று கொச்சைத் தமிழில் கேட்டான். எட்டிப் பிடித்தான் பிரிஜாவின் கையை. "இல்லை அவள் என் பிள்ளை அவளை விடுங்கோ" வசந்தி கத்தினாள்.

"உன்ட பிள்ளையா?" கேள்வியாகக் கேட்டான் அவன். "ஆம், அவள் என்ர பிள்ளை, விடுங்கோ" என்ன செய்கிறதென்று தெரியாமல் அவனது காலை பிடித்து கெஞ்சினாள் அவள். ஏறி மிதித்து அவளை உதைத்தான், காம வெறியில் வந்த அவன் . தாய் முன்னே கற்பழிக்க முயன்று பிரிஜாவை சீரழிக்க நினைத்தான். தன்மேல் இருந்த துப்பாக்கி விலகியது கூட அவனுக்குத் தெரியவில்லை.

இதனைப் பார்த்த வசந்திக்கு மகள் தன் கண் முன்னாள் சீரழிவதை பார்க்கப் பொறுக்கவில்லை. அருகிலிருந்த துப்பாக்கியை எடுத்து அவன் மீது குறி தவறாது சுட்டாள். அந்த சத்தம் அந்த இடம் எங்கும் எதிரொலித்தது. அவளது குறி தப்பவில்லை. அந்த இடத்திலேயே அவன் மரணமடைந்தான். அப்படியே விட்டு விட்டு வசந்தி தன் மகளை தூக்கிவிட்டு நிமிர்ந்து பார்த்தாள். அங்கு அவர்கள் வீட்டிலே பக்கத்து வீட்டுக்காரர்கள் எல்லோரும் நின்றார்கள். அவ் ஊர் மக்கள் உதவியுடன் அவ்விடத்தை விட்டு வெளியேறினார்கள் இருவரும்.

கிழக்கு வானம் வெளிக்க தொடங்கியது. அவனது பிடியில் இருந்து விடுபட்டாலும் அவர்களது அகதி வாழ்வின் பிடியில் இருந்து அவர்களால் விடுபட முடியவில்லை.

(முற்றும்)

# ராசி பலன்

இவ்வார 'ராசிபலன்' 13-02-2006 முதல் 19-02-2006வரை

பொ. சந்திரன்

**மேடம்: அச்சுவினி, பரணி,கார்த்திகை 1.**
அச்சுவினி, பரணி, கார்த்திகை

(1,8) உரிய செவ்வாய் இரண்டில் நல்ல பலன் செய்யாது. மேலும், சூரியனின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லதல்ல. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் இருக்காது. (2,7) உரிய சுக்கிரன் 9 இல் நன்மை செய்வார். வாகன சுகம் உண்டு. கையில் பணம் இருக்கும். திருமண வாய்ப்பு உண்டு. பகை விலகும். (3,6) உரிய புதன் 11இல் இருப்பது சிறப்பானது. உடல் ஆரோக்கியம் உண்டு. உறவினர் மற்றும் அயலவர் உதவுவர். தகவல் தொடர்பு சீராக இருக்கும். 4 இல் உள்ள சனியை சுக்கிரன் பார்ப்பதால் தாய் நலம். தனிப்பட்ட வாழ்வில் அமைதி இருக்கும். 5 க்குரிய சூரியன் 11 இல் இருப்பது நல்லது. மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றும். பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். (9,12) உரிய குரு 7இல் இருப்பது விசேஷம். பிதா நலம், சயன சுகம் உண்டு. (10,11) உரிய சனி, 4இல் நன்மை செய்யமாட்டார். தொழில் துறையில் முன்னேற்றம் இராது. பொதுவாழ்வில் மதிப்பு குறையலாம்.

**இடபம்:கார்த்திகை 2,3,4 ரோகினி, மிருகசீரிடம் 1,2**

(1,6) உரிய சுக்கிரன் 8 இல் நன்மை செய்வார். மேலும், தனது நட்சத்திரத்தில் இருப்பது சிறப்பானது. தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. தொழிலாளர் வேலையாட்கள் விசுவாசமாக இருப்பர். (2,5) உரிய புதன், 10 இல் நல்ல பலன் செய்வார். வாகன சுகம் உண்டு. கையில் பணம் இருக்கும். பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். நல்ல எண்ணங்கள் உதயமாகும். 4 க்குரிய சூரியன் 10 இல் நல்ல பலன் தருவார். தாய் நலம். தனிப்பட்ட வாழ்வில் சிறப்பு உண்டு. (7,12) உரிய செவ்வாய் ராசியில் நல்ல பலனைத் தரமாட்டார். திருமண வாய்ப்பு பாதிக்கலாம். சயன சுகம் குறையலாம். எதிரிகளால் தொல்லையுண்டு. (8,11) உரிய குரு 6 இல் நன்மை செய்யாது. முதலீடுகளால் லாபம் குறையலாம். நண்பர்களுக்கு கூடாத காலம். (9,10) உரிய சனி 3 இல் நன்மை செய்வார். தொழில் துறை முன்னேறும். பொதுவாழ்வில் மதிப்பு உயரும். பிதா நலம்.

**மிதுனம்: மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

(1,4) உரிய புதன் 9 இல் நன்மை செய்யார். இருப்பினும், ராகுவின் நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். தனிப்பட்ட வாழ்வில் பிரச்சினை வரலாம். தாய்க்கு நலமில்லை. இரண்டில் உள்ள சனியை சுக்கிரன் பார்ப்பதால் கையில் பணம் இருக்கும். வாகன சுகம் உண்டு. 3 க்குரிய சூரியன் 9 இல் நல்ல பலன் செய்யார். உறவினர் மற்றும் அயலவர் நன்மை செய்யார். (5,12) உரிய சுக்கிரன் 7 இல் நன்மை செய்யார். சயன சுகம் இருக்காது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றாது. (6,11) உரிய செவ்வாய் 12 இல் நன்மை செய்யார். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். நண்பர்களுக்கு நல்ல பலன் இல்லை. வேலையாட்கள் மற்றும் தொழிலாளர் விசுவாசமாக இருக்கமாட்டார். (7,10) உரிய குரு, 5 இல் நல்ல பலன் தருவார். தொழில்துறை முன்னேறும். பொதுவாழ்வில் மதிப்பு உயரும். திருமணவாய்ப்பு உண்டு. பகை விலகும்.

**கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

ராசிநாதன் சந்திரன் சிங்கம் முதல் துலாம் வரை சஞ்சரிப்பார். வாரத்தின் மத்திய பகுதியில் நல்ல பலனை எதிர்பார்க்கலாம். தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். பிரயாண வாய்ப்பு உண்டு. இரண்டுக்குரிய சூரியன் 8 இல் இருப்பது நல்லதல்ல. வாகன சுகம் இருக்காது. கையில் பணம் இருக்காது. (3,12) உரிய புதன் 8 இல் நல்ல பலனைத் தருவார். சயன சுகம் உண்டு. உறவினர் மற்றும் அயலவர் உதவி செய்வர். தகவல் தொடர்பு சீராக இருக்கும். (4,11) உரிய சுக்கிரன் 6 இல் இருப்பது நல்லதல்ல. தாய்க்கு நல்ல பலன் இல்லை. தனிப்பட்ட வாழ்வில் பாதிப்பு உண்டு. நண்பர்களுக்கு நல்ல பலன் இல்லை. (5, 10) உரிய செவ்வாய் 11இல் இருப்பது சிறப்பானது. தொழில்துறை முன்னேறும். பொதுவாழ்வில் மதிப்பு உயரும். மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றும். பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். (7,8) உரிய சனி ராசியில் இருப்பது திருமண வாய்ப்பு பாதிக்கும். முதலீடுகளால் லாபம் இருக்காது.

**சிங்கம்: மகம், பூரம், உத்தரம்1.**

ராசிநாதன் சூரியன் 7இல் நன்மை செய்யமாட்டார். மேலும், செவ்வாயின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லதல்ல. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். இருப்பினும் குரு சூரியனைப் பார்ப்பதால் ஆறுதல் உண்டு. (2,11) உரிய புதன் 7இல் இருப்பது நல்லதல்ல. வாகன சுகம் இருக்காது. கையில் பணம் இருக்காது. நண்பர்களுக்கும் நல்ல பலன் இல்லை. (3,10) உரிய சுக்கிரன் 5 இல் இருப்பது விசேஷம். தொழில்துறை முன்னேறும். பொது வாழ்வில் மதிப்பு உயரும். உறவினர் மற்றும் அயலவர் விசுவாசமாக இருப்பர். தகவல் தொடர்பு சீராக இருக்கும். (4,9) உரிய செவ்வாய் 10 இல் நன்மை செய்யார். பெற்றோருக்கு நலமில்லை. தனிப்பட்ட வாழ்வில் பிரச்சினை இருக்கும். (5,8) உரிய குரு 3 இல் நல்லதல்ல. முதலீடுகளால் லாபம் இருக்காது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். (6,7) உரிய சனி 12 இல் இருப்பது கூடாது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். திருமண வாய்ப்பு பாதிக்கலாம்.

**கன்னி: உத்தரம்2,3,4. அத்தம், சித்திரை 1,2.**

(1,10) உரிய புதன் 6இல் இருப்பது நல்ல பலனைச் செய்யும். மேலும், ராகுவின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். தொழில் துறையில் முன்னேற்றம் உண்டு. பொது வாழ்வில் மதிப்பு உயரும். (2,9) உரிய சுக்கிரன் 4 இல் இருப்பது நல்லது. வாகன சுகம் உண்டு. கையில் பணம் இருக்கும். பிதா நலம். (3,8) உரிய செவ்வாய் 9 இல் இருப்பது கூடாது. முதலீடுகளால் லாபம் இருக்காது. உறவினர் மற்றும் அயலவர் உதவி செய்யார். தகவல் தொடர்பு பாதிக்கலாம். (4,7) உரிய குரு, 2 இல் இருப்பது நல்லது. திருமண வாய்ப்பு உண்டு. தாய் நலம். தனிப்பட்ட வாழ்வில் அமைதி இருக்கும். (5,6) உரிய சனி 11இல் இருப்பது விசேஷம். பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றும். உடல் ஆரோக்கியம் உண்டு. வேலையாட்கள் மற்றும் தொழிலாளர் விசுவாசமாக இருப்பர்.

**துலாம்: சித்திரை3,4 சுவாதி, விசாகம்1,2,3.**

(1,8) உரிய சந்திரன் மூன்றில் இருப்பது நல்லது. மேலும், தனது நட்சத்திரத்தில் இருப்பது விசேஷம். தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். (2,7) உரிய செவ்வாய், 8 இல் இருப்பது பாதகமானது. வாகன சுகம் இருக்காது. கையில் பணம் இருக்காது. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். (3,6) உரிய குரு ராசியில் இருப்பது கூடாது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். உறவினர் மற்றும் அயலவர் தொல்லை தருவர். வேலையாட்களால் பிரச்சனை உண்டு. (4,5) உரிய சனி 10 இல் நன்மை செய்யார். தாய்க்கு கூடாது. தனிப்பட்ட வாழ்வில் பிரச்சினை உண்டு. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். (9,12) உரிய புதன் 5 இல் நல்ல பலன் செய்யார். பிதாவுக்கு நல்லதல்ல. சயன சுகம் இருக்காது. 10 இல் உள்ள சனியை, சுக்கிரன் பார்ப்பதால் தொழில் துறை முன்னேறும்.

**விருச்சிகம்: விசாகம் 4,அனுசம், கேட்டை**

(1,6) உரிய செவ்வாய், 7 இல் நல்ல பலனைச் செய்யார். மேலும், சூரியனின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லதல்ல. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். வேலையாட்கள் விசுவாசமாக இருக்கமாட்டார். (2,5) உரிய குரு 12இல் இருப்பது பாதகமானது. வாகன சுகம் இருக்காது. கையில் பணம் இருக்காது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். மனதில் தாறுமாறான எண்ணங்கள் தோன்றும். (3,4) உரிய சனி, 9 இல் நல்ல பலனைச் செய்யார். தாய்க்கு நலமில்லை. தனிப்பட்ட வாழ்வில் பிரச்சினை உண்டு. தகவல் தொடர்பு பாதிக்கலாம். உறவினர் மற்றும் அயலவர் உதவி செய்யார். (7,12) உரிய சுக்கிரன் இரண்டில் இருப்பது சிறப்பானது. திருமண வாய்ப்பு உண்டு. சயன சுகம் உண்டு. பகை விலகும். (8,11) உரிய புதன் 4 இல் நல்ல பலன் தருவார். முதலீடுகளால் லாபம் உண்டு. நண்பர்கள் உதவி செய்வர். சூரியன் 4 இல் தொழில்துறை பாதிக்கலாம்.

**தனு: மூலம், பூராடம், உத்தராடம் 1.**

(1,4) உரிய குரு 11இல் இருப்பது விசேஷம். மேலும், தனது நட்சத்திரத்தில் இருப்பது சிறப்பானது. தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். பிரயாண வாய்ப்பு உண்டு. தாய் நலம். தனிப்பட்ட வாழ்வில் அமைதி நிலவும். (2,3) உரிய சனி 8இல் இருப்பது பாதகமானது. வாகன சுகம் இருக்காது. கையில் பணம் இருக்காது. உறவினர் மற்றும் அயலவர் தொல்லை தருவர். (5,12) உரிய செவ்வாய் 6 இல் இருப்பது விசேஷம். பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றும். சயன சுகம் உண்டு. (6,11) உரிய சுக்கிரன், ராசியில் இருப்பது விசேஷம். உடல் ஆரோக்கியம் உண்டு. நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். (7,10) உரிய புதன், 3இல் நல்ல பலன் தரமாட்டார். தொழில் துறையில் முன்னேற்றம் இருக்காது. பொதுவாழ்வில் மதிப்பு குறையலாம். திருமண வாய்ப்பு குறையலாம்.

**மகரம்:உத்தராடம் 2,3,4 திருவோணம், அவிட்டம் 1,2**

(1,2) உரிய சனி 7இல் இருப்பது பாதகமானது. இருப்பினும், தனது நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. கையில் பணம் இருக்காது. வாகன சுகம் இருக்காது. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். பிரயாண வாய்ப்பு உண்டு. (3,12) உரிய குரு 10இல் நல்ல பலனைத் தரமாட்டார். தகவல் தொடர்பு பாதிக்கலாம். சயன சுகம் இருக்காது. உறவினர் மற்றும் அயலவர் உதவி செய்யார். (4,11) உரிய செவ்வாய் 5இல் நல்ல பலன் தரமாட்டார். நண்பர்களுக்கு நல்ல பலன் இல்லை. தாய்க்கு கூடாது. தனிப்பட்ட வாழ்வில் பிரச்சினை உண்டு. (5,10) உரிய சுக்கிரன் 12 இல் நல்ல பலன் தருவார். தொழில்துறை முன்னேறும். பொதுவாழ்வில் மதிப்பு உயரும். பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றும். 7இல் சனி இருப்பினும் சுக்கிர பார்வை இருப்பதால் திருமண வாய்ப்பு உண்டு.

**கும்பம்: அவிட்டம் 3,4. சதயம், பூரட்டாதி 1,2,3.**

(1,12) உரிய சனி 6இல் இருப்பது விசேஷம். மேலும், தனது நட்சத்திரத்தில் இருப்பது சிறப்பு. தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். சயன சுகம் உண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. (2,11) உரிய குரு 9 இல் இருப்பது சிறப்பானது. கையில் பணம் இருக்கும். வாகன சுகம் உண்டு. நண்பர்களுக்கு நல்லபலன் உண்டு. (3,10) உரிய செவ்வாய், 4 இல் நல்ல பலன் செய்யார். தொழில்துறையில் பாதிப்பு இருக்கலாம். பொதுவாழ்வில் பிரச்சினை உண்டு. உறவினர் மற்றும் அயலவர் உதவி செய்யார். தகவல் தொடர்பு பாதிக்கலாம். (4,9) உரிய சுக்கிரன், 11 இல் இருப்பது விசேஷம். பெற்றோர் நலம். தனிப்பட்ட வாழ்வில் அமைதி இருக்கும். (5,8) உரிய புதன், ராசியில் நன்மை செய்யார். பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். முதலீடுகளால் லாபம் இருக்காது. நல்ல எண்ணங்கள் தோன்றாது. 7இற்குரிய சூரியன், நன்மை செய்யார். திருமண வாய்ப்பு பாதிக்கலாம்.

**இவ்வார கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| ராகு | | செவ் | |
| சூரியன் புதன் | செவ்வாய் கார்த்திகை சூரியன்<br>சுக்கிரன் பூராடம் சுக்கிரன்<br>புதன் சதயம் ராகு<br>சூரியன் அவிட்டம் செவ்வாய்<br>குரு விசாகம் குரு<br>சனி பூசம் சனி | | சனி |
| | | | |
| சுக்கிரன் | | குரு | கேது |

மாசி 1 முதல் மாசி 7 வரை


சந்திரன் சிங்கம் முதல் துலாம் வரை


**மீனம்: பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி.**

(1,10) உரிய குரு 8இல் இருப்பது பாதகமானது. இருப்பினும், தனது நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. பொதுவாழ்வில் மதிப்பு குறையலாம். (2,9) உரிய செவ்வாய் 3 இல் இருப்பது விசேஷம். கையில் பணம் இருக்கும். வாகன சுகம் உண்டு. பிதா நலம். (3,8) உரிய சுக்கிரன், 10இல் நல்ல பலன் தரமாட்டார். முதலீடுகளால் லாபம் இருக்காது. உறவினர் மற்றும் அயலவர் உதவி செய்யார். தகவல் தொடர்பு பாதிக்கலாம். (4,7) உரிய புதன், 12இல் நல்ல பலன் செய்யார். திருமணவாய்ப்பு பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. தாய்க்குக் கூடாது. தனிப்பட்ட வாழ்வில் பாதிப்பு உண்டு. 6இற்குரிய சூரியன், 12இல் நல்ல பலன் தரமாட்டார். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். தொழிலாளர் விசுவாசமாக வேலை செய்யமாட்டார். வளர்ப்பு பிராணிகளால் பிரச்சினை வரலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்தது ஈரான்...





ஈரான், அணு ஆயுதங்களைத் தயாரிப்பதாக வெளிவந்த தகவல்களை அடுத்து சர்வதேசநாடுகளின் பார்வை ஈரான் மீது திருப்பி இருக்கிறது. ஈராக்கிற்கு ஏற்பட்ட நிலையே ஈரானுக்கும் ஏற்படப் போகிறதா என்று கேள்வி எழுப்பப்பட்டு வருகிறது.

ஈராக்கிடம் இரசாயன ஆயுதங்கள் இருப்பதாகக் கூறிக் கொண்டே அமெரிக்கா ஈராக்கை நசுக்கும் தனது திட்டத்தை ஆரம்பித்தது. தற்போது ஈரானும் இதே ஆபத்தை எதிர்நோக்கி இருக்கிறது. ஈரானை பலவீனப்படுத்துவது தற்போதைய சர்வதேசஅரசியல் சுழற்சியில் அமெரிக்காவுக்கு மிகவும் முக்கியமானது:

ஈரான் அணு ஆயுதங்களை வைத்திருப்பதை சர்வதேச சமூகம் ஒரு போதும் அனுமதிக்க மாட்டாது என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் மிகவும் உறுதியாகத் தெரிவித்துள்ளார்.

ஈரானின் அணு சக்தித் திட்டம் குறித்து ஐ.நா.பாதுகாப்புச் சபையில் சர்வதேசஅணுசக்தி கமிஷன் முறையிட்டது குறித்து புஷ் தனது பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரியாவின் தலைநகரான வியன்னாவை தலைமையகமாகக் கொண்டு இயங்கும் சர்வதேச்அணுசக்தி கமிஷன் 35 அங்கத்துவ நாடுகளைக் கொண்டது. ஈரானின் அணுசக்தித் திட்டம் வாக்கெடுப்புக்கு விடப்பட்ட போது ஐ.நா.பாதுகாப்புச் சபையிடம் முறையிடுவதற்கு ஆதரவாக 27 நாடுகள் வாக்களித்தன. கியூபா, சிரியா, வெனிசுலா ஆகிய மூன்று நாடுகள் மட்டும் எதிராக வாக்களித்தன. அல்ஜீரியா, பெலாறஸ், இந்தோனேசியா, லிபியா, தென் ஆபிரிக்கா ஆகிய நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

ஈரானின் அணு சக்தித் திட்டம் குறித்து ஐ.நா. பாதுகாப்புச் சபையில் முறைப்பாடு செய்யப்பட்டாலும் மார்ச் மாதம் வரை ஈரானுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காமல் அந்த நாட்டுக்கு ஒரு குறுகியகால அவகாசத்தை வழங்கும் ஒரு புரிந்துணர்வின் அடிப்படையிலேயே சர்வதேசஅணுசக்திக் கமிஷன் தனது தீர்மானத்தை இயற்றி இருக்கிறது.

## தண்டிக்கும் அதிகாகரம் இல்லை

அணு ஆய்த உற்பத்தியில் ஈடுபடும் எந்த ஒரு நாட்டையும் தண்டிக்க சர்வதேசஅணு சக்தி கமிஷனுக்கு அதிகாரம் கிடையாது.

ஐ.நா.பாதுகாப்புச் சபையில் முறையீடு செய்ய மட்டும் அதனால் முடியும். சர்வதேச சமாதானத்துக்கும், பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் ஏற்படும் என கருதுமிடத்து ஐ.நா.பாதுகாப்புச் சபை பொருளாதாரத் தடைகள் உட்பட மற்றும் பல தடைகளை விதிக்க முடியும்.

ஈரான் மேற்கொண்டுள்ள அணு சக்தித் திட்டத்தை எந்தச் சக்திகளாலும் தடுத்து நிறுத்த முடியாது என்று சமீபத்தில் நடைபெற்ற தேர்தலில் வெற்றிபெற்ற ஈரானின் கடும்போக்கு ஜனாதிபதி மஹ்முட் அஹ்மட் நிஜாட் தெரிவித்துள்ளார்.

ஈரானின் நிலைப்பாடு தெளியானது. சர்வதேச சட்ட விதிகளுக்கு அமையவே ஈரான் தனது அணுசக்தித் திட்டங்களை முன்னெடுக்கிறது என்றும் அவர் கூறுகின்றார்.

யூதர்களுக்கு ஒரு நாடு தேவை என்றால் அதனை ஆஸ்திரிய - விலோ அல்லது ஜேர்மனியிலோ நிறுவி இருக்கலாம் என்று கூறியது மூலம் சமீபத்தில் பெரும் சர்ச்சையைக் கிளபி இருந்தவர் மஹ்முட் அஹ்மட் நிஜாட்.

ஈரான் அணு ஆயுதங்களை வைத்திருப்பதை சர்வதேசசமூகம் ஏற்றுக் கொள்ள மாட்டாது என்பதை, சர்வதேசஅணுசக்திக் கமிஷன் தனது தீர்மானம் மூலம் மிகவும் தெளிவாகத் தெரிந்து விட்டது என்கிறார் ஜோர்ஜ் புஷ்.

இந்த விவகாரத்தில் அமெரிக்கா இலகுவில் விட்டுக் கொடுக்க மாட்டாது என்பது நன்கு தெளிவாகி இருக்கிறது. இஸ்ரேலுக்கு பயமுறுத்தலாக இருந்து வரும் ஈரான் மீது அமெரிக்கா கைவைப்பதற்கு,சர்வதேசஅணுசக்திக் கமிஷனின் தீர்மானம் ஓர் ஆரம்பமே.

அபிவிருத்தி நோக்கங்களுக்காக அணுசக்தி தொழில் நுட்பத்தை பயன் படுத்துவதற்கு தனக்கு உரிமை இருக்கிறது என்கிறது ஈரான். அணு ஆயுதங்களை உற்பத்தி செய்வது தனது நோக்கம் அல்ல என்றும் மின்சார உற்பத்தியே தனது பிரதான நோக்கம் என்றும் ஈரான் கூறுகின்றது.

## இஸ்ரேல் அதிரடித் தாக்குதல் நடத்துமா?

ஈரானிடம் அணு ஆயுதங்கள் இருப்பது தனது இருப்புக்கு ஆபத்து விளைவிக்கும் என்று இஸ்ரேல் கருதுகிறது. இஸ்ரேலின் எல்லை நாடுகளான எகிப்து, ஜோர்தான், சிரியா, லெபனான் ஆகிய வற்றில் காம்ப் டேவிட் ஒப்பந்தம் மூலம் எகிப்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான பகைமை நீங்கிவிட்டது.

பலஸ்தீன இராச்சியம் ஒன்றை உருவாக்குவதற்காக மேற்குக் கரைமீதான தனது உரிமையை ஜோர்தான் விட்டுக்கொடுத்தது மூலம் இஸ்ரேலுடன் நல்லுறவை வைத்துக் கொண்டிருக்கிறது.

நீண்டகால உள்நாட்டு யுத்தத்தினால் சீரழிந்து போய் உள்ள லெபனானில் மிகவும் பலவீனமான அரசே பதவியில் இருக்கிறது. லெபனான் இஸ்ரேலுக்குப் பெரிய பிரச்சினை இல்லை.

1967 மத்திய கிழக்கு யுத்தத்தில் கோலான் குன்றுகளை இஸ்ரேலிடம் இழந்த சிரியா அதனை இன்னும், மீட்டுக் கொள்ள முடியாத நிலையில் இராணுவ கேந்திர நிலையை இன்னும் இழந்து நிற்கிறது. 1989-90 களில் சோவியத் யூனியன் சிதறுண்டு போன பின்பு சிரியா பலவீனம் அடைந்து விட்டது.

இப்படியான நிலையில் இஸ்ரேலின் எல்லை நாடு அல்லாத ஈராக் இஸ்ரேலுக்கு அச்சுறுத்தலாக உருவெடுத்துவந்தது. அணு ஆயுதங்களையும் அது தயாரிக்கும் நிலையை அடைந்தது. 1981ஆம் ஆண்டு ஈராக்கின் ஒசிராக் நகரில் உள்ள அணு உலைகள் மீது இஸ்ரேல் விமானங்கள் அதிரடித் தாக்குதல் நடத்தி அணு உலைகளை முற்றாக நிர்மூலம் செய்தன. பின்பு அமெரிக்காவும் அதன் நேசநாடுகளும் நடத்திய படை எடுப்புகள், சதாம் ஹுசேய்னின் வீழ்ச்சி, தற்போது நடைபெறும் தற்கொலைத் தாக்குதல்கள் ஆகியவற்றால் ஈராக் நிலைகுலைந்து விட்டது. ஆகவே தற்போது எஞ்சி இருப்பது ஈரான்தான்.


1981 ஆம் ஆண்டு ஈராக் மீது நடத்தப்பட்ட அதிரடித் தாக்குதல் பாணியில் ஈரான் மீதும் தாக்குதல் நடத்தப்பட வேண்டும் என்று இஸ்ரேலில் கோரிக்கைகள் எழுந்துள்ளன.

ஆனால் இது சுலமான ஒரு காரியம் அல்ல. ஈரானின் அணு உலைகள் மிகவும் பாதுகாப்பான இடத்திலேயே உள்ளன. இஸ்ரேலின் எந்த ஒரு அதிரடித் தாக்குதலையும் முறியடிக்கக் கூடிய பலம் ஈரானிடம் உண்டு.

இதனால் தான் ஐ.நா.பாதுகாப்புச் சபை மூலம் ஈரானைத் தண்டிக்கவும் அதன் அணு சக்தித் திட்டங்களை இல்லாமல் செய்யவும் அமெரிக்கா முயன்று வருகிறது.

**என்.பி.சீலன்**


**HOTEL WESTEERN (PVT) LTD**




Danial Banquet Hall (டேனியேல் பென்குவட் மண்டபம்) முற்றும் குளிரூட்டப்பட்ட 400 பேர் அமரக்கூடிய திருமண மண்டபம், தரமான உணவு வகைகளுடன் கூடிய சிறந்த உபசரிப்பு சேவை, இலங்கை சுற்றுலா சபையினால் அங்கீகரிக்கப்பட்ட விருந்தினர்களுக்கான இலவச காப்புறுதி.

சிறந்த பராமரிப்பு சேவையுடன் கூடிய குளிரூட்டப்பட்ட அறைகள், தொலைபேசி, I.D.D., தொலைக்காட்சி, மினிபார், ரெஸ்டூரண்ட், பார், விருந்துபசார மற்றும் மாநாட்டு மண்டபம், விமான நிலையத்துக்கான போக்குவரத்து, வாடகை கார் மற்றும் கடன் அட்டை வசதி போன்ற உன்னத சேவைகள்.

**No. 35, Frankfourt Place, Bambalapitiya, Colombo - 04**

T.P. : +94 11 2507161, +94 11 2507162, +94 11 2507163, +94 11 4518485
Fax : +94 11 4518481 E-mail : info@hotelwesteern.com
Website : www. hotelwesteern.com







இப்பத்திரிக்கை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2006, பெப்ரவரி 18 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org